வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959 | Reg. No. : P. 1632 | விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu வார மலர்

Email : news@eelanadu.lk | மலர் : 05 | 08.09.2024 ஞாயிற்றுக்கிழமை | இதழ் : 252 | பக்கங்கள் : 16



மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.
MoneyGram money transfer – மனிகிறாம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER – றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER – வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை

# தமிழ் சிவில் சமூக அமையமும் அரியநேத்திரனுக்கு முழுஆதரவு

## தமிழ் மக்கள் ஒற்றுமையுடன் வாக்களிக்க கோரிக்கை

யாழ்ப்பாணம், செப்ரெம்பர் 08

**2024 ஆம் ஆண்டுக்கான ஜனாதிபதித் தேர்தல் களம் சூடுபிடித் திருக்கும் நிலையில், சங்கு சின்னத்தில் தமிழ் மக்களின் இன்னல்கள் தீர்க்கப்பட வேண்டும் என்ற நோக்கில் தமிழ்த் தேசிய அரசியல் நிலைப் பாட்டில் உள்ள கட்சிகள் மற்றும் தமிழ் சிவில் அமைப்புக்கள் ஒற்றுமை யாக ஒன்றிணைந்து தமிழ்ப் பொதுக் கட்டமைப்பு என்ற அமைப்பொன்றை உருவாக்கித் தமிழ் பொது வேட்பாளராக அரியநேத்திரனை களமிறக் கியுள்ள நிலையில், அவருக்கு வாக்களிக்குமாறு தமிழ் சிவில் சமூக அமையமும் கோரிக்கை விடுத்துள்ளது.**


இதற்கமைய குறித்த கோரிக்கையை அறிக்கை ஒன்றின் மூலம் அது தெளிவுப்படுத்தியுள்ளது.

அந்த அறிக்கை வருமாறு:-

எதிர்வரும் 21 ஆம் திகதி இலங்கையில் நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் முதற் தடவையாக தமிழ்த் தேசிய அரசியல் நிலைப்பாட்டில் உள்ள கட்சிகள் மற்றும் தமிழ் சிவில் அமைப்புக்கள் ஒற்றுமையாக ஒன்றிணைந்து தமிழ்ப் பொதுக் கட்டமைப்பு என்ற அமைப்பொன்றை உருவாக்கித் தமிழ் மக்களின் அபிலாசைகளை வெளிப்படுத்துவதற்காக சங்குச் சின்னத்தில் பாக்கியசெல்வம் அரியநேத்திரனை தமிழ்ப் பொது வேட்பாளராக நிறுத்தியுள்ளோம்.

காலங்காலமாகச் சிங்களப் பேரினவாதத்தின் இனவழிப்பை எதிர்கொண்டு

15



ஆவணி சதுர்த்தி பெருவிழாவான நேற்று நல்லூர் வடக்கு சந்திரசேகரப் பிள்ளையார் ஆலயத்தில் சுவாமி வெளிவீதியுலா வந்த அருட்காட்சி...!

# அரியநேத்திரனுக்கு வாக்களித்த சீட்டை படமெடுத்த ஆசிரியர் கைது

முல்லைத்தீவு, செப். 08

வாக்குச்சீட்டில் தமிழ் பொது வேட்பாளர் பா.அரியநேத்திரனுக்கு புள்ளடியிட்ட பின்பு ஒளிப்படம் எடுத்த ஆசிரி யர் ஒருவர் முல்லைத்தீவில் நேற்று கைது செய்யப்பட்டார்.

தபால் மூல வாக்களிப்பின்போது நேற்று முன் தினம் புதுக்குடியிருப்பு பகுதியில் உள்ள ஒரு பாடசாலையில் கடமையாற்றும் ஆசிரியர் ஒருவர் வாக்குச்சீட்டைப் புள்ளடியிட்ட பின்னர் கைபேசி மூலம் படம் எடுத் துள்ளார். இதனை உடனடியாகவே தேர்தல் கடமையில் இருந்த அதிகாரிகள் கண்டு கொண்டதால் மேற்படி ஆசிரியர் நடவடிக்கைக்கு உட்படுத்தப்பட்டார்.

இதையடுத்து அந்த ஆசிரியர் தொடர்பில் முல்லைத்தீவு பொலிஸார் மற்றும் தேர்தல்கள்

15

# சஜித்துக்கு அளிக்கும் ஒவ்வொரு வாக்கும் புதிய விகாரைகளுக்கான அடிக்கற்களாகும்

## திருமலையில் தமிழ்ப் பொது வேட்பாளர் அரியநேத்திரன்

திருகோணமலை செப். 08

சஜித் பிரேமதாஸவுக்கு தமிழ் மக்கள் அளிக்கும் ஒவ்வொரு வாக்குகளும் வடக்கு - கிழக்கில் புதிய விகாரைகளை நிறுவுவதற்கான அடிக்கற்களாகும் என்பதை மறந்துவிடாதீர்கள் என்று தமிழ் பொது வேட்பாளர் பா. அரியநேத்திரன் தெரிவித்திருக்கின்றார்.

திருகோணமலை பூநகர் கிராமத்தில் நடைபெற்ற மக்கள் சநதிப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்திருக்கின்றார்.

பொலிகண்டி தொடக்கம் பொத்துவில் பிரச்சாரத்தின் கீழ், பா. அரியநேத்திரன் திருகோணமலையில் இரு நாள் பிரசார நடவடிக்கைளில் ஈடுபட்டிருந்தார்.

தமிழ்த் தேசிய பொதுக் கட்டமைப்பின் ஏற்பாட்டில் பல்வேறு மக்கள் சந்திப்புகள் திருகோணமலையில் நடைபெற்றிருந்தது. இரு நாள் பிரசார நடவடிக்கைகளின் இறுதி மக்கள் சந்திப்பு, அரசியல் ஆய்வாளர் யதீந்திராவின் தலைமையில், திருகோணமலை வெருகல் பிரதேசத்தில்

15

# வடக்கு மக்களை அச்சுறுத்திய அநுர மன்னிப்பு கோரவேண்டும்

## யாழில் ரணில் விக்கிரமசிங்க கோரிக்கை



யாழ்ப்பாணம், செப். 08

தென்னிலங்கை மக்களின் ஆதரவு தமக்கு உள்ளது. ஆகவே நீங்களும் பங்குதாரர்களாக வேண்டும் என்றால் எமக்கு வாக்களியுங்கள் என அச்சுறுத்தும் பாங்கில் அனுரகுமார யாழ் மக்களுக்கு தெரிவித்துள்ளார். மக்கள் விடுதலை முன்னணியின் பாங்கு இதன் ஊடாக வெளிப்பட்டுள்ளது. ஆகவே தேசிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் அநுரகுமார யாழ் மற்றும் வடக்கு மக்களிடம் மன்னிப்பு கோரவேண்டும் என சுயேச்சை ஜனாதிபதி வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்க கோரியுள்ளார்.

யாழ்பாணத்தில் நேற்று இடம்பெற்ற தேர்தல் பிரசார கூட்டத்தின்போதே அவர் இதனை தெரிவித்தார்.

நல்லூர் சங்கிலியன் பூங்காவில் ஜனாதிபதி வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்கவின் தேர்தல் பரப்புரை கூட்டம் நடைபெற்றது. முன்னாள் கல்வி இராஜாங்க அமைச்சரும் ஐக்கிய தேசிய கட்சியின் யாழ் மாவட்ட அமைப்பாளருமான விஜயகலா மகேஸ்வரனின் ஏற்பாட்டில் இந்த பரப்புரை கூட்டம் நடைபெற்றது.

அதில் உரையாற்றிய ரணில் விக்கிரமசிங்க மேலும் தெரிவிக்கையில்-

15

# 14 இந்திய மீனவர்கள் நேற்று கைது!

யாழ்ப்பாணம், செப். 08

நெடுந்தீவை அண்மித்த இலங்கை கடற்பரப்பில் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்ட 14 இந்திய மீனவர்களை நேற்று மாலை இலங்கை கடற்படையினர் கைது செய்துள்ளனர்.

இலங்கை கடற்படையினர் முன்னெடுத்த சோதனையின்போது, அவர்கள் நெடுந்தீவை அண்மித்த கடற்பகுதியில் மீன்பிடியில் ஈடுபட்டிருந்த சந்தர்ப்பத்திலேயே கைது செய்யப்பட்டுள்ளதாக கடற்படை பேச்சாளர் கப்டன் கயான் விக்ரமசூரிய தெரிவித்தார்.

இதன்போது அவர்கள்

15

# ரணிலின் தேர்தல் பிரசாரத்துக்கு சிறிகொத்தவில் ஆதரவு இல்லை!

கொழும்பு, செப். 08

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தேர்தல் பிரசாரத்துக்கு ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்து போதியளவான ஆதரவு கிடைக்கவில்லை என இராஜாங்க அமைச்சர் அருந்திக பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

"ரணிலின் பிரசாரங்களுக்கு கட்சியின் தலைமையகமான சிறிகொத்தவிலிருந்து எதிர்பார்த்த ஆதரவு கிடைக்கவில்லை. ஐக்கிய தேசியக் கட்சியின் சில

15

# வாக்குச்சீட்டு அச்சிடும் பணிகள் 50 வீதம் நிறைவு

கொழும்பு, செப். 08

ஜனாதிபதித் தேர்தலுக்கான உத்தியோகப்பூர்வ வாக்குச்சீட்டுகளை அச்சிடும் பணிகள் 50 வீதம் வரை நிறைவடைந்துள்ளன என்று அரச அச்சகம் தெரிவித்துள்ளது.

அச்சிடப்பட்டுள்ள வாக்குச்சீட்டுகள் தேர்தல் ஆணைக் குழுவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன என்று சிரேஷ்ட அதிகாரியொருவர் கூறியுள்ளார்.

உத்தியோகப்பூர்வ வாக்குச்சீட்டுகளை அச்சிடும் பணிகளை அடுத்த வாரத்திற்குள் நிறைவு

15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொய் அறிக்கை வெளியீடு

# வசந்தவிடம் ரூ. 500 மில்லியன் இழப்பீடு கோரினார் மனுஷ!

கொழும்பு, செப். 08

**வெளிநாட்டு வேலைகளுக்கு தொழிலாளர்களை அனுப்ப பணம் பெற்றதாக ஆதாரமற்ற பொய் அறிக்கைகளை வெளியிட்ட மக்கள் விடுதலை முன்னணியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் வசந்த சமரசிங்கவுக்கு எதிராக தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு முன்னாள் அமைச்சர் மனுஷ நாணயக்கார 500 மில்லியன் ரூபாய் நட்டஈடு கோரி கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார்.**

இஸ்ரேல் மற்றும் தென்கொரியா ஆகிய நாடுகளுக்கு வேலைகளுக்கு தொழிலாளர்களை அனுப்புவதற்காக கையொப்பமிடுவதற்கு மனுஷ நாணயக்கார பணம் பெற்றுக்கொள்வதாக வசந்த சமரசிங்க முன்வைத்த கருத்துக்கள், முற்றிலும் பொய்யானது என அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அமைச்சராக மனுஷ நாணயக்கார பொறுப்பில் இருந்த போது அதிகளவானோர் வெளிநாட்டு வேலைவாய்ப்புக்காக அனுப்பப்பட்டதாகவும், அவர்களது குடும்ப உறுப்பினர்கள் மத்தியில் வெறுப்புணர்வை ஏற்படுத்தவே இந்த அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.



பொய்யான அறிக்கைகளை வெளியிட்டு அவதூறு ஏற்படுத்திய குற்றச்சாட்டில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் வசந்த சமரசிங்கவிடம் 500 மில்லியன் ரூபாய் நட்டஈடு கோரப்பட்டுள்ளதாகவும், 14 நாட்களுக்குள் நட்டஈடு தொகையை வழங்காவிடின் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யவுள்ளதாகவும் அந்த கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (எ)

# பெண்ணை பலாத்காரமாக காரில் ஏற்ற முயன்ற தேரர்

இத்தாலி பெண்ணுக்கு இலங்கையில் துயரம்

அநுராதபுரம், செப். 08

இத்தாலிப் பெண்ணை பலாத்காரமாக காரில் ஏற்ற முயன்ற தேரர் ஒருவர் மீது அநுராதபுரம் தலைமையக பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

குறித்த இத்தாலிப் பெண் நேற்று முன்தினம் அநுராதபுரம் பிரதேசத்தில் உள்ள ருவன் வெலிசாய விகாரைக்குச் சென்றுள்ளார்.

இதன்போது, அங்கிருந்த தேரர் இத்தாலிப் பெண்ணிடம் சென்று பேச்சுகள் நடத்தியுள்ள நிலையில் இத்தாலிப் பெண்ணின் வட்ஸ்அப் இலக்கத்தைப் பெற்றுக்கொண்டு அங்கிருந்த சென்றுள்ளார்.


பின்னர், சிறுது நேரம் கழித்து குறித்த தேரர் இத்தாலிப் பெண்ணின் வட்ஸ்அப் இலக்கத்துக்கு தொடர்பு கொண்டு தன்னை சந்திப்பதற்கு வருமாறு கூறியுள்ளார்.

இதற்கு மறுப்புத் தெரிவித்த இத்தாலிப் பெண் தனது ஹோட்டல் நோக்கி நடந்து சென்று கொண்டிருக்கும் போது காரில் வந்த தேரர் அந்தப் பெண்ணை காரில் ஏறுமாறு வற்புறுத்தியுள்ளார்.

இதன்போது, காரின் சாரதியும் காரில் ஏறுமாறு அச்சுறுத்திய நிலையில், இத்தாலிய பெண் அருகில் இருந்த கடை ஒன்றுக்குள் தப்பிச் சென்றுள்ளார்.

இதனையடுத்து, பாதிக்கப்பட்ட இத்தாலிய பெண் இது தொடர்பில் அநுராதபுரம் தலைமையக பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை அநுராதபுரம் தலைமையக பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (எ)



# மன்னாரில் மருந்து கூட்டுத்தாபனம் ஸ்தாபிக்க முதல் கட்ட நடவடிக்கை

மன்னார், செப். 08

இலங்கை அரச மருந்துக் கூட்டுத்தாபனத்தின் மன்னார் மாவட்டத்துக்கான கிளையை ஸ்தாபிப்பதற்கான முதல் கட்ட நடவடிக்கை வெள்ளிக்கிழமை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

மன்னார் மாவட்டத்தில் உள்ள தனியார் மருந்தகங்களில் மருந்துகள் அதிக விலையில் விற்பனை செய்யப்பட்டு வருகின்றமை தொடர்பில் மக்களால் முன்வைக்கப்பட்ட முறைப்பாட்டின் அடிப்படையில் பாராளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதனின் கோரிக்கைக்கு அமைவாக அரச மருந்துக் கூட்டுத்தாபனத்தின் கிளையை மன்னாரில் ஆரம்பிப்பதற்கான காணி வெள்ளிக்கிழமை அடையாளப்படுத்தப் பட்டுள்ளது.

மன்னார் நகரப் பகுதியில் பொதுமக்கள் மிகக் குறைந்த விலையில் மருந்துகளைப் பெற்றுக்கொள்ளும் வகையில் மாவட்ட செயலக வளாகத்தில் குறித்த கிளை ஆரம்பிக்கப்படவுள்ளது.

குறித்த காணியை அளவிட்டு அடையாளப்படுத்தும் முகமாக 'ஒசுசல அதிகாரிகள் மற்றும் மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் க. கனகேஸ்வரன், மன்னார் பிரதேச செயலாளர் எம். பிரதீப், மன்னார் மருத்துவமனை பணிப்பாளர் அசாத் எம். ஹனிபா, மன்னார் நகர சபை செயலாளர் எக்ஸ். எல். பிரிட்டோ உள்ளிட்ட குழுவினர் கலந்து கொண்டு காணி அடையாளப்படுத்தல் நடவடிக்கையில் ஈடுபட்டனர். (எ)

# காட்டிலிருந்து பெருந்தொகை போதை மாத்திரைகள் மீட்பு!

புத்தளம், செப். 08

புத்தளம் - சேரக்குளி கடற்பிரதேசத்தின் காட்டுப் பகுதியில் பெருந்தொகை போதை மாத்திரைகள் நேற்று முன்தினம் கடற்படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

வடமத்திய மற்றும் வடமேற்கு கடற்படை கட்டளையின் தம்பபண்ணி, கஜபா ஆகிய கடற்படையினர் குறித்த கடற்பிரதேசத்தில் உள்ள காட்டுப் பகுதியில் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

இதன்போது, குறித்த காட்டுப் பகுதியில் சந்தேகத்துக்கிடமான முறையில் காணப்பட்ட இரண்டு கார்ட்போர்ட் பெட்டிகளை கைப்பற்றிய கடற்படையினர் அதனைச் சோதனை செய்தனர்.

அப்போது, இரண்டு பெட்டிகளிலும் 35 ஆயிரத்து 470 போதை மாத்திரைகள் இருந்தமை கண்டறியப்பட்டுள்ளது.

குறித்த போதை மாத்திரைகள் சட்டவிரோதமான முறையில் கடல்மார்க்கமாக எடுத்து வரப்பட்டு, இலங்கையின் பல்வேறு பகுதிகளிலும் விற்பனை செய்யும் நோக்கில் மறைத்து வைக்கப்பட்டிருக்கலாம் எனவும் கடற்படையினரின் கெடுபிடிகளால் போதை மாத்திரைகள் அடங்கிய பெட்டிகளை காட்டுப் பகுதியில் கைவிட்டு தப்பிச் சென்றிருக்கலாம் எனவும் தாம் சந்தேகிப்பதாக கடற்படையினர் குறிப்பிட்டனர்.

இவ்வாறு கடற்படையினரால் கைப்பற்றப்பட்ட 35 ஆயிரத்து 470 போதை மாத்திரைகளை மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக தமது பொறுப்பில் வைத்திருப்பதாகவும் கடற்படையினர் கூறினர்.

இதேவேளை, இந்த வருடம் செப்ரெம்பர் 6 ஆம் திகதி வரை முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பின் போது சட்டவிரோதமான முறையில் இலங்கைக்கு கொண்டுவரப்பட்டதாக சந்தேகிக்கப்படும் ஒரு இலட்சத்து 36 ஆயிரத்து 798 போதை மாத்திரைகள் கைப்பற்றப்பட்டுள்ளதாகவும் கடற்படையினர் மேலும் குறிப்பிட்டனர். (எ)

# லொறி - வான் விபத்து இந்திய வர்த்தகர் பலி!

பொலநறுவை, செப். 08

பொலநறுவை, ஜயந்திபுர பிரதேசத்தில் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற விபத்தில் இந்திய வர்த்தகர் ஒருவர் உயிரிழந்துடன் ஏழு பேர் காயமடைந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

பொலநறுவையிலிருந்து மின்னேரியா நோக்கிப் பயணித்த வான் ஒன்று வீதியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த லொறி ஒன்றுடன் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றது.

விபத்தின் போது வானில் பயணித்த இந்திய பிரஜை ஒருவர் உயிரிழந்ததுடன் சாரதி உட்பட ஏழு பேர் காயமடைந்து பொலநறுவை பொது மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர்.

வர்த்தக நடவடிக்கைகளுக்காக இந்தியாவிலிருந்து இலங்கைக்கு வருகை தந்திருந்த வர்த்தகர்கள் சிலரே இவ்வாறு காயமடைந்துள்ளனர்.

இதனையடுத்து, லொறியின் சாரதி கைது செய்யப்பட்ட நிலையில் பொலநறுவை நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப் படுத்தப்பட்டார்.

இந்த விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (எ)

# சாரதி சுகவீனமுற்றதால் தனியார் பேருந்து விபத்து

வவுனியாவில் 13 பேர் காயம்

வவுனியா, செப். 08

வவுனியாவில் உள்ள விற்பனை நிலையம் ஒன்றில் பணிபுரியும் ஊழியர்களை ஏற்றிச் சென்ற தனியார் பேருந்து ஒன்று சாரதியின் கட்டுப்பாட்டை இழந்து மதவாச்சி பிரதேசத்தில் உள்ள வீடொன்றுடன் இருந்த வாகன திருத்தகத்துடன் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளதாக மதவாச்சி பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்து வெள்ளிக்கிழமை காலை இடம்பெற்றது.

பேருந்து சாரதிக்கு ஏற்பட்ட திடீர் சுகயீனம் காரணமாக இந்த விபத்து இடம்பெற்றதாக பொலிஸார் கூறினர்.

விபத்தின் போது, பேருந்தில் 40இற்கும் மேற்பட்ட ஊழியர்கள் பயணித்த நிலையில் அவர்களில் 13 பேர் காயமடைந்துள்ளனர்.

காயமடைந்தவர்களில் 06 பேர் மதவாச்சி மருத்துவமனையிலும் 07 பேர் அநுராதபுரம் போதனா மருத்துவமனையிலும் சேர்க்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பில் மேலதிக விசாரணைகளை மதவாச்சி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (எ)

# வெடிபொருட்களுடன் இருவர் கைதாகினர்!

தம்புள்ளை, செப். 08

தம்புள்ளை நகரத்தில் வெடிபொருட்களுடன் இரண்டு சந்தேக நபர்கள் வெள்ளிக்கிழமை மாலை கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் இந்த நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இரத்தினபுரி மற்றும் பிலியந்தலை ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த 29 மற்றும் 43 வயதுடைய இரண்டு நபர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேக நபர்களிடமிருந்து டைனமெட் வெடிமருந்து ஒன்று, 500 கிராம் அமோனியம் மற்றும் 15 டெட்டனேட்டர்கள் என்பன கைப்பற்றப்பட்டுள்ளன.

இது தொடர்பில் மேலதிக விசாரணைகளை தம்புள்ளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராணுவம் கொண்டு சென்ற 158 பேருக்கும் நடந்தது என்ன?

## நீதி கோரி தொடரும் போராட்டம்

வந்தாறுமூலை, செப். 08

**கிழக்குப் பல்கலைக்கழகத்தில் தஞ்சமடைந்த வேளை இராணுவத்தினரால் விசாரணைக்கு என கொண்டு சென்று காணாமல் ஆக்கப்பட்ட 158 பேருக்கும் நீதி கோரி போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.**

1990ஆம் ஆண்டு செப்ரெம்பர் 5ஆம் திகதி கிழக்குப் பல்கலைக் கழக முகாமில் தஞ்சமடைந்தவர்களில் 158 பேர் விசாரணைக்கு என அழைத்துச் செல்லப்பட்டு காணாமல் ஆக்கப்பட்டனர். இவர்கள் காணாமல் ஆக்கப்பட்டாலும் இப்போது உயிருடன் இருப்பார்களா? என்ற நம்பிக்கை இழந்த நிலையில் மட்டக்களப்பு மாவட்டத்தில் படுகொலை செய்யப்பட்டவர்களின் பட்டியலில் இடம்பெறுகின்றனர்.

இந்த நிலையில் வந்தாறுமூலை பல்கலைக்கழக வளாக முன்றிலில் கிழக்குப் பல்கலைக் கழக கலை கலாசார பீட மாணவர் ஒன்றியம் மற்றும் மட்டக்களப்பு வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கம் இணைந்து ஏற்பாடு செய்த நினைவேந்தலில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள், மாணவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

இதன்போது, பல்கலைக்கழக வளாகத்தின் முன் பதாகைகளை ஏந்தியவாறு தமது உறவுகளுக்கு நீதி கோரி கவனவீர்ப்புப் பேராட்டத்தில் ஈடுபட்டதுடன் உறவுகள் மற்றும் மாணவர்கள் காணாமல் ஆக்கப்பட்டவர்களை நினைவுகூர்ந்து மெழுகு வர்த்தி ஏற்றி அஞ்சலியும் செலுத்தினர்.

1990 -09- 05 அன்று அகதி முகாமுக்குள் நுழைந்த இராணுவம் தங்களை அறிமுகப்படுத்தி பின்னர் ஒலிபெருக்கி மூலம் குறிப்பிட்ட வயதுடையவர்களை கிழக்குப் பல்கலைக்கழக மைதானத்தில் ஒன்றுகூடுமாறு அறிவித்தல் விடுத்தனர்.

மைதானத்தில் வரிசையில் நிறுத்தப்பட்டவர்கள் இராணுவத்தினரால் அழைத்துவரப்பட்ட முகமூடி அணிந்த நபர்கள் முன் நிறுத்தப்பட்டு தலையாட்டப்பட்டவர்கள் தனிமைப் படுத்தப்பட்டு பேருந்தில் கொண்டு செல்லப்பட்டதாக இந்தச் சம்பவத்தை வருடங்கள் 34 கடந்தும் தங்கள் அனுபவ ரீதியாக பலரும் நினைவுகூர்ந்தனர்.

இது தொடர்பில் மட்டக்களப்பு சமாதான குழு, பாதுகாப்பு அமைச்சு உட்பட பல்வேறு தரப்பினரிடமும் முறைப்பாடு செய்தது.

செப்ரெம்பர் 5ஆம் திகதி 32 பேரை மட்டுமே விசாரணைக்காக கைது செய்து அழைத்துச் சென்றதாகவும் 24 மணி நேரத்துக்குள் அவர்கள் அனைவரும் விடுதலை செய்யப்பட்டு விட்டார்கள் என அந்த வேளை பாதுகாப்பு அமைச்சின் செயலாளராக பதவி வகித்த எயார் மார்சல் பெர்னாண்டோ பதில் அனுப்பியிருந்தார். இந்தப் பதிலை மட்டக்களப்பு சமாதானக் குழு நிராகரித்தது.

விசாரணைக்கென அழைத்துச் செல்லப்பட்டு மூன்றாம் நாள் செப்ரெம்பர் 8ஆம் திகதி கிழக்குப் பல்கலைக்கழக அகதி முகாமுக்கு சென்று சம்பவம் தொடர்பில் ஆராய்வதற்காக கிழக்கு மாகாண இராணுவத் தளபதியாக இருந்த ஜெரி சில்வா உள்ளிட்ட பாதுகாப்பு உயர்மட்டக் குழுவினரும் சென்றிருந்தனர்.

இராணுவத்தினரே எமது உறவுகளை அழைத்துச் சென்றதாக மக்களும் முகாம் பொறுப்பாளர்களும் இராணுவ உயர் அதிகாரிகளின் கவனத்துக்குக் கொண்டுவந்த வேளை கடும் தொனியில் இராணுவ அதிகாரிகள் பதிலளித்ததாக கூறப்படுகிறது.

வடக்கு - கிழக்கு மாகாணங்களில் காணாமல் போனவர்களின் விசாரணைக்காக ஓய்வு பெற்ற மேல்நீதிமன்ற நீதிபதி கு. பாலகிட்ணர் தலைமையில் ஜனாதிபதி ஆணைக்குழுவொன்று நியமிக்கப்பட்டது. இந்த ஆணைக்குழு முன்னிலையில் பலர் சாட்சியமளித்தனர்.

ஓய்வுபெற்ற மேல்நீதிமன்ற நீதிபதி கு. பாலகிட்ணர் தலைமையில் ஜனாதிபதி ஆணைக் குழு அறிக்கையில் பொதுமக்கள் வழங்கிய சாட்சிகளின் அடிப்படையில் இராணுவத்தினரே செப்ரெம்பர் 5ஆம் திகதி 158 பேரையும், 23ஆம் திகதி 16 பேரையும் கைது செய்து கொண்டு சென்றனர் என தெரிவித்திருந்தது.

எனினும் இதுவரையில் இவர்களுக்கான நீதியைப் பெற்றுக்கொடுக்க முடியாத நிலையில் 34ஆவது வருடமாக உறவுகள் போராடி வருகின்றனர். (எ)



# ஐரோப்பிய ஒன்றியத்தின் தேர்தல் கண்காணிப்பு குழு கல்முனையில்

கல்முனை, செப். 08

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலை முன்னிட்டு ஐரோப்பிய ஒன்றியத்தின் தேர்தல் கண்காணிப்பு குழுவினர் நாடளாவிய ரீதியில் தேர்தல் முகவர்களைச் சந்தித்து வருகின்றனர்.

அந்த வகையில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை கல்முனைக்கு சென்றனர்.

அங்கு முன்னாள் கிழக்கு மாகாண சபை உறுப்பினர் மு. ராஜேஸ்வரனின் அலுவலகத்துக்கு சென்று அவருடன் சந்திப்பில் ஈடுபட்டனர்.

இதன்போது, ஐரோப்பிய ஒன்றியத்தின் தேர்தல் கண்காணிப்புக் குழுவினர், அம்பாறை மாவட்ட தமிழ்ப் பிரதேச தேர்தல் நடவடிக்கைகள் தொடர்பில் விரிவாக கேட்டறிந்தனர்.

ஐரோப்பிய ஒன்றியத்தின் தேர்தல் கண்காணிப்புக் குழு சார்பில் சிசிலியா கீவேனி, ஒய்விண்ட் சீம் ஆகியோர் தலைமையில் கல்முனையில் இந்தச் சந்திப்புகள் நடைபெற்று வருகின்றன. (எ)

# ஐஸ் போதைப்பொருளுடன் கொழும்பில் மூவர் கைது

கொழும்பு, செப். 08

கொழும்பு கிராண்ட்பாஸ், மட்டக்குளி மற்றும் வெல்லம்பிட்டி ஆகிய பிரதேசங்களில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் ஐஸ் போதைப்பொருளுடன் மூன்று சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக கொழும்பு பொலிஸ் குற்றத் தடுப்புப் பிரிவினர் தெரிவித்தனர்.

கொழும்பு பொலிஸ் குற்றத் தடுப்புப் பிரிவினருக்குக் கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் இந்த சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

25 முதல் 32 வயதுக்குட்பட்ட மூவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்களில் ஒருவரிடம் இருந்து 25 கிராம் 560 மில்லி கிராம் ஐஸ் போதைப் பொருளும் மற்றைய இருவரிடமிருந்தும் 11 கிராம் 09 மில்லி கிராம் ஐஸ் போதைப்பொருள் மற்றும் 11 கிராம் 380 மில்லி கிராம் ஐஸ் போதைப்பொருளும் கைப்பற்றப்பட்டுள்ளன.

இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கொழும்பு பொலிஸ் குற்றத் தடுப்புப் பிரிவினர் மேற்கொண்டு வருகின்றனர். (எ)

# திடீரென தீப்பிடித்த மூன்று வாகனங்கள்

கொழும்பு, செப். 08

பாதுக்க, மாஹிங்கல பிரதேசத்தில் உள்ள வீடொன்றில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த வான், கப் வாகனம் மற்றும் ஓட்டோ என்பன திடீரென தீப்பிடித்து எரிந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

ஹொரணை நகர சபையின் தீயணைப்புப் பிரிவினர் இணைந்து தீயை அணைக்க முயற்சித்துள்ளதாகவும், அதற்குள் மூன்று வாகனங்களும் தீயில் எரிந்து நாசமாகியிருந்ததாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த வீட்டை சுற்றியுள்ள காணி பகுதிக்குள் வெளிநபர்கள் எவரும் நுழைய முடியாது எனவும், இந்த வாகனங்களுக்கு யாராவது தீ வைத்தனரா? அல்லது ஒரு வாகனம் தீப்பிடித்து மற்ற வாகனங்களுக்கும் தீ பரவியதா? என்பது தொடர்பில் இதுவரை எந்தத் தகவல்களும் கண்டறியப்படவில்லை எனவும் பொலிஸார் கூறினர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பாதுக்கை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (எ)



# பாரிசவாத விழிப்பூட்டல் செயலமர்வு





யாழ்ப்பாணம், செப். 08

உலக பாரிசவாத தினத்தை முன்னிட்டு யாழ். நீரிழிவுக் கழகத்தினர், திருக்குடும்ப கன்னியர் மடம் கல்லூரியில் பாரிசவாத விழிப்பூட்டல் செயலமர்வினை நடத்தினர். இதில், பாரிசவாதம் நோய் வராது தடுப்பது எப்படி? என்பதனையும் பாரிசவாதத்தை குணப்படுத்துவது தொடர்பாக உலக சுகாதார பாரிசவாத விழிப்பூட்டல் செயல்பாட்டாளர், மருத்துவர் அஜந்தா கேசவராஜ் விரிவுரையாற்றினார்.

இந்தச் செயலமர்வுக்கு நீரிழிவுக் கழகத் தலைவர் மைக்கல் தலைமை வகித்தார். இதில் ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் நீரிழிவுக் கழகத்தினர் பங்குபற்றினர். (எ)

# யானை தாக்கி யாசகர் பலி கல்முனை நகரில் சம்பவம்

கல்முனை, செப். 08

கல்முனை மாநகரில் காட்டு யானை தாக்கியதில் யாசகர் ஒருவர் பரிதாபகரமாக பலியானார்.

இச்சம்பவம் நேற்றுச் சனிக்கிழமை அதிகாலை கல்முனை மாநகரில் இடம்பெற்றது.

கல்முனை மாநகர பேருந்து தரிப்பிட நிலையத்துக்குப் பின்னால் உள்ள வயல் வீதியில் இச்சம்பவம் இடம்பெற்றது.

பேருந்து நிலையத்தில் வழமையாக யாசகம் எடுக்கும் அவர் நேற்று அதிகாலை அந்த வீதியால் செல்லும் போது யானை தாக்குதலில் பலியானார்.


இது தொடர்பில் கல்முனை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

70 வயதுடைய செல்லையா வேலாயுதம் என்பவரே யானை தாக்கி பலியானார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டுக்கு ஒளியேற்றிய தலைவர் ரணிலுக்கு ஆதரவாக கவனவீர்ப்பு

## தடுத்து நிறுத்திய முல்லை. பொலிஸார்



முல்லைத்தீவு, செப். 08

**ஜனாதிபதி வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவாக முல்லைத்தீவில் நடைபெறவிருந்த தீப்பந்த கவனவீர்ப்பு நடவடிக்கை பொலிஸாரால் தடுத்து நிறுத்தப்பட்டது.**

"இருளிலிருந்த நாட்டை மீட்டு ஒளியேற்றிய தலைவர்" எனும் தொனிப் பொருளில் நேற்று முன்தினம் மாலை 06. 30 மணிக்கு தீப்பந்தம் தாங்கி ஆதரவு தெரிவிக்கும் கவன வீர்ப்பு நடைபெறவிருந்த வேளையில் தேர்தல் அதிகாரி மற்றும் பொலிஸாரால் இந்தக் கவனவீர்ப்பு நடவடிக்கை தடுத்து நிறுத்தப்பட்டது.

ஜனாதிபதி வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவாக முல்லைத்தீவில் தீப்பந்தங்கள் தாங்கியவாறு முல்லைத்தீவு சுற்றுவட்டத்துக்கு அருகில் நடைபெறவிருந்த கவனவீர்ப்புக்கு ஏற்பாடுகள் செய்வதற்காக ஜனாதிபதி வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்கவின் முல்லைத்தீவு மாவட்ட தேர்தல் பரப்புரை அலுவலகத்துக்கு முன்னால் சுமார் 25 இற்கும் மேற்பட்ட ஆதரவாளர்கள் ஒன்றுகூடியிருந்த வேளையில் முல்லைத்தீவு தேர்தல் அதிகாரிகள் மற்றும் பொலிஸார் வருகைதந்து கவனவீர்ப்பு நடவடிக்கை தடுத்து நிறுத்தப்பட்டது.

குறித்த கவனவீர்ப்பு நடவடிக்கையானது தேர்தல் விதிமுறையை மீறிய செயல் எனவும் அவ்வாறு கவனவீர்ப்பு மேற்கொள்ளப்படுமாயின் கைது செய்யப்படுவீர்கள் எனவும் பொலிஸாரால் எச்சரிக்கப்பட்டதை தொடர்ந்து கவனவீர்ப்பு நடவடிக்கை நிறுத்தப்பட்டது. (எ)



# கிளிநொச்சியில் கடும் வறட்சி தென்னை செய்கை பாதிப்பு

கிளிநொச்சி, செப். 08

நிலவும் கடும் வறட்சி காரணமாக கிளிநொச்சி மாவட்டத்தில் தென்னைச் செய்கையாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

கிளிநொச்சி மாவட்டத்தின் கரைச்சி பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள பாரதிபுரம் மற்றும் கண்டாவளை பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள பல பகுதிகளில் தென்னை செய்கையாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அத்துடன் கடும் வறட்சியால் வாழை, கமுகு உள்ளிட்ட பல பயிர்கள் அழிவடைந்து வரும் நிலை காணப்படுவதாக செய்கையாளர்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

தற்பொழுது நாட்டில் தேங்காய்க்கு பெரும் கேள்வி நிலவிவரும் நிலையில், தென்னைச் செய்கை மேற்கொள்ளப்பட்டு எட்டு வருடம் 9 வருடம் கடந்த நிலையில் பயன்தரக் கூடிய நிலையில் இருந்த தென்னைகள் அழிவடைந்து வருவதாக விவசாயிகள் கூறினர்.

இதேபோன்று, வாழைச் செய்கையிலும் வறட்சியால் பாதிப்பு ஏற்பட்டுள்ளதோடு கமுகு போன்றவையும் அழிவடையும் நிலையில் காணப்படுவதாவும் பாதிக்கப்பட்ட விவசாயிகள் தெரிவித்தனர். (எ)

# 40 ரூபாய்க்கு முட்டை

கொழும்பு, செப். 08

இந்தியாவில் இருந்து 3 மில்லியன் முட்டைகள் இறக்குமதி செய்யப்பட்டுள்ளன என்றும் இவ்வாறு இறக்குமதி செய்யப்பட்ட முட்டையை 40 ரூபாய்க்கு விற்பனை செய்ய முடியும் என்றும் இலங்கை அரச வர்த்தக பல்நோக்கு கூட்டுத்தாபனத்தின் தலைவர் கூறினார். முட்டை கொள்முதல் பணிகள் நிறைவடைந்து, முட்டை இறக்குமதிக்கான விண்ணப்பங்கள், கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் துறையின் ஒப்புதலுக்கு அனுப்பப்பட்டுள்ளன என்றும் அவர் குறிப்பிட்டார். (எ)

# ஜனாதிபதி வேட்பாளர்மீது தாக்குதல்!

## தீவிர விசாரணையில் இறங்கியது குற்றப் புலனாய்வுத் திணைக்களம்

கொழும்பு, செப். 08

ஜனாதிபதி வேட்பாளர் ஒருவர்மீது தாக்குதல் நடத்தப்படவுள்ளதாக வெளியான தகவல் தொடர்பில் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக குற்றப் புலனாய்வுத் திணைக்களம், கொழும்பு நீதிவான் நீதிமன்றுக்கு அறிவித்துள்ளது.

கொழும்பு பிரதான நீதிவான் திலின கமகேவின் உத்தியோகபூர்வ அலுவலகத்தில் இந்த விடயங்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன.

இது தொடர்பில் கடந்த 2ஆம் திகதி கொழும்பு நீதிவான் அலுவலகத்தில் மிகவும் இரகசிய அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது.

கண்டி பிரதேசத்தில் வசிக்கும் முன்னாள் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் வழங்கிய தகவலின் அடிப்படையில் விசாரணைகள் நடைபெற்று வருவதாகவும், அந்த அதிகாரியிடம் வாக்குமூலம் பதிவு செய்து மேலதிக விசாரணைகளை மேற்கொள்வதாகவும் பொலிஸார் நீதிவானிடம் குறிப்பிட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதன்படி, மேலதிக விசாரணைகளை மேற்கொள்ளுமாறு பொலிஸாருக்கு அறிவித்துள்ள நீதிவான், சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர்களை கைது செய்து முன்னிலைப்படுத்துமாறும் அறிவித்துள்ளார். (எ)

# இலங்கையின் உத்தியோகபூர்வ சொத்துகள் 5. 3 வீதமாக உயர்வு

கொழும்பு, செப். 08

கடந்த ஓகஸ்ட் மாதத்தில் இலங்கையின் உத்தியோகபூர்வ கையிருப்பு சொத்துகள் 5. 3 வீதமாக அதிகரித்து 5, 954 மில்லியன் அமெரிக்க டொலர்களாக பதிவாகியுள்ளதாக இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

கடந்த 2024 ஜூலை மாதம் இலங்கையின் உத்தியோகபூர்வ கையிருப்பு சொத்துக்கள் 5, 652 மில்லியன் அமெரிக்க டொலர்களாக பதிவாகியிருந்தன.

நிதிப் பரிமாற்ற ஒப்பந்தத்தின் கீழ் சீனா வழங்கிய 1. 4 பில்லியன் டொலர்களும் இதில் உள்ளடங்குவதாக இலங்கை மத்திய வங்கி மேலும் தெரிவித்துள்ளது. (எ)

# 10, 000 ரூபாய்காக மூதாட்டி கொலை

## சந்தேகநபருக்கு மறியல்

கொழும்பு, செப். 08

10, 000 ரூபாய் பணம் கேட்டு அதனைத் தரமறுத்த 80 வயது மூதாட்டியின் கழுத்தை மிதித்து மூச்சு திணறடித்து கொலை செய்த சந்தேக நபரை எதிர்வரும் 19 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு ஹோமாகம நீதிவான் ரஜீந்திரா ஜயசூரிய உத்தரவிட்டுள்ளார்.

சந்தேகநபர் ஓட்டோவில் இருந்து இறங்கி பெண்ணின் வீட்டுக்கு செல்வது மற்றும் குறித்த பெண்ணிடம் இருந்து கழற்றிச் சென்ற காதணிகளை செட்டித் தெருவில் உள்ள கடையொன்றில் விற்பனை செய்தமை சி. சி. ரிவி கமராவில் பதிவாகியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேக நபர் கொலை செய்த பெண்ணின் மகளின் கணவருக்குச் சொந்தமான கட்டடப் பொருட்கள் நிறுவனத்தில் பணி புரிபவர் என்றும் தெரியவந்துள்ளது.

இவர் வீட்டுக்குச் செல்வதாகக் கூறி விடுமுறை பெற்று, வீட்டில் யாரும் இல்லாத நேரத்தில் கொட்டாவ மாலபே வீதியின் நான்கு வழிச் சந்திக்கு அருகில் உள்ள வீட்டுக்கு வந்து அங்கிருந்த பெண்ணிடம் 10, 000 ரூபாய் பணம் கேட்டுள்ளார்.

பணத்தை தராததால் கோபமுன்ற நபர், அந்தப் பெண்ணின் காதணிகளை கழற்ற முயன்றுள்ளார்.

இதன்போது, சந்தேகநபர் பெண்ணை தரையில் வீழ்த்தி பெண்ணின் கழுத்தை காலால் மிதித்து அவர் அணிந்திருந்த காதணிகளை கழற்றி செட்டித் தெருவில் உள்ள நகைக்கடையில் விற்றுவிட்டு 5 ஆயிரம் ரூபாயுடன் வீட்டுக்குச் சென்றுள்ளார்.

சந்தேகநபர் ஆனமடுவ பிரதேசத்தைச் சேர்ந்தவர். அவரது வீட்டில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் கூறினர். (எ)

வாகனம் மீது துப்பாக்கி சூடு

# முன்னாள் உதவி பொலிஸ் அத்தியட்சகருக்கு மறியல்

அநுராதபுரம், செப். 08

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரான உதிக்க பிரேமரத்ன பயணித்த வாகனம் மீது துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்ட சம்பவத்துக்கு உதவி செய்த குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்ட முன்னாள் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் சஞ்சீவ மகாநாமவை எதிர்வரும் 13 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு அநுராதபுரம் மேலதிக நீதிவான் மனோதி ஹேவாவசம் உத்தரவிட்டுள்ளார்.

சந்தேக நபரான முன்னாள் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் சஞ்சீவ மகாநாம பொலிஸ் குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகளால் கடந்த 05 ஆம் திகதி கைது செய்யப்பட்டிருந்த நிலையில் வெள்ளிக்கிழமை நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப் பட்டபோது இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

கடந்த 2023 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 17 ஆம் திகதி உத்திக பிரேமரத்னவின் வாகனம் மீது துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (எ)

# போதையில் சாரத்தியம் மன்னாரில் இருவர் கைது

மன்னார், செப். 08

மன்னார் - முருங்கன் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நானாட்டானில் மதுபோதையில் வாகனம் செலுத்திய இருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

இந்தச் சம்பவம் வெள்ளிக்கிழமை மாலை நானாட்டான் சுற்றுவட்ட சந்தியில் இடம்பெற்றது.

கைது செய்யப்பட்ட இருவரையும் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்த முருங்கன் பொலிஸார் நடவடிக்கை மேற்கொண்டுள்ளனர். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu ஈழநாடு
08.09.2024 ஞாயிற்றுக்கிழமை
பிலவ வருடம், ஆவணி 23

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

## இரகசிய உடன்பாடு என்ன?

அரசியலில் அனைத்தையும் முன்கதவால் செய்துவிட முடியாது. பின்கதவால் செய்யப்படும் அரசியல் நகர்வுகளே உலகில் அதிகம். பின்கதவு இராஜதந்திரமே அதிகம் செல்வாக்குச் செலுத்தும் நகர்வுகளாக இருக்கின்றன. இது ஓர் உலக அரசியல் வழக்கமும்கூட. இந்தப் பின்புலத்தில் நோக்கினால், சஜித் பிரேமதாஸவை ஆதரிக்கும் தமிழ் அரசுக் கட்சியின் முடிவுக்கு பின்னால் ஏதேனும் பின்கதவு அரசியல் நகர்வுகள் ஒளிந்திருக்கின்றனவா? மக்கள் நலனுக்கான திட்டம் ஒளிந்திருந்தால் அதனை வரவேற்கலாம்.

2010இல் சரத் பொன்சேகாவை ஆதரிக்கும் தீர்மானத்தை சம்பந்தன் எடுத்திருந்தார். அப்போது, இது தொடர்பில் கேள்விகள் எழுப்பப்பட்டன. யுத்தத்தை வழிநடத்திய இராணுவத் தளபதிக்கு எவ்வாறு ஆதரவளிக்கலாம்? இந்தத் தீர்மானம் பாதிக்கப்பட்ட மக்களை இழிவுபடுத்துவதாக அமையாதா? இதற்கு அப்போது சம்பந்தன் வழங்கிய பதில் - நான் பொன்சேகாவுடன் ஓர் இரகசிய உடன்பாடு செய்திருக்கின்றேன். அதனை எனது வங்கியின் இரகசிய கருவூலத்தில் வைத்திருக்கின்றேன். ஆனால், இறுதிவரை அந்த உடன்பாட்டு பிரதியை எவருமே கண்டதில்லை. அப்படியான ஒன்றுதான் தமிழ் அரசுக் கட்சியின் சஜித் பிரேமதாஸவுக்கான ஆதரவு அல்லது வெறும் சுயநல நோக்கம் மட்டும்தான் திரைமறைவில் இருக்கின்றதா?

தமிழ் அரசுக் கட்சி ஆரம்பத்தில் ரணில் விக்கிரமசிங்கவுடன் இருப்பதான தோற்றமே தெரிந்தது. கட்சி ரணிலுக்கு ஆதரவளிக்கப் போவதாகவே அனைவரும் புரிந்து கொண்டனர். ஆனால், திடீரென்று சஜித் பிரேமதாஸவை ஆதரிப்பதாக அறிவிக்கப்பட்டது. முதலில் அதனை எதிர்த்துக் கருத்துத் தெரிவித்திருந்த தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா ஒருநாள் கழித்து கட்சியின் தீர்மானத்தை அமுல்படுத்தப் போவதாக அறிவித்தார். இடைப்பட்ட ஒரு நாளில் என்ன நடந்தது? ஏதாவது இரகசிய பேரம் நிகழ்ந்ததா? இப்படி சந்தேகிப்பதற்கான வாய்ப்பு இருப்பதால்தான் இவ்வாறான சந்தேகங்களை முன்வைக்க வேண்டியிருக்கின்றது. அல்லது சஜித் பிரேமதாஸவுடன் இணைந்து அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் ஏதாவது இரகசிய உடன்பாடு இருக்கின்றதா? இவ்வாறான கேள்விகளுக்கெல்லாம் யார் பதிலளிப்பது?

ஒரு வேளை மக்களுக்கான இரகசிய உடன்பாடு இருக்குமாயின் நாம் அதனைத் தவறென்று கூறிவிட முடியாது. ஆனால், அது ஓரளவாவது ஊகிக்கக் கூடியதாக இருக்கின்றதா என்றால் இல்லை. ஏனெனில், சஜித் பிரேமதாஸவின் கடந்தகாலம் தமிழ் மக்களுக்கு திருப்தியான ஒன்றாக இருக்கவில்லை. புதுச் செருப்பு கடிக்கும் என்று கூறுவது போன்று புதிதாக அதிகாரத்துக்கு வரமுயற்சிக்கும் அனைவரும் எதைக் கூறுவார்களோ அதனையே சஜித்தும் கூறுகின்றார். எனவே, இவ்வாறான கதையைக் கொண்டு ஒரு பாரம்பரிய கட்சி எவ்வாறு ஆதரவளிக்க முடியும்?

விடயங்களை தொகுத்து நோக்கினால், மக்களுக்கான இரகசிய உடன்பாடு எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை. மாறாக, வெறும் சுயநல தேவைகளுக்கு பலியானதன் விளைவாகவே சஜித்தின் பக்கமாக கட்சி சாய்ந்திருக்கின்றது. கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா முற்றிலுமாக சுயநலன்களுக்கு பலியான ஒருவராகி விட்டாரா என்னும் கேள்வியே எஞ்சியிருக்கின்றது. மத்திய குழுவின் தீர்மானத்தை சுமந்திரன், சாணக்கியன் ஆகியோரின் முடிவென்று கூறிவிட்டு ஏனையோர் தப்பிவிட முடியாது. மத்திய குழுவின் தீர்மானத்திற்கு பெரும்பான்மையாக ஆதரித்தவர்கள் அனைவருமே சுயநலன்களுக்கு பலியானவர்களே. இரகசிய பேரத்தின் பங்காளிகளே - இப்படித்தான் கட்சியின் இடம் தீர்மானிக்கப்படப் போகின்றது.

### தபால் மூல வாக்களிப்பு

## வாக்குச் சீட்டை சமூக ஊடகங்களில் பகிர்ந்தவருக்கு எதிராக முறைப்பாடு

வவுனியா, செப். 08

தபால் மூல வாக்களிப்பின் போது வாக்குச் சீட்டை புகைப்படம் எடுத்து சமூக ஊடகங்களில் பகிர்ந்த அரசியல்வாதிக்கு எதிராக வவுனியா உதவித் தேர்தல் ஆணையாளர் அலுவலகத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

வவுனியாவில் அரச ஊழியர்களுக்கான தபால் மூல வாக்களிப்பு நிலையத்தில் வாக்குச் சீட்டை புகைப்படம் எடுத்ததாக அரசியல் கட்சி ஒன்றின் மத்திய குழு உறுப்பினரர் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளதாக சிங்கள ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இந்த வாக்குச் சீட்டில் தமிழ்ப் பொது வேட்பாளருக்கு ஆதரவாக அடையாளம் இடப்பட்டிருந்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது. தேர்தல் கண்காணிப்பாளர்களுக்கும் அறிவிக்கப்பட்ட நிலையில், சம்பவம் குறித்து அதிகாரிகள் விசாரணை நடத்தி வருகின்றனர். இந்தச் சம்பவம் இடம்பெற்ற பிரதேசம் தொடர்பான விவரங்கள் வெளியாகவில்லை. (எ)

## திருடிய மோட்டார் சைக்கிளில் சென்று பெண்களிடம் சங்கிலி அறுத்த இளைஞன்

### நகைகளை வாங்கிய வர்த்தகர்கள் உட்பட மூவர் கைது

வவுனியா, செப். 08

அநுராதபுரத்தில் மோட்டார் சைக்கிள் ஒன்றை திருடியதுடன் திருடப்பட்ட மோட்டார் சைக்கிளில் பல இடங்களுக்குச் சென்று பல பெண்களிடம் கத்தியை காட்டி சங்கிலி அறுத்த சம்பவம் தொடர்பில் அநுராதபுரத்தை சேர்ந்த ஒரு இளைஞனும், திருடப்பட்ட தங்க நகைகளை கொள்வனவு செய்த வவுனியாவைச் சேர்ந்த இரு வர்த்தகர்களும் கைது செய்யப்பட்டுள்ளதாக வவுனியா பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த வெள்ளிக்கிழமை வவுனியா தோணிக்கல் பகுதியில் வீதியில் மோட்டார் சைக்கிளில் சென்ற பெண்ணிடம் மோட்டார் சைக்கிளில் பின் தொடர்ந்து சென்ற இளைஞன் பெண்ணின் கழுத்தில் இருந்த மூன்று பவுண் தங்கச்சங்கிலியை அறுத்து சென்றுள்ளான். அதனைத் தொடர்ந்து பாதிக்கப்பட்ட பெண் வவுனியா பொலிஸில் முறைப்பாடு செய்திருந்தார்.

குறித்த முறைப்பாடு தொடர்பில் வவுனியா தலைமைப் பொலிஸ் பொறுப்பதிகாரி ஜெயக்கொடியின் வழிகாட்டலில் பொலிஸ் குழுவினர் விசாரணைகளை முன்னெடுத்தனர்.


இதன்போது, அநுராதபுரத்தைச் சேர்ந்த 31 வயது இளைஞனை சந்தேகத்தில் கைது செய்தனர். அவரிடம் முன்னெடுக்கப்பட்ட விசாரணையின் போது பல அதிர்ச்சிகரமான தகவல்கள் வெளியாகின. இதன்போது குறித்த இளைஞனிடம் இருந்து அநுராதபுரத்தில் திருடப்பட்ட மோட்டார் சைக்கிள் ஒன்று மீட்கப்பட்டதுடன், குறித்த மோட்டார் சைக்கிளை பயன்படுத்தி சங்கிலிகள் அறுக்கப்பட்டமை தெரியவந்தது.

தொடர்ந்து முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளின் போது கடந்த மூன்று மாத காலப்பகுதியில் அநுராதபுரம் பகுதியில் ஒரு மோட்டார் சைக்கிளும், ஒரு சங்கிலியும், மிகிந்தலை பகுதியில் மூன்று சங்கிலியும், பரசண்கஸ்கல பகுதியில் ஒரு சங்கிலியும், பூனாவப் பகுதியில் ஒரு சங்கிலியும், பூவரசங்குளம் பகுதியில் ஒரு சங்கிலியும், உலுக்குளம் பகுதியில் ஒரு சங்கிலியும், தோணிக்கல் பகுதியில் ஒரு சங்கிலியும் என 9 இடங்களில் குறித்த இளைஞனால் சங்கிலிகள் அறுக்கப்பட்டமை தெரியவந்துள்ளது.

அத்துடன், திருடப்பட்ட நகைகள் வவுனியா நகர்ப் பகுதியில் உள்ள நகை விற்பனை நிலையங்கள் இரண்டில் உருக்கப்பட்ட நிலையில் மீட்கப்பட்டதுடன், இரு நகைக்கடை உரிமையாளர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர். திருட்டுச் சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட அநுராதபுரம் பகுதியைச் சேர்ந்த சந்தேக நபருக்கு வேறு பல குற்றச்செயல்களில் ஈடுபட்டமை தொடர்பில் பல்வேறு நீதிமன்றங்களில் 6 பிடியாணைகள் காணப்படுகின்றன. அதில் நான்கு திறந்த பிடியாணையும், இரண்டு நாள் பிடியாணையும் உள்ளதாகவும் தெரியவந்துள்ளது.

திருடப்பட்ட மோட்டார் சைக்கிளும், கைது செய்யப்பட்ட பிரதான சந்தேக நபர் மற்றும் கடை உரிமையாளர்கள் இருவரையும் நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (எ)

### அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொழில்நுட்பத்துடன் கைகோக்கும் மொழிகள்!

சு. வெங்கடேஸ்வரன்

இந்தியாவில் எத்தனை மொழிகள் உள்ளன என்று கேட்டால் அவ்வளவு எளிதில் பதில் கூறிவிட முடியாது. ஏனெனில், 10 ஆண்டுகளுக்கு ஒருமுறை ஆய்வு நடத்தி, இந்தியாவில் உள்ள மொழிகளின் எண்ணிக்கையை மத்திய அரசு அறிவித்து வருகிறது. இதன்படி 2011-ஆம் ஆண்டு நடத்தப்பட்ட கடைசி ஆய்வுத் தகவலின்படி இந்தியாவில் சுமார் 1,369-க்கும் மேற்பட்ட மொழிகள் உள்ளன. இவற்றில் பல பேச்சு வடிவில் மட்டுமே உள்ளன. எழுத்து வடிவம் கிடையாது. இதில் பல மொழிகள் அழியும் நிலையில் உள்ளன.

உலகின் முன்னணி தகவல் தொழில்நுட்ப நிறுவனமான கூகுள் இந்தியாவின் மொழிகளை மையமாகக் கொண்டு 'புராஜக்ட் மார்னி'யை அறிவித்துள்ளது. இதன் மூலம் இந்திய மொழிகளை மக்களின் வாய்மொழியாகவே ஆடியோ பதிவு செய்து, தனது செயற்கை நுண்ணறிவுத் தொழில்நுட்பத்துக்கு கூகுள் பயன்படுத்த இருக்கிறது. இதன்மூலம் அந்த மொழிகளை இணையத்தில் பயன்படுத்த வாய்ப்புகள் ஏற்படுத்தித் தரப்படும்.

இந்திய மொழிகளை மக்களின் குரல்களின் வாயிலாகவே பதிவு செய்து சேகரிப்பது என்பது கூகுள் நிறுவனத்துக்குப் புதிதல்ல. ஏற்கெனவே கடந்த 2022-ஆம் ஆண்டு 'புராஜக்ட் வாணி' என்ற பெயரில் ஒரு திட்டம் தொடங்கி நடைபெற்று வருகிறது. இந்திய அறிவியல் கல்வி நிலையத்துடன் (ஐஐஎஸ்) இணைந்து 58 மொழிகளில் 14,000 மணிநேர பேச்சு வாய்மொழியாக பதிவு செய்யப்பட்டுள்ளது. 80 மாவட்டங்களைச் சேர்ந்த 80,000 பேரிடம் இருந்து இவை பதிவு செய்யப்பட்டுள்ளன. இத்திட்டமும் தொடர்ந்து நடந்து வரும் நிலையில்,

அடுத்தகட்டமாக 773 மாவட்டங்களைச் சேர்ந்த 125 மொழிகளைச் சேர்ந்தவர்களிடம் இருந்து 1,54,000 மணிநேர வாய்மொழியைப் பதிவு செய்யும் பிரமாண்ட இலக்குடன் கூகுள் களமிறங்கியுள்ளது.

இப்படி பதிவு செய்யப்படும் மொழிகளில் 60 மொழிகள் ஒரு கோடிக்கும் அதிகமானோரால் பேசப்படும் மொழியாகும். பிற மொழிகள் லட்சத்துக்கும் அதிகமானோரால் பேசப்படுகின்றன.

'மொழியை வளர்க்க வேண்டும் என்றால், அதை காகிதத்தில் இருந்து கணினியில் ஏற்ற வேண்டும்' என்பது பல ஆண்டுகளுக்கு முன்பு ஒரு திரைப்படத்தில் கையாளப்பட்ட தொலைநோக்குப் பார்வை கொண்ட வசனம்.

சர்வதேச அளவில் ஒப்பிடும்போது இணையத்தில் இந்திய மொழிகளின் பயன்பாடு குறைவாகவே உள்ளது என்பது கூகுள் நடத்திய ஆய்வில் தெரியவந்துள்ளது. இந்தியாவில் அதிக மக்களாலும், உலக அளவில் 10 சதவீத மக்களாலும் பேசப்படும் மொழி ஹிந்தி. ஆனால், இணையத்தில் ஹிந்தி மொழி பயன்பாடும், அந்த மொழியில் கிடைக்கும் தகவல்களும் 0.1 சதவீதமாகவே உள்ளது. இதன்மூலம் தமிழ் உள்பட மற்ற இந்திய மொழிகளின் பயன்பாடு இணையத்தில் ஒப்பீட்டளவில் எந்த அளவுக்கு குறைவாக இருக்கும் என்பதை சொல்லித் தெரிய வேண்டியதில்லை. எனவே, வளர்த்தெடுக்க வேண்டிய அனைத்து மொழிகளையும் தொழில்நுட்பத்துடன் கைகோத்து அழைத்துச் செல்ல வேண்டியது மிகவும் அவசியம்.

எதிர்கால உலகை ஆளப்போகும் தொழில்நுட்பங்களில் செயற்கை நுண்ணறிவு (ஏஐ) தொழில்நுட்பம் முக்கியப் பங்கு வகிக்கும் என்பது உறுதியாகிவிட்டது. இதற்காகவே 'கூகுள் டீம் மைண்ட்' என்ற செயற்கை நுண்ணறிவு நிறுவனத்தை 2010-ஆம் ஆண்டு முதல் நடத்தி வருகிறது.

மும்பையில் அண்மையில் நடைபெற்ற 'குளோபல் ஃபின்டெக்' விழாவில் பங்கேற்ற கூகுள் இந்தியா நிறுவனத்தின் இயக்குநர் மணீஷ் குப்தா, செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பம் (ஏஐ) மூலம் இணையத்தில் 125 இந்திய மொழிகள் பயன்பாட்டுக்கு வர இருப்பதை அறிவித்தார். இந்த 125 மொழிகளில் 73 மொழிகள் இதுவரை இணையத்தில் பயன்பாட்டிலேயே இல்லாதவை. இந்தியாவில் செயல்பாட்டில் உள்ள 'புராஜக்ட் வாணி'யுடன் இணைத்து இத்திட்டமும் களமிறக்கப்பட இருக்கிறது.

ஏற்கெனவே கைப்பேசி முதல் கார் வரை மனிதர்களின் வாய் மொழி உத்தரவுகளை அடையாளம் கண்டு அதற்கேற்ப செயல்பட்டு வருகின்றன. வரும் நாள்களில் நாம் எண்ணிப் பார்க்க முடியாத அளவுக்கு வசதிகளை செயற்கை நுண்ணறிவுத் தொழில்நுட்பம் (ஏஐ) தர இருக்கிறது.

கணினி, இணையம், தகவல் தொழில்நுட்பம் சார்ந்த அனைத்துச் செயல்பாடுகளின் பின்னணியில் இருப்பதும் (ஹெச்டிஎம்எல், சிஎஸ்எஸ், பைத்தான், ஜாவா உள்ளிட்ட) மொழிகள்தான். இதுபோன்ற கணினி மொழிகளை வைத்துத்தான் அவை நமது மொழியைப் புரிந்து கொள்கின்றன.

கால ஓட்டத்தில் ஏற்படும் புறச்சூழல் மாற்றங்களுக்கு ஏற்ப தன்னை தகவமைத்துக் கொள்ளும் உயிரினங்களே உலகில் வாழ முடியும் என்பது இயற்கையின் நியதி. இதேபோல இனி மொழிகள் மனிதர்களுடன் மட்டுமல்லாது, தொழில்நுட்பத்துடன் கைகோத்து நடைபோடும்போதுதான் செழுமையடைய முடியும் என்பதை மறுக்க முடியாது.

உலகின் பல நாடுகளில் மொழி என்பது தகவல் தொடர்புக்கான கருவியாக மட்டுமே பார்க்கப்படுகிறது. ஆனால், இந்தியாவில் குறிப்பாக தமிழ்நாட்டில் மொழி என்பது உணர்வுபூர்வமானது. பழம் பெருமைகளைக் கொண்டது. எனவே மொழியின் பெருமையையும், சிறப்பையும் பாதுகாப்பதற்கு கூடுதல் கவனம் செலுத்தப்படுகிறது. எனவே, தொழில்நுட்ப மொழிகளுடன் தமிழ் கைகோக்கும் விஷயத்தில் கூடுதல் கவனம் செலுத்த வேண்டியது அவசியம். எதிர்காலத்தில் செயற்கை நுண்ணறிவு மேலும் முன்னேறும்போது தொழில்நுட்பக் கருவிகள் தங்களுக்குள் உரையாடி மகிழும் காலமும் வரும். அப்போது அவையும் நமது மொழியின் பெருமைகளை உணர்ந்து கொள்ளும்.

## இந்தவார ராசிபலன் 08.09.2024 - 14.09.2024

ஞாயிற்றுக்கிழமை
குரோதி வருடம் - ஆவணி 23
நல்ல நேரம்: 7.31 - 09.00
ராகு காலம் : 4.30 - 06.00
திதி : பஞ்சமி

### மேஷம்
[ அசுவினி, பரணி, கார்த்திகை 1 பாதம் ]

இந்த வாரம் வீட்டில் சுபமங்கள காரியங்கள் காரணமாக தாராளமான பணச் செலவுகள் ஏற்படும் சுற்றமும், நட்பும் சூழ சுபகாரியப் பேச்சுக்கள் நடைபெறும். இனிய தகவல்கள் இல்லம் தேடி வரும். நல்ல புத்திர பாக்கியம் ஏற்படும். வீட்டு வாடகை வசூல் திருப்திகரமாக இருக்கும். வீட்டுக்குத் தேவையான உபகரணங்களை வாங்கி மகிழ்வீர்கள். வீடு மாற்றம் அல்லது தூரமான விரும்பாத இடத்திற்குறிய மாற்றங்கள் ஆகியவை ஏற்படலாம்.

### ரிஷபம்
[ கார்த்திகை 2,3,4, ரோகிணி, மிருகசீரிஷம் 1,2 ]

இந்த வாரம் மனதிற்கினிய தகவல்கள் வந்து சேரும். தனவரவு அதிகரிக்கும். நண்பர்கள் மற்றும் உறவுகளின் வருகையால் உள்ளம் மகிழும். தொழிலில் எதிர்பார்த்தபடி இலாபங்கள் பெறுவதற்கான வழிமுறைகளை கையாண்டு வெற்றி அடைவீர்கள். போட்டியாளர்களை காட்டிலும் அரிய சாதனைகள் புரிவார்கள். அடிக்கடி ஏற்படும் பயணங்கள் தவிர்க்க முடியாததாகும். சிலரின் உடல் நலிவுறும். இதைக்கூட கவனிக்காமல் இன்புற நினைப்பார்கள். செலவுகள் அதிகரிப்பதால் பரிஸிலுள்ள பணமும் கொஞ்சம் கொஞ்சமாகக் குறையும்.

### மிதுனம்
[ மிருகசீரிடம் 3,4, திருவாதிரை, புனர்பூசம் 1,2,3 ]

இந்த வாரம் காய் கனிந்து பழமாவது போன்ற இனிய பயணங்கள் ஆதாயம் தரும். உங்கள் திறமையின் காரணமாக பொருளாதார சிக்கல்கள் சீராக்கப்படும். குடும்பத்தில் இதுவரை இருந்து வந்த பிரச்னைகள் நீங்கி ஒற்றுமை ஏற்பட்டு, உயர்வு ஏற்படும். முழு மனதுடன் உங்கள் வாடிக்கையாளர்கள் உங்களுக்கும், உங்கள் நிறுவனத்துக்கும் சிறப்பான ஆதரவு நல்குவார்கள். தெய்வப் பிரார்த்தனையால், தாமதமான திருமணங்களும் தடபுடலாக நடக்கும். அரசு வகையில் எதிர்பார்த்த உதவிகள் அனைத்தும் கிடைக்கும்.

### கடகம்
[ புனர்பூசம் 4, பூசம், ஆயில்யம் ]

இந்த வாரம் சினிமா, டிராமா, மால் என இளைஞர்களின் கனவு மையங்களில் பொழுது இனிமையாக கழியும். பணிபுரியும் பெண்களுக்குத் திருமண காலம் கூடிவரும். அனைத்து வசதிகளுடன் கூடிய அழகிய தனி வீடு அமையும். வெளிநாடு செல்லும் வாய்ப்புகள் வரும். விற்பனைப் பிரதிநிதிகளின் வாக்கு வன்மையால் பொருட்களின் விற்பனை சூடுபிடிக்கும். இரவு பயணங்களின் போது எச்சரிக்கையுடன் இருப்பது நல்லது.

### சிம்மம்
[ மகம், பூரம், உத்திரம் 1 ]

இந்த வாரம் நேர்மையும் கடின உழைப்பும் மட்டும் வாழ்க்கையில் நல்ல முன்னேற்றத்தை அளிக்கும். ஆடை, ஆபரணங்கள், நல்ல உணவு, எதிர்பாராத தனவரவு ஆகியவை ஏற்படும். உயர் அதிகாரிகள் ஆதரவால் பதவி உயர் வுகளை எதிர்பார்க்கலாம். சிலருக்கு இடமாற்றங்கள், பயணத்தில் துன்பம், கடன் கொடுத்தவர்களின் கெடுபிடி, சகோதரர் விரோதம், அரசு வகைத் தொல்லை, ஆகியவை ஏற்படும். துன்பம் வரும்.

### கன்னி
[ உத்திரம் 2,3,4, அஸ்தம், சித்திரை 1,2 ]

இந்த வாரம் விருந்து, மகிழ்ச்சி கொண்டாட்டம், ஆரவாரம், என வீட்டில் மகிழ்ச்சி பொங்கும். சுபச் செய்திகள் எதிர்பார்க்கலாம். இந்த நாட்களில் உங்கள் திறமை மிக்க செயல்பாடுகளால் அனைவரின் பாராட்டையும் பெறுவீர்கள். நீங்கள் எதிர்பார்த்த இடங்களில் இருந்து பணவரவு தாராளமாக இருக்கும். அரசாங்கத்திடம் இருந்து அனுகூலமான செய்திகள் மற்றும் தகவல்கள் வந்து சேரும். எடுத்துக் கொண்ட புதிய திட்டங்களில் எதிர்பாராத தாமதங்கள் தடைகள் ஏற்படலாம். உழைப்பு அதிகமாகி அதற்கேற்பப் போதுமான ஊதியம் இருக்காது.

### துலாம்
[ சித்திரை 3,4, சுவாதி, விசாகம் 1,2,3 ]

இந்த வாரம் நம்பிக்கைகளும், விருப்பங்களும் மனம்போல் நிறைவேறும். நலம் விரும்பிகள் மற்றும் நண்பர்கள் ஆலோசனைகள் ஆதாயம் தரும். வழக்கு விவகாரங்கள் சாதகமாக முடிவடையும். அனைத்திலும் வெற்றி மேல் வெற்றி கிடைக்கும். சுபகாரியங்களுக்கு வீடே விழாக்கோலம் பூணும். திடீரென ஏற்படும். பயணங்களால் ஆதாயமும், மகிழ்ச்சியும் ஏற்படும். அரசுப் பணியாளர்களுக்கு எதிர்பார்த்தபடி தலைமைப் பதவிகள் தேடி வரும்.

### விருச்சிகம்
[ விசாகம் 4, அனுஷம், கேட்டை ]

இந்த வாரம் உங்களுக்கு திடீர்ப் பயணங்கள் மூலம் ஆதாயங்கள் ஏற்படும். விருந்துகளில் கலந்து கொண்டு நண்பர்களுடன் மகிழ்ச்சி ஆரவாரத்துடன் பொழுதை கழிப்பார்கள். சிறப்பான பலன்களை எதிர்பார்க்கலாம் புதிய கடன்கள் வாங்கிப் பழைய கடன்களை அடைத்து விடுவார்கள். புத்திர பாக்கியம் ஏற்படும். தொழில் வாய்ப்புகள் பிரகாசமாக இருக்கும். வாக்கால் வருமானம் பெருகும். விருப்பங்கள் அனைத்தும் நிறைவேறும்.

### தனுசு
[ மூலம், பூராடம், உத்திராடம் 1 ]

இந்த வாரம் பெண்களால் இலாபம், வீட்டில் சுப நிகழ்ச்சிகள் நடைபெறும். அதனால் வரும் இன்பம் நிலைத்திருக்கும். பொருளாதார நிலையைப் பொறுத்தவரை சிரமமான காலம். அதன் காரணமாக சேமிப்புகளில் இருக்கும் பணத்தில் கை வைக்கவேண்டிய நிலை ஏற்படும். பழைய பொருட்களை விற்பனை செய்யும் வியாபாரிகள் நல்ல வருமானத்தை அடைவார்கள். தொழிலில் நல்ல வளர்ச்சி ஏற்படும். உயர் பதவிகள் கிடைக்கும்.

### மகரம்
[ உத்திராடம் 2,3,4, திருவோணம், அவிட்டம் 1,2 ]

இந்த வாரம் பண விஷயத்தைப் பொறுத்தவரை திருப்திகரமான வாரமாக இருக்கும். வீட்டில் திருமண வைபவங்களை எதிர்பார்க்கலாம். வெற்றிக்கான பாதையில் கல்லும் முள்ளும் தடைகளும், தாமதங்களும் தாண்டி வெற்றி இலக்கை அடைவீர்கள். சமூக சேவைகள் வெற்றிகரமான தாகவும், பயனுள்ளதாகவும் அமையும். தம்பதிகளிடையே அன்யோன்யம் அதிகரிக்கும். புதிய தொழில் வாய்ப்புகள், யோகங்கள், புண்ணியத்தல தரிசனங்கள் ஆகியவை ஏற்படும்.

### கும்பம்
[ அவிட்டம் 3,4, சதயம், பூரட்டாதி 1,2,3 ]

இந்த வாரம் தன லாபம் அதிகரிக்கும். வீட்டில் அமைதியும், நிம்மதியும் நிலவும். மனைவியின் பேச்சைக் கேட்டு நடக்க வேண்டிய சூழ்நிலை ஏற்படும். திருமணமாகாத பெண்களுக்கு திருமணத்துக்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படும். அவசியமற்ற, அலைச்சல் தரும் பயணங்கள் மேற்கொள்ள நேரும். அரசு ஊழியர்களுக்குக் கட்டளைகளை இடும்படியான அதிகாரம் மிக்க உயர் பதவிகள் கிடைக்கும். வாகனங்களில் செல்கையில் எச்சரிக்கை தேவை. உதவிகரமான புதிய நண்பர்கள் கிடைப்பர்.

### மீனம்
[ பூரட்டாதி 4, உத்திரட்டாதி, ரேவதி ]

இந்த வாரம் மனதில் நினைத்ததை நினைத்தபடியே சாதிக்கும் திறன் அதிகரிக்கும். நல் ஆரோக்கியம் ஏற்படும். அழகான, எழில் நிறைந்த வீடு கிடைக்கும். தாயின் ஆரோக்கியத்தில் அக்கறை தேவை. தொழில் விஷயமாக தீட்டிய முக்கியத் திட்டங்கள் நிறைவேற எடுத்த புதிய நடவடிக்கைகள் வெற்றி பெறும். வியாபாரிகளுக்கு வங்கிக் கடன்கள் உடனடியாக கிடைக்கும். குழந்தைகளின் ஆரோக்கியத்தில் மிகுந்த கவனம் தேவை. வியாபாரிகள் தங்கள் வாக்கால் வாடிக்கையாளர்களை கவர்ந்து இலாபத்தைப் பெருக்குவர். பெண்களின் அறிவுத்திறன் கூடும். பண விஷயங்களில் மிகவும் எச்சரிக்கையுடன் இருப்பது நல்லது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேர்தலை தனக்கும் அநுரவுக்கும் இடையிலான போட்டியாக காண்பிக்கும் முயற்சியில் ஜனாதிபதி ரணில்!



**வீரகத்தி தனபாலசிங்கம்**

ஜனாதிபதி தேர்தலுக்கு இன்னமும் இரு வாரங்களே இருக்கின்றன. 38 பேர் போட்டியிடுகின்ற போதிலும், அவர்களில் பலரை பொதுவெளியில் காணவில்லை. பிரதான வேட்பாளர்கள் தங்களின் தேர்தல் பிரசாரங்களை நாடுபூராவும் மும்முரமாக முன்னெடுத்திருக்கிறார்கள்.

பிரதான வேட்பாளர்களாக விளங்கும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாச மற்றும் தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரா குமார திசாநாயக்கவும் தங்களது தேர்தல் விஞ்ஞாபனங்களில் பொருளாதார நெருக்கடியில் இருந்து இலங்கையை மீட்டெடுத்து அபிவிருத்திப் பாதையில் வழிநடத்துவதற்கு தங்கள் கொள்கைகளின் அடிப்படையில் திட்டங்களை பெருமளவுக்கு நிதானத்துடன் முன்வைத்தார்கள். தேர்தல் தினம் நெருங்கிக் கொண்டிருக்கும் நிலையில் அவர்கள் பிரசார மேடைகளில் பெருவாரியான வாக்குறுதிகளை அள்ளிவீசத் தொடங்கியிருக்கிறார்கள். அந்த வாக்குறுதிகளின் நடைமுறைச் சாத்தியம் குறித்து பலத்த சந்தேகம் கிளம்புகிறது.

அவர்களின் தேர்தல் பிரசாரக்கூட்டங்கள் நடைபெறும் இடத்துக்கு வேற்றுக்கிரகத்தில் இருந்து எவராவது வந்து இறங்கினால், அவர் பூமியில் மிகவும் வசதிபடைத்த ஒரு நாட்டில் காலடி வைத்திருப்பதாக ஆச்சரியப்படுவார் என்பதில் சந்தேகமில்லை.

இரு வருடங்களுக்கு முன்னர் வங்குரோத்து நிலையை அடைந்த இலங்கையின் பொருளாதாரத்தின் இன்றைய உண்மையான நிலைவரத்தை உணர்ந்தவர்களாக வேட் பாளர்கள் இந்த தடவை நடைமுறைச் சாத்தியமற்ற வாக்குறுதிகளை வழங்குவதை பெரிதும் தவிர்க்கக்கூடும் என்றே எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், நடைமுறைப்படுத்த முடியுமா இல்லையா என்பதைப் பற்றி சிந்திக்காமல் ஏட்டிக்குப் போட்டியாக பொருளாதார சலுகைகள் குறித்து அவர்கள் வாக்குறுதிகளை அள்ளி வீசிக்கொண்டிருக்கிறார்கள். கடந்த காலத்தைப் போன்று மக்கள் ஏமாற மாட்டார்கள் என்று நம்புவோமாக.

முன்னைய ஜனாதிபதி தேர்தல்களை போலன்றி இந்த தடவை ஜனாதிபதி தேர்தலுக்கு பிரத்தியேக முக்கியத்துவம் இருக்கிறது.

மக்களின் அமோக ஆதரவுடன் ஐந்து வருடங்களுக்கு முன்னர் தெரிவான ஜனாதிபதி ஒருவரை இலங்கையின் வரலாறு முன்னென்றும் கண்டிராத வகையிலான பிரமாண்டமான மக்கள் கிளர்ச்சி ஆட்சியதிகாரத்தில் இருந்து விரட்டியதற்கு பிறகு இரு வருடங்கள் கழித்து இந்த ஜனாதிபதி தேர்தல் நடைபெறுகிறது.

பாரம்பரிய அரசியல் அதிகார வர்க்கத்தின் மீதான சாதாரண மக்களின் கடுமையான வெறுப்பை தெளிவாக வெளிக்காட்டிய அந்த மக்கள் கிளர்ச்சி 'முறைமை மாற்றம்' ஒன்றை வேண்டிநின்றது. அதன் விளவாக மக்களின் அரசியல் சிந்தனைகளில் ஏதாவது குறிப்பிடத்தக்க மாற்றம் ஏற்பட்டிருந்தால் அது நிச்சயமாக இந்த தேர்தலில் பிரதிபலிக்க வேண்டும்.

மக்கள் கிளர்ச்சிக்கு பின்னரான அரசியல் சூழ்நிலையை பயன்படுத்தி நாட்டு மக்கள் மத்தியில் பெருமளவுக்கு ஆதரவை வளர்த்துக்கொண்ட தேசிய மக்கள் சக்தியின் தலைமைத்துவம் பாரம்பரிய அரசியல் அதிகார வர்க்கத்துக்கு வெளியிலானது. அவர்களுக்கு அதிகரித்திருக்கும் ஆதரவு புதிய ஆட்சியாளர்களாக மாற்று அரசியல் தலைமைத்துவம் ஒன்று மேலெழுவதற்கு வழிவகுக்கக்கூடிய ஒரு கட்டத்தை இலங்கை அரசியல் எட்டியிருக்கிறதா இல்லையா என்பதை ஜனாதிபதி தேர்தல் வெளிக்காட்டும் என்பது அவதானிகளின் பரவலான கருத்து.


சர்வதேச நாணய நிதியத்துடனான உடன்படிக்கையின் பிரகாரம் கடந்த இரு வருடங்களாக முன்னெடுக்கப்பட்டு வரும் பொருளாதார மறுசீரமைப்பு நடவடிக்கைகளை தவிர இலங்கை பொருளாதார நெருக்கடியில் இருந்து மீட்சி பெறுவதற்கு வேறு எந்த மார்க்கமும் இல்லை என்பதே ஜனாதிபதி விக்கிரமசிங்கவின் உறுதியான நிலைப்பாடாக இருக்கிறது. தன்னை ஜனாதிபதியாக தெரிவுசெய்து பொருளாதார மறுசீரமைப்பை தொடர்ந்து முன்னெடுக்க வாய்ப்பைத் தராவிட்டால் மீண்டும் இரு வருடங்களுக்கு முன்னர் ஏற்பட்டதை விடவும் படுமோசமான பொருளாதார நெருக்கடி தோன்றும் என்று ஒரு வகையில் மக்களை 'பணயக்கைதியாக' வைத்திருக்கும் பாவனையில் அவரது பிரசாரம் அமைந்திருக்கிறது.

அதேவேளை, ஜனாதிபதியின் பிரதான போட்டியாளர்களான பிரேமதாசவும் அநுரா குமாரவும் கூட சர்வதேச நாணய நிதியத்துடனான உடன்படிக்கையை தொடர்ந்து முன்னெடுப்பதாகவே மக்களுக்கு கூறுகிறார்கள். உடன்படிக்கையில் திருத்தங்களைச் செய்வது குறித்து பேச்சுவார்த்தைகளை நடத்தப்போவதாக அவர்கள் கூறுகின்றார்களே தவிர, பொருளாதார மீட்சிக்கு முறையான மாற்றுக் கொள்கைகளை முன்வைக்கவில்லை.

சர்வதேச நாணய நிதியத்தின் ஆலோசனையின் பிரகாரம் அரசாங்கம் முன்னெடுத்துவரும் சிக்கன நடவடிக்கைகள் மற்றும் கடுமையான வரி அறவீடுகளின் விளைவாக சொல்லொணா கஷ்டங்களை அனுபவித்து வரும் அதிகப் பெரும்பான்மையான மக்கள் சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்புடனான பொருளாதார மறுசீரமைப்பு தொடர்பிலான தங்கள் தீர்ப்பை கூறுவதற்கும் ஜனாதிபதி தேர்தல் வாய்ப்பளிக்கிறது.

இரு பிரதான வேட்பாளர்களுக்கு இடையிலான போட்டிகளாக அமைந்த முன்னைய ஜனாதிபதி தேர்தல்களைப் போலன்றி இந்த தடவை தேர்தல் மும்முனைப் போட்டியாக அமைந்திருக்கிறது. பிரதான வேட்பாளர்களில் எவருமே வாக்கு எண்ணிக்கையின் முதற்சுற்றில் 50 சதவீதமான வாக்குகளை பெறுவது சாத்தியமில்லை என்பதே பொதுவான கருத்தாக இருக்கிறது. விருப்பு வாக்குகளை எண்ண வேண்டிய அவசியம் ஏற்படலாம் என்பதால் தேர்தல் முடிவுகளை அறிவிப்பதில் தாமதம் ஏற்படும் என்று தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் கூறியிருப்பதும் கவனிக்கத்தக்கது.

சுமார் இருபது வருடங்களுக்கு பிறகு விக்கிரமசிங்க ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுகிறார். இது அவர் போட்டியிடுகின்ற மூன்றாவது ஜனாதிபதி தேர்தலாகும்.



**வெற்றியில் நம்பிக்கை வைத்து தமது அரசாங்கத்தின் உடனடி நடவடிக்கைகள் குறித்து பேசும் தேசிய மக்கள் சக்தியின் தலைவர்கள்.**

இறுதியாக அவர் 2005 நவம்பர் தேர்தலில் மகிந்த ராஜபக்சவை எதிர்த்துப் போட்டியிட்டபோது 48.83 சதவீதமான வாக்குகளைப் பெற்றார். கடந்த இருபது வருடங்களில் அவரின் ஐக்கிய தேசிய கட்சி படுமோசமான அளவுக்கு மக்கள் ஆதரவை இழந்துவிட்டது. 2020 பாராளுமன்ற தேர்தலில் அந்த கட்சியினால் நாடு பூராவும் 249, 435 வாக்குகளை மாத்திரமே (2.15 சதவீதம்) பெறக்கூடியதாக இருந்தது.

ஜனாதிபதி தேர்தலில் 50 சதவீதமான வாக்குகளை விக்கிரமசிங்க பெறவேண்டுமானால் வாக்கு அதிகரிப்பு 48 சதவீதமாக இருக்கவேண்டும். அவரது கட்சிக்கு கணக்கில் எடுக்கத்தக்க ஒரு வாக்குவங்கி இல்லாத நிலையில் அத்தகைய ஒரு பாரிய பாய்ச்சலை செய்வது எவ்வாறு சாத்தியமாகும்?

ராஜபக்சாக்களின் சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் பெருவாரியான பாராளுமன்ற உறுப்பினர்கள் உட்படட வேறு கட்சிகளில் இருந்து வந்தவர்கள் ஜனாதிபதிக்கு அமோகமாக வாக்குகளைக் கொண்டு வரக்கூடிய அளவுக்கு இன்னமும் தங்களது வாக்காளர்கள் மத்தியில் செல்வாக்கைக் கொண்டவர்களாக இருக்கிறார்களா என்பது முக்கியமான ஒரு கேள்வி.

சிறுபான்மைக் கட்சிகள் மற்றைய வேட்பாளருக்கு ஆதரவாக இருக்கின்ற போதிலும், சிறுபான்மைச் சமூகங்களைச் சேர்ந்த மக்களில் பெரும்பான்மையானவர்கள் தன்னையே ஆதரிக்கிறார்கள் என்று கடந்தவாரம் விக்கிரமசிங்க கூறியிருந்தார். அத்துடன் தன்னால் முன்னெடுக்கப்படும் பொருளாதார மறுசீரமைப்பு நடவடிக்கைகளின் விளைவாக தோன்றியிருக்கும் வழமை நிலையின் சாயல் மக்கள் மத்தியில் தனது செல்வாக்கை அதிகரித்திருக்கிறது என்றும் அவர் நம்புகிறார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் பிரேமதாச 2019 ஜனாதிபதி தேர்தலில் கோட்டாபய ராஜபக்சவை எதிர்த்துப் போட்டியிட்டபோது சுமார் 42 சதவீதமான வாக்குகளைப் பெற்றார். அப்போது அவர் ஐக்கிய தேசிய கட்சியில் இருந்து வெளியேறவில்லை. 2020 பாராளுமன்ற தேர்தலுக்கு முன்னர் பிரேமதாச ஐக்கிய மக்கள் சக்தியை அமைத்த பிறகு ஐக்கிய தேசிய கட்சியின் வாக்குவங்கி அவருடன் வந்துவிட்டது. ஆனால் கடந்த ஜனாதிபதி தேர்தலில் பெற்ற அதே சதவீத வாக்குகள் அவருடனேயே தொடர்ந்தும் இருக்கிறதா? பொதுஜன பெரமுனவில் இருந்து வெளியேறியவர்களில் ஒரு பிரிவினர் பிரேமதாசவுடனும் இணைந்திருக்கிறார்கள். அவர்களின் ஆதரவு அவருக்கு பெருமளவு வாக்குகளை கொண்டுவரும் என்று சொல்வதற்கில்லை.

இலங்கை தமிழரசு கட்சி சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் மற்றும் சில மலையக தமிழ்க்கட்சிகள் உட்பட பெரும்பாலான சிறுபான்மைச் சமூக கட்சிகள் பிரேமதாசவை ஆதரிக்கின்ற போதிலும், அவற்றின் ஆதரவாளர்கள் முழுமையாக தலைவர்களின் வேண்டுகோளுக்கு செவிமடுத்து முழுமையாக வாக்களிப்பார்கள் என்று எதிர்பார்க்கமுடியாது.

தேசிய மக்கள் சக்திக்கு அதிகரித்திருப்பதாக கூறப்படும் அமோக ஆதரவு தங்களது அரசாங் கம் தேர்தலுக்கு பிறகு உடனடியாக எடுக்கப்போகும் நடவடிக்கைகள் குறித்து அதன் தலைவர்கள் தேர்தல் மேடைகளில் பிரகடனம் செய்கின்ற அளவுக்கு அவர்களுக்கு பெரும் நம்பிக்கையை ஏற்படுத்தியிருக்கிறது.

கடந்த ஜனாதிபதி தேர்தலில் அநுரா குமாரவுக்கு 3.16 சதவீத வாக்குகள் கிடைத்தன. அவரின் தேர்தல் பிரசாரக் கூட்டங்களுக்கு என்னதான் மக்கள் ஆயிரக்க ணக்கில் அணிதிரண்டு வந்தாலும், 50 சதவீத வாக்குகளை பெறுவதற்கு 47 சதவீத பாய்ச்சலை செய்வது என்பது சாதாரணமான விடயம் அல்ல. ஆனால் அரசியல் என்பது கணிதம் அல்ல, சமூக விஞ்ஞானம் என்று கூறும் அநுரா குமார தனது வெற்றியில் முழுமையான நம்பிக்கை கொண்டவராக இருக்கிறார் என்று தோன்றுகிறது.

இலங்கையின் பாரம்பரியமான இரு பிரதான அரசி யல் கட்சிகளாக விளங்கிய ஐக்கிய தேசிய கட்சியும் சிறி லங்கா சுதந்திர கட்சியும் அவற்றின் முனனயை செல்வாக்கு நிலையில் இன்று இல்லை. தனது கட்சியின் வேட்பாள ராக போட்டியிடாமல் ஒரு சுயேச்சை வேட்பாளராக விக்கிரமசிங்க தேர்தலில் களமிறங்கியி ருப்பதில் இருந்து அதைப் புரிந்து கொள்ளமுடியும். அது மாத்திரமல்ல, ஜனாதிபதி பாரம்பரியமாக தன் னால் கடைப்பிடிக்கப் பட்டுவந்த கொள்கைகளை ஏற் றுக் கொள்ளாதவர்களின் ஆதரவில் முழுமையாக தங்கி யிருப்பது இன்றைய இலங்கை அரசியல் விசித்திரங்களில் ஒன்று.

ஐக்கிய தேசிய கட்சியின் வாக்கு வங்கியை பிரேமதாச தன்னுடன் கொண்டுவந்ததைப் போன்று ராஜபக்சாக்கள் சிறிலங்கா பொதுஜன பெரமுனவை அமைத்து சுதந்திர கட்சியின் வாக்குவங்கியை தங்கள் வசமாக்கினார்கள். ஆனால் மக்கள் கிளர்ச்சியை தொடர்ந்து அவர்கள் ஆட்சியதிகாரத்தை இழந்த பிறகு கட்சி பெருமளவுக்கு மக்கள் ஆதரவை இழந்துவிட்டது. தங்களுக்கு இருக்கக்கூடிய வாக்கு வங்கி சிதறிவிடக்கூடாது என்பதற்காகவே நாமல் ராஜபக்சவை பொதுஜன பெரமுன தேர்தலில் களமிறக்கியிருக்கிறது.

சுதந்திர கட்சியின் ஒரு பிரிவினர் ஜனாதிபதியையும் இன்னொரு பிரிவினர் பிரேமதாசவையும் ஆதரிக்கிறார்கள். அதன் தலைவராக இருந்த முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஆதரவளிக்க முன்வந்தாலும், அவரை ஏற்றுக்கொள்ள எந்த வேட்பாளரும் தயாராக இல்லை. அவரின் ஆதரவை விக்கிரமசிங்க வெளிப்படையாகவே நிராகரித்தார்.

மூன்று பிரதான வேட்பாளர்களில் எவரும் ஐம்பது சதவீதமான வாக்குகளைப் பெறுவது சாத்தியமில்லை என்று நம்பப்படும் நிலையில் அவர்கள் ஒவ்வொருவரும் பெறக்கூடிய வாக்கு வீதத்தைப் பற்றிய மதிப்பீடுகள் பெருமளவுக்கு நம்பகத்தன்மை கொண்டவையாக இல்லை எனலாம்.

கடந்த வாரம் ஜனாதிபதி விக்கிரமசிங்க மகியங்கனையில் தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் தெரிவித்த ஒரு கருத்து பிரதான போட்டி தனக்கும் அநுரா குமாரவுக்கும் இடையிலானதாகவே இருக்கப்போகிறது என்ற ஒரு தோற்றப்பாட்டை காண்பிப்பதற்கு அவர் முயற்சிக்கிறார் என்பதை உணர்த்துகிறது.

'கடந்த காலத்தில் ஜனாதிபதி தேர்தல் இருமுனைப் போட்டியாகவே இருந்து வந்தது. ஆளும் கட்சி வேட்பாளரும் எதிரணியைச் சேர்ந்த பிரதான வேட்பாளரும் போட்டியிட்டார்கள். ஆனால், அந்த நிலைவரம் இன்று மாற்றமடைந்து இந்த தடவை ஜனாதிபதி தேர்தலில் எதிரணியின் இரு வேட்பாளர்கள் போட்டியிடுகிறார்கள். பிரேமதாசவை அநுரா குமார வெற்றி கொள்வார். இவ்வருடம் பிற்பகுதியில் பிரதான எதிர்க்கட்சி தலைவராகவும் அவர் வருவார்" என்று ஜனாதிபதி கூறினார்.

ஜனாதிபதி தேர்தலில் உண்மையான போட்டி தனக்கும் அநுரா குமாரவுக்கும் இடையில்தான் இருக்கப்போகிறது என்று அவர் நம்புகிறார் அல்லது மற்றவர்கள் நம்பவேண்டும் என்று எதிர்பார்க்கிறார் என்பதே இதன் அர்த்தமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைத் தமிழரின் அரசியல் உரிமைகள்: நிர்ணயிப்பவர்கள் யார்?

**கலாநிதி சந்திரசேகரம் பரமலிங்கம்**
**(சட்டத்தரணி, லண்டன்)**

## சட்டவலுவற்ற உத்தரவாதங்களை தமிழ் தலைமை உணருமா?

**இலங்கையின் ஒற்றையாட்சிக் குடியரசு, இறைமை, அரசியல் சட்டத் திருத்தம் என்பன பற்றிய சட்ட ஏற்பாடுகள் மிகுந்த சட்ட வலுவுடன் காணப்படுகின்றன. ஜனாதிபதி தேர்தல் நடவடிக்கைகளின்போது பேசப்படுகின்ற அதிகாரப் பகிர்வு, மொழி உரிமை போன்ற விடயங்கள் தேர்தல் பிரச்சாரத்துடனோடு மட்டும் முடிவடைந்து விடுகின்றனவையாக மட்டுமே இருக்கமுடியும்.**

இலங்கையின் ஜனாதிபதி தேர்தலில் 38 வேட்பாளர்கள் களத்தில் குதித்துள்ளனர். சிங்கள பிரதேசங்களில் அவர்களின் சமூக, பொருளாதாரப் பிரச்னைகள் முன்வைக்கப்பட்டுள்ளன. தமிழ் பேசும் மக்களின் தாயகத்தில் இறைமைக் கோரிக்கை, சமஷ்டி, அதிகார பரவலாக்கம் பற்றிய வாதங்கள் வலுவடையத் தொடங்கியுள்ளன. மலையகக் களத்தில் காணியுரிமை, குடியிருப்புரிமை போன்ற கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டுள்ளன. முஸ்லிம் மக்களின் அரசி யல் கட்சிகள் தமது தனித்துவ சமூகத் தேவைகள், அனுபவிக்கும் இடர்கள், அவற்றிற்கான நிவாரணங்கள் ஆகிய கோரிக்கைகளை வலுவாக முன்வைக்கின் றன.

தமிழ்த் தேசிய இனம் இலங்கை சுதந்திரம் பெற்றதாகக் கூறப்பட்ட நாளிலிருந்து தனது அரசியற் சட்ட நீதிக்கான கோரிக்கையை முன்வைத்துள்ளது. 1948ஆம் ஆண்டு இலங்கையின் முதல் பாராளுமன்றத்தில் பிரஜாவுரிமைச் சட்ட மசோதாவைச் சமர்ப்பித்த வேளையில், அன்றைய சாவகச்சேரித் தொகுதிப் பிரதிநிதி வி. குமாரசாமி ஒரு கோரிக்கையை முன்வைத்தார். 'ஐக்கிய நாடுகள் சபையின் ஆணைக்குழு ஒன்றை வரவழைத்து, எங்கள் பிராந்தியங்களது எல்லைகளை வரையறுத்து, உரிய ஆட்சி முறையினை உருவாக்கிக்கொள்வோம்' என்று அவர் முன்மொழிந்தார். தீர்க்கதரிசனம் மிக்க கோரிக்கை அது.

பிரஜாவுரிமைச் சட்ட மசோதாவை எதிர்த்த தந்தை செல்வநாயகமும், தமிழ் காங்கிரஸ் கட்சியிலிருந்து பிரிந்து சென்ற சில பிரதிநிதிகளும் சேர்ந்து, சமஷ்டிக்கோரிக்கையை நோக்கமாகக் கொண்ட சமஷ்டிக் கட்சியினை அங்குரார்ப்பணம் செய்தனர். அந்தக் கோரிக்கையை முன்வைத்து 1952ஆம் ஆண்டுப் பொதுத்தேர்தலை எதிர்நோக்கினர். அக்கட்சி 1952 ஆண்டு இடம்பெற்ற தேர்தல்முதல், இன்று வரையான சகல பொதுத் தேர்தல்களிலும் வெற்றிபெற்று, அதிக அளவிலான பாராளுமன்ற உறுப்பினர்களைக்கொண்டு விளங்குகின்றது என்பது சரித்திரம்.

சமஷ்டி அரசியல் முறைமையினை அடைந்துகொள்வதற்கான செயற்பாடுகளில் இதன் ஆரம்பகாலத் தலைவர்கள் இதய சுத்தியோடும் ஜனநாயக விழுமியங்களுக்கு மதிப்பளித்தும் தமது அரசியல் நடவடிக்கைகளை முன்வைத்திருந்தனர்.

சோல்பரி அரசியல் சட்டத்தின்கீழ் அரசியல் அமைப்பை மாற்றீடு செய்வதற்கோ அல்லது திருத்தம் செய்வதற்கோ உரிய மூன்றில் இரண்டு பெரும்பான்மைப்பலம் 1970ஆம் ஆண்டுப் பொதுத் தேர்தல்வரை எந்த ஓர் ஆளுந் தரப்பினருக்கும் கிடைக்கவில்லை.

இந்நிலையில், 1956ஆம் ஆண்டு பண்டா - செல்வா ஒப்பந்தமும், 1965ஆம் ஆண்டு டட்லி - செல்வா ஒப்பந்தமும் கைச்சாத்தாகின. ஆயினும் முன்னையது, சிங்கள மக்களதும் பௌத்த குருமார்களதும் கிளர்ச்சிகளினால் கிழித்தெறியப்பட்டது. இரண்டாவது ஒப்பந்தத்தின டிப்படையில், நியாயமான தமிழ் மொழிச் சட்டம் நிறைவேற்றப்பட்டாலும், அர்த்தபூர்வமான அதிகாரப் பகிர்வு எதுவும் இடம்பெறவில்லை. மாறாக, தமிழர் பிரதேசங்களில் சிங்களக் குடியேற்றங்கள் இடம் பெற்றன. திருகோணமலை -கோணேஸ்வரர் ஆலயச் சுற்றாடல் புனித பிரதேசமாகப் பிரகடனம் செய்வதில் முரண்பாடுகள் எழுந்தன. தமிழரசுக் கட்சியின் அமைச்சராகவிருந்த மு. திருச்செல்வம் பதவியை இராஜினாமாச் செய்தார். டட்லி - செல்வா ஒப்பந்தமும் வலுவிழந்தது. இன்றுவரை தமிழர்கள் அரசின் நிர்வாக விடயங்களில் தமிழ் மொழி உரிமையினைப் பூரணமாக அனுபவிக்கவில்லை என்பதே யதார்த்தம்.

இலங்கையின் அரசியல் சட்ட வரலாற்றில் 1970ஆம் ஆண்டுத் தேர்தலுடன் புதிய அரசியல் சட்டத்தை வரையும் சந்தர்ப்பம் கிடைத்தது. தமிழர்கள் சார்பில் அரசியல் சட்ட நீதி, சமஷ்டி ஆட்சிமுறை ஆகிய கோரிக்கைகள் அரசமைப்பு நிர்ணய சபையில் முன்மொழியப்பட்டன. இந்தக் கோரிக்கைகள், பெரும்பான்மை இனப் பிரதிநிதிகளால் தோற்கடிக்கப்பட்டன. இதனால் இந்தச் சபையிலிருந்து தமிழரசுக் கட்சி வெளிநடப்புச்செய்தது.

1972ஆம் ஆண்டு பிரகடனம் செய்யப்பட்ட இலங்கையின் முதலாவது அரசியல் சட்டம் தமிழர்களின் பங்குபற்றுதலின்றியும், அவர்களது உரிமைகளை உள்ளடக்காமலுமே பிரகடனம் செய்யப்பட்டது. இந் நிகழ்வினை அடுத்து, வட்டுக்கோட்டைப் பிரகடனம் உருவானது. இந்தத் தீர்மானம் 1972ஆம் ஆண்டின் அரசியல் சட்டத்தின் நீதி நிராகரிப்பின் வெளிப்பாடு என்று சட்டப் பேராசிரியர் நிஹால் ஜெயவிக்ரம கருத்துத் தெரிவித்துள்ளார்.

இவற்றைத் தொடர்ந்து ஆயுத போராட்டமாகப் பரிணமித்த தமிழ் அரசியற் செயற்பாடுகள், ஏற்ற இறக்கங்களைச் சந்தித்தாலும், அவர்தம் அரசியற் சட்ட நீதிக்கான கோரிக்கைகளும் செயற்பாடுகளும் என்றும் எச்சக்தியாலும் மழுங்கடிக்கப்படமுடியாதவையாகும்.

முள்ளிவாய்க்கால் முடிவிற்குப் பின்னர் வந்த தேசிய அரசாங்கங்களும் தமிழினத்தைத் தொடர்ந்தும் உள்ளூர்க் குடியேற்ற ஆட்சியின்கீழ் இறுக வைத்திருப்பதற்கான வேலைத்திட்டங்களைச் செயற்படுத்துவதிலேயே கண்ணுங் கருத்துமாக இருந்தன. இவ்வாறான அரசியற் பின்னணியில், இலங்கைத் தமிழ்த் தேசியத்தின் அரசியலானது புற்றீசல்போன்று கிளம்பிய அதிகரித்த [illegible] சிக்கியது. இவர்கள் உரிய முறையில் இனத்தின் விடுதலையையும், நீதி நிலை நாட்டப்படுவதனையும் நோக்காகக் கொண்டு செயற்படவில்லை.

குடியேற்றவாத நாட்டாட்சி ஏற்படுத்திய சட்டத் தவறுகளுக்கு 1948 இல் நீதி வழங்கப்படாத நிலையில், தமிழர்கள் மத்தியமயப்படுத்தப்பட்ட - ஒற்றையாட்சி முறைமையின் கீழ், உள்ளூர்க் குடியேற்ற வாதத்திற்குப் பலியாக்கப்பட்டார்கள்.

முள்ளிவாய்க்கால் அரச பயங்கரவாதத்திலிருந்து இன்றுவரையான 15 வருட காலத்தில், இன்றைய தமிழ் அரசியல் கட்சிகளும் அக்கட்சித் தலைவர்களும் தமிழ்த் தேசிய இனத்தின் இடர்களை உணர்ந்து ஒற்றுமைப்பட்டு, பொது வேலைத்திட்டத்தை செயற்படுத்திக் கொள்ள முடியவில்லை.

ஜனாதிபதி தேர்தலில் தமிழ்ப் பொது வேட்பாளர் இறக்கப்படவேண்டும் என்பதற்கு தெளிவான காரணங்கள் கூறப்பட் டிருந்தாலும், மாற்றுக் கருத்துகளும் முன்வைக்கப்பட்டுள்ளன.

தமிழ் பேசும் மக்களின் சர்வதேச உரிமைகளைத் தீர்மானிக்கும் உரிமை சிங்களத் தலைவர்களுக்கு உள்ளதா என்பதை அவர்கள் சிந்திக்கவேண்டும். இன்றைய ஐக்கிய நாடுகள் முறைமையின் அடிப்படையில் தமிழர்களது ஆட்சி அதிகாரங்களை வழங்கும் உரிமை சிங்கள அரசியல் தலைவர்களுக்கு உரியதா என்பதை அவர்கள் யோசித்துப் பார்க்கவேண்டும். தமிழர்களது சர்வதேச உரிமைகளைத் தீர்மானிக்கும் உரித்தோ அல்லது சமஷ்டியை நிராகரிக்கும் அதிகாரங்களோ சிங்கள இனத்தின் தலைவர்களுக்கு இல்லை என்பதைத் தமிழ்த் தலைவர்கள் அவர்களுக்கு அறிவுறுத்தக் கடமைப்பட்டவர்கள்.

சுருங்கக் கூறுவதானால், தமிழ்த் தேசிய இனத்திற்கு உரித்தான சர்வதேச உரிமைகளை அமலாக்கும் பொறுப்பு இலங்கை அரசிற்கு உண்டு. அரசுகளுக்குரிய சட்டக் கடமைப்பாடுகளின் அடிப்படையிலும் , சர்வதேச சட்டவாட்சித் தத்துவத்தின் அடிப்படையிலான அரசின் கடமை, பொறுப்பு ஆகியவற்றின் அடிப்படையிலும், இவற்றை அமுலாக்கும் பொறுப்பு அரசிற்குரியது. கல்வி கற்ற இலங்கையர்கள், இவ் விவகாரத்தின் நாகரிகத் தன்மையை உணர்ந்து, இலங்கையில் நல்லாட்சி, சுபீட்சம், சமாதானம் என்பனவற்றை அடைந்துகொள்ள சிறு துளி முயற்சியையும் மேற்கொள்ள [illegible] சர்வதேச சட்டத் தத்து[illegible]படுமானால், வடக்கிலிருந்து தெற்குவரையான அரசியல் வாதிகள் தமது அரசியல் வேலைகளுக்குப் புதிய இலக்குகளைத் தேடியாகவேண்டும்.

சர்வதேச சட்டம் அதனது முதன்மை விடயப் பொருளான அரசுகள் தவறிழைப்பதில்லை என்றே பொருள்கொள்கின்றன. ஆனால், அரசு தவறிழைக்கும் சந்தர்ப்பங்களில், இறைமை அதிகாரத்தைக் கையாண்டவர்களையும், இராணுவத்திற்கும் ஏனைய ஆயுதப் படையினருக்கும் கட்டளை வழங்கும் அதிகாரத்தைக் கொண்டவர்களையுமே பொறுப்புக் கூறவும், இழைத்த தவறுகளுக்குத் தண்டனைக்கு உட்படுத்தவும்கூடிய பொறிமுறைகளை அரசு தன்னகத்தே கொண்டுள்ளது.

தற்போதைய ஜனாதிபதி தேர்தல் தொடர்பான செய்திகளினடிப்படையில், தமிழர்களினது கட்சிகள் பட்டியலிடப்பட்டு, ஜனாதிபதி செயலகத்திற்கும் எதிர்க் கட்சி அலுவலகத்திற்கும் அழைக்கப்பட்டுப் பேச்சு வார்த்தைகள் இடம் பெறுவதாகவும், அவர்களால் அதிகாரப் பகிர்வு தொடர்பான வாக்குறுதிகளும் உத்தரவாதங்களும் வழங்கப்படுவதாகவும் தெரியவருகிறது. இந்நிலையில், இவ்விடயங்கள் தொடர்பான அரசியல் சட்டத்தின் சரத்துகள் மிகத் தெளிவாக இருக்கின்றன. இலங்கையின் ஒற்றையாட்சிக் குடியரசு, இறைமை, அரசியல் சட்டத் திருத்தம் என்பன பற்றிய சட்ட ஏற்பாடுகள் மிகுந்த சட்ட வலுவுடன் காணப்படுகின்றன. ஜனாதிபதி தேர்தல் நடவடிக்கைகளின்போது பேசப்படுகின்ற அதிகாரப் பகிர்வு, மொழி உரிமை போன்ற விடயங்கள் தேர்தல் பிரச்சாரத்துடனோடு மட்டும் முடிவடைந்து விடுகின்றனவையாக மட்டுமே இருக்கமுடியும்.

தமிழர்களின் உரிமைகள் பற்றிய சட்ட நகர்வுகளின்போது, அரசியல் சட்டத்திற்குப் புறம்பான பௌத்த மதத் துறவிகள், தொழிற்சங்கங்கள் உள்ளடங்க லான 'ஐம்பெரும் சக்திகள்' போன்றன வற்றின் பலம் அரசியல் சட்ட நிறுவனங் களை விடப் பலமானவை என்பது, இலங்கை அரசியல் வரலாற்றில் மீண்டும் மீண்டும் நிரூபிக்கப்பட்டுள்ளது. இதே மாதிரி நிகழ்வுகள் எதிர்காலத்தில் இடம் பெறாது என்பதற்கு எந்த உத்தரவாதமும் இல்லை.

இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களது இன்றைய நிலைக்குக் குடியேற்ற நாடுகள் எமக்கிழைத்த தவறுகள் முக்கியமானவை. பிரித்தானிய ஆட்சி முடிவாக்கத்தின்போது தமிழர்களின் ஆட்புல அந்தஸ்தும் இறைமை அதிகாரங்களும் உரிய முறையில் தீர்மானிக்கப்படாமல், தமிழர்கள் நட்டாற்றில் விடப்பட்டனர். 'இலங்கையில் இருமொழி பேசும் அரசியல் வலயங்கள் இருப்பதனால், இத்தீவில் ஒற்றையாட்சி பொருத்தமற்றது' என்று பிரித்தானிய மக்க பிரதிநிதிகள் சபையில் விடுக்கப்பட்ட எச்சரிக்கைகள், இலங்கையில் உதாசீனம் செய்யப்பட்டன. தமிழர்கள் உள்ளூர்க் குடியேற்றவாத ஆட்சியின்கீழ் வாழத் தொடர்ந்து நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளனர். இவை உணரப்படுமானால், தமிழ்த் தலைமைகள் சிங்கள ஜனாதிபதி வேட்பாளர்களின் சட்ட வலுவற்ற கருத்துகளையும் உத்தரவாதங்களையும் உதாசீனம் செய்து, இலங்கையின் உள்ளூர் மோதல்களுக்கான - சரியான அணுகுமுறைகளை அடையாளங் கண்டு, ஆக்கபூர்வமாக ஒன்றிணைந்து செயற்படுவார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுமந்திரன் அணியின் ஆதரவு சஜித்தின் தேர்தல் வெற்றிக்கு உத்தரவாதம் அளிக்காது!

பனங்காட்டான்

இந்த மாத ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்ப் பொதுவேட்பாளர் ஒருவர் போட்டியிட வேண்டுமென்ற கருத்து வலுப்பெற்று அதற்கான முன்னெடுப்புகள் இந்த வருட முற்பகுதியில் ஆரம்பிக்கப்பட்டது. கடந்த மே மாத நடுப்பகுதியில் இது தொடர்பான கருத்தினை தமிழரசுக் கட்சியின் பெருந்தலைவராகவிருந்த (அமரர்) இரா.சம்பந்தன் தெரிவித்திருந்தார்.

இதனை ஓர் அறிக்கை வடிவில் தமிழரசு எம்.பி. சுமந்திரன் வெளியிட்டார். இரா.சம்பந்தன் இவரிடம் நேரடியாகத் தெரிவித்ததாகக் கூறிய கருத்துகள் இதில் தெரிவிக்கப்பட்டிருந்தது. இதில் இடம் பெற்ற முக்கியமான வாசகம் பின்வருமாறு அமைந்திருந்தது:

'உள்ளக சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் இணைந்த வடக்கு-கிழக்குக்கு சமஷ்டி முறையிலான அதிகாரப் பகிர்வுடன் கூடிய தீர்வுக்கே இலங்கை அரசு இணங்கி வந்துள்ளது. அதற்குக் குறைந்த எதற்கும் இணங்கும் ஏற்பாடுகளுக்கு நாம் போக முடியாது. இதற்குக் குந்தகம் ஏற்படுத்தும் விதத்திலான எந்த முடிவையும் தமிழ்ப் பொதுவேட்பாளர் ஊடாக தமிழரசுக் கட்சியினர் இணங்கக் கூடாது" என்பது இந்த முக்கியமான வாசகம்.

இதனூடாக முக்கியமான விடயம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. வடக்கு-கிழக்கு இணைந்த சமஷ்டி முறையிலான அதிகாரப் பகிர்வு விடயத்தில் சம்பந்தன் இறுக்கமாக இருந்துள்ளார் என்பதை இந்த அறிக்கையினூடாக சுமந்திரன் நன்கு தெரிந்திருந்தார். அதனாற்தான், ஜனாதிபதி வேட்பாளர்களின் தேர்தல் விஞ்ஞாபனங்கள் வெளியான பின்னரே தமிழரசுக் கட்சி ஒரு முடிவை எடுக்குமென்று பல தடவை பொதுவெளியில் சொல்லியும் வந்தார்.

தமது கூற்றை நம்ப வைக்கும் போக்கில், ஜனாதிபதித் தேர்தலுக்கு முதல் வாரமே இது தொடர்பாக தமிழரசுக் கட்சி முடிவெடுக்கும் என்றும், தேர்தலுக்கு ஒரு வாரத்துக்கு முன்னரே முடிவெடுப்பது கட்சியின் கடந்த கால வழக்கமென்றும் இவர் சொல்லி வந்தார்.

ஆனால், இந்த மாதம் முதலாம் திகதி வவுனியாவில் கூடிய கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டத்தில் ஐக்கிய மக்கள் சக்தியின் வேட்பாளர் சஜித் பிரேமதாசவை ஆதரிப்பதெனவும், தமிழ்ப் பொது வேட்பாளர் பா.அரியநேத்திரன் போட்டியிலிருந்து விலக வேண்டுமெனவும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

கட்சியின் யாப்பு விதிகளின்படி இக் கூட்ட அறிவிப்புக்கு போதிய அவகாசம் இருக்கவில்லையெனவும், முக்கிய உறுப்பினர்களுக்கு அழைப்பு கிடைக்கவில்லையெனவும், கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா பங்குபற்றவில்லையெனவும், கிளிநொச்சி எம்.பி. சிவஞானம் சிறீதரன் வெளிநாடு செல்லும் முன்னர் கூட்டத்தை பின்போடுமாறு விடுத்திருந்த வேண்டுகோள் ஏற்கப்படவில்லையெனவும் பல குற்றச்சாட்டுகள் முக்கிய உறுப்பினர்கள் சிலரால் முன்வைக்கப்பட்டுள்ளது. அதுமட்டுமன்றி ஜனாதிபதி வேட்பாளரை தீர்மானிப்பது பற்றி நிகழ்ச்சி நிரலில் இருக்கவில்லையெனவும் சொல்லப்படுகிறது.

ஆக, கூட்டம் நடைபெற்ற விதத்தைப் பார்க்கையில் இரண்டு விடயங்கள் அப்பட்டமாகத் தெரிகிறது. தமக்குச் சார்பானவர்கள் பங்குபற்றிய இக்கூட்டத்தைப் பயன்படுத்தி, தாம் ஏற்கனவே உறுதியளித்திருந்த சஜித் பிரேமதாசவை ஆதரிக்கும் முடிவை இக்கூட்டத்தில் எப்படியாவது நிறைவேற்றி விடவேண்டுமென்பதில் சுமந்திரன் வேகமாக செயற்பட்டுள்ளார் என்பது முதலாவது. அடுத்தது, தமிழ்ப் பொதுவேட்பாளரின் தேர்தல் விஞ்ஞாபனம் வெளிவருவதற்கு முன்னர் சஜித்தை ஆதரிக்கும் முடிவை நிறைவேற்ற வேண்டுமென்பது.



**தமிழரசுக் கட்சி சஜித்தை ஆதரிப்பதாகக் கூறுவதில் உண்மையில்லை. சிறுதொகையினரான சுமந்திரன் அணியினர் தங்கள் ஆதரவை தெரிவித்துள்ளனர். இது தொடர்பாக பிரபல அரசியல் கட்டுரையாளர் ஜெகான் பெரேரா கடந்த வாரம் எழுதிய கட்டுரையொன்றில், 'சிறுபான்மைக் கட்சிகளிடமிருந்து சஜித் பெற்றுள்ள அங்கீகாரம் அவரது தேர்தல் வெற்றிக்கு உத்தரவாதம் அளிக்காது. இதே கட்சிகளின் ஆதரவை 2019 ஜனாதிபதித் தேர்தலிலும் சஜித் பெற்றிருந்தார். ஆனால், கோதபாயவால் இவர் தோற்கடிக்கப்பட்டார்' என்று தெரிவித்துள்ளார்.**

பொதுவேட்பாளரின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் இரா. சம்பந்தன் முன்னர் தெரிவித்திருந்த வடக்கு-கிழக்கு இணைந்த, சமஷ்டி அடிப்படையிலான உள்ளக சுயநிர்ணய உரிமை குறிப்பிடப்படவிருப்பதால் அதற்கு முன்னர் சஜித்தை ஆதரிக்கும் முடிவை எடுப்பதில் சுமந்திரன் சாதுரியமாகச் செயற்பட்டார். மூத்த பெருந்தலைவர் சம்பந்தன் மரணமாகி மூன்று மாதங்கள் முடிவதற்கிடையிலேயே அவரது கோரிக்கையை நிராகரித்துவிட வேண்டுமென்பதில் சுமந்திரன் எவ்வளவு அக்கறையாக இருந்துள்ளார் என்பதையும் இதனூடாக காண முடிகிறது.

தமிழரசின் மத்திய செயற்குழுவின் முடிவை(?) பல்வேறு அரசியல் கட்சிகளும் ஊடகங்களும் இருட்டடிப்பு செய்துள்ளன. வேறு சில ஊடகங்கள் செயற்குழுவின் முடிவை சுமந்திரன் அணியின் முடிவு என்று விமர்சித்து வருகின்றன. இதனால், போதியளவுக்கு தமிழர் வாக்குகளை தமிழரசுக் கட்சியால் பெற்றுக் கொள்ள முடியாதென்ற கருத்தும் பரவலாக சொல்லப்பட்டு வருகிறது.

2010ல் தேசியப் பட்டியலூடாக தமிழரசுக் கட்சிக்குள் நுழைக்கப்பட்ட சுமந்திரன் 2015 பொதுத்தேர்தலில் 58,043 வாக்குகளை பெற்றிருந்தார். ஆனால், 2020ம் ஆண்டுப் பொதுத்தேர்தலில் ஏறத்தாழ அதன் அரைவாசியான 27,836 வாக்குகளை மட்டுமே பெற முடிந்திருந்தது. இதுகூட சக எம்.பியான சிவஞானம் சிறீதரனின் ஆதரவினால் பெறப்பட்டது.

இவ்வாறாக, மக்கள் ஆதரவில் தேக்க நிலையிலுள்ள சுமந்திரனின் வேண்டுகோளை ஏற்று தமிழ் மக்கள் சஜித்துக்கு வாக்களிப்பார்களா என்ற கேள்வி தெற்கில் வேகம் கொண்டுள்ளது. தாயக பூமியிலும் கிளிநொச்சி மற்றும் திருமலை மாவட்டக் கிளைகள் பொதுவேட்பாளரை ஆதரித்து தீர்மானங்களை நிறைவேற்றியுள்ளன. கட்சியின் முக்கிய பிரமுகர்கள் சிலர் பொதுவேட்பாளருக்கு ஆதரவான கருத்துகளை வெளியிட்டு வருகின்றனர். பொதுவேட்பாளர் செல்லுமிடமெங்கும் திரண்டெழும் மக்களால் பெருவரவேற்பளிக்கப்படுகிறது. கொழும்பின் பிரதான ஊடகங்கள் உண்மை நிலையை விபரித்து வருகின்றன.

பிரபல்யமான அரசியல் கட்டுரையாளர் ஜெகான் பெரேரா இது தொடர்பாக கடந்த வாரம் தி ஐலன்ட் ஆங்கிலப் பத்திரிகையில் எழுதிய கட்டுரையொன்றின் முக்கிய பகுதியின் தமிழாக்கம் பின்வருமாறு:

'எதிர்க்கட்சித் தலைவரை (சஜித் பிரேமதாச) ஆதரிப்பதன் மூலம் ஏற்கனவே அவ்வாறு செய்துள்ள முஸ்லிம் மற்றும் மலையக தமிழ் சிறுபான்மையினரின் பிரதான கட்சிகளுடன் தமிழரசுக் கட்சியும் இணைகிறது. கட்சி உயர்மட்டங்களின் அங்கீகாரம் மக்களின் வாக்குகளுக்கு உத்தரவாதம் அளிக்காது. எதிர்கட்சித் தலைவரை ஆதரித்த முஸ்லிம் மற்றும் மலையக தமிழ்க் கட்சிகள் இரண்டும் தமது பாராளுமன்ற உறுப்பினர்கள் சிலரை இழந்துள்ளது. அவர்கள் தங்கள் கட்சித் தலைமையை மீறி ரணில் விக்கிரமசிங்கவுடன் இணைந்து சிறுபான்மையினருக்கு பலமான வேண்டுகோளை விடுத்துள்ளனர். தமிழரசுக் கட்சியைப் பொறுத்தளவில் அதன் கட்சித் தலைவர் மாவை சேனாதிராஜா மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் ஆகியோர் கட்சியின் தீர்மானத்தின் ஒருபகுதியாக இருக்கவில்லை. இவர்கள் பொதுவேட்பாளர் அரியநேத்திரனுக்கு தங்கள் ஆதரவை ஏற்கனவே தெரிவித்துள்ளனர். இன, மத சிறுபான்மை கட்சிகளிடமிருந்து சஜித் பிரேமதாச பெற்றுள்ள அங்கீகாரம் தேர்தல் வெற்றிக்கு உத்தரவாதம் அளிக்காது. 2019 ஜனாதிபதித் தேர்தலிலும் இதே கட்சிகளின் ஆதரவை இவர் பெற்றிருந்தார். ஆனால், தேர்தலில் கோதபாயவினால் இவர் தோற்கடிக்கப்பட்டார்"

சுமந்திரன் அணி உட்பட எதிர்க்கட்சிகள் பலவற்றின் ஆதரவை சஜித் பிரேமதாச பெற்று வந்தாலும் அவரது வாக்கு வங்கியை இது உயர்த்தாது என்ற நிதர்சனத்தை ஜெகான் பெரேரா அச்சொட்டாக பதிவு செய்துள்ளார்.

அண்மையில் தொலைக்காட்சி ஒன்றுக்கு அளித்த செவ்வியில், சஜித் பிரேமதாசவை ஆதரிப்பதாக தாங்கள் முடிவு எடுத்ததைத் தொடர்ந்து வடக்கு-கிழக்கின் அரசியல் போக்கு கணிசமாக மாறியுள்ளதாகவும், சஜித்தை ஆதரிக்கும் தங்கள் தீர்மானத்தினால் அவருக்கு தமிழரின் பெரும்பாலான வாக்குகள் செல்லுமெனவும் சுமந்திரன் கண்களை மூடிக்கொண்டு அண்டப் புளுகொன்றை அவிட்டு விட்டிருந்தார். (இதுவரை சுமந்திரன் அணி சஜித்துக்கு ஆதரவாக ஒரு பொதுக்கூட்டத்தைக்கூட நடத்தவில்லையென்பதே கள நிலைவரம்)

இலங்கைத் தமிழ் மக்கள் அனைவரும் ஒன்றுபட்டு ஆதரவளித்தாலும் தமிழர் ஒருவர் ஜனாதிபதியாக முடியாதென்பது அனைவரும் அறிந்ததே. தமிழ் மக்களின் அடையாளமாகவும், அவர்களின் அரசியல் பலத்தை சர்வதேசத்துக்கு காட்டவுமே பொதுவேட்பாளர் களமிறக்கப்பட்டதாக அரியநேத்திரனே பல தடவை கூறியுள்ளார். இதனை சிங்கள ஆங்கில ஊடகங்களும் கணிசமான அளவுக்கு வெளிப்படுத்தியுள்ளன. ஆனால், தொலைக்காட்சிச் செவ்வியில் சுமந்திரன், தமிழ்ப் பொதுவேட்பாளர் அரியநேத்திரன் ஜனாதிபதியாக வெற்றி பெறுவதற்கு வாய்ப்பில்லாததால் அவர் போட்டியிடுவதால் தமிழ்ச் சமூகத்துக்கு எந்த நன்மையும் ஏற்படாது என்று கருத்துரைத்து தம்மைத் தாமே முட்டாளாக்கியுள்ளார்.

மாற்றுக் கட்சிகளில் இருப்பவர்களுக்கே தமிழ்ப் பொதுவேட்பாளரின் முக்கியத்துவம் தெரிகிறது என்பதற்கு உதாரணமாக சஜித் பிரேமதாசாவின் ஐக்கிய மக்கள் கட்சியினது முக்கிய பிரமுகரான உமாசந்திரா பிரகாஷ் பகிரங்கமாகத் தெரிவித்த கருத்து அவரது வார்த்தைகளில் அவ்வாறே கீழே தரப்படுகிறது:

'பொதுவேட்பாளர் என்பது தமிழ் இனத்தின் ஓர் அடையாளம். எனவே, அந்தப் பொதுவேட்பாளரைத் தெரிவு செய்யும் உங்கள் உரிமைக்கு நாங்கள் மதிப்பளிப்பதுடன் அதனை கௌரவப்படுத்துகிறோம். அது மாத்திரமன்றி, பொதுவேட்பாளர் விடயமானது சர்வதேச ரீதியில் தமிழ் மக்களின் இருப்பைக் காட்டுவதற்கான முயற்சி" என்று தெரிவித்துள்ள இவரது கருத்து சஜித் அணியினர் எவ்வாறு பொதுவேட்பாளரை பார்க்கின்றனர் என்பதை பளிச்சிட்டு காட்டுகிறது.

ஆனால், தமிழ் தேசியம் பேசியவாறு தமிழரசுக் கட்சியை சின்னாபின்னமாக்கும் அரும்பணியில் ஈடுபட்டிருக்கும் சுமந்திரன், வடக்கில் ஆயிரம் விகாரைகள் அமைப்பதற்கு சுபநேரம் பார்த்திருக்கும் சஜித் பிரேமதாசவுக்கு ஆதரவளிப்பதற்கும் அப்பால், பொதுவேட்பாளர் அரியநேத்திரனை தோற்கடித்தே தீருவோமென சூளுரைத்து வருகிறார்.

தமிழரை அழிப்பதற்கு வேற்று இனத்தவர் எவரும் தேவையில்லை. அதற்கான ஒருவர் தமிழர் வீட்டுக்குள்ளேயே இருக்கிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு புதுமையின் ரசனை!

மாலி

'நூபுர லாவண்யம்' என்றால், சலங்கையின் அழகு என்று பொருள் கொள்ளலாம். நடனத்தின் அம்சங்கள் என்ன? நூபுர லாவண்யத்தில், அவை அத்தனையும் அழகு - நேர்த்தி.

'கலா ரசனா' என்ற லண்டன் அமைப்பின் ஏற்பாட்டிலான 'சங்கமம் - வேனில் 2024' நிகழ்ச்சி கடந்த 19ஆம் தேதி யாழ் கலாசார மண்டபத்தில் நடைபெற்றது. 'ராக சுதா' என்று ஒரு வயலின் நிகழ்வும் 'நூபுர லாவண்யம்' என்று ஒரு நடன நிகழ்வும் இதில் இடம்பெற்றது.



புலம்யெர்ந்த நாடுகளிலும் இங்கும் இசை, நடனத்தில் ஆளுமைகொண்ட நம் இளம் தலைமுறையினரை ஒருசேர சங்கமமாக்கும் நோக்கில், 'கலா ரசனா' இந்த சங்கமம் நிகழ்வை தொடங்கியிருக்கிறது. இதுதான் முதல் நிகழ்வு. இம்முறை இது தாயகத்தினருடன் மாத்திரம் நடைபெற்றது. பத்மநாதன் ஷியாம்கிருஷ்ணாவின் வயலின் இசையும், பிரியதர்சினி வாகீசனின் 'நர்த்தன ஷேத்திரா' மாணவர்களது நடனமும் இடம்பெற்றது. 'நூபுர லாவண்யம்' என்று, இவர்கள் இந்த நடன நிகழ்வை அளித்தார்கள்.

திருப்புகழுடனான நாட்டை அலாரிப்பு. அபிநயமும் சேர இந்த அலாரிப்பு தோற்றுவித்த கம்பீரம், நிகழ்ச்சி முழுமையும் நிலைகொண்டது. வேகமான அசைவுகளும் நளினமுமான நடன அமைப்பில் வெளிப்பட்ட சித்தரிப்பு யுக்திகள் ரசனையும் பிரமிப்பும் சேர்த்தன.

பல தடவைகள் - பல அரங்குகளில் - பலர்வாயிலாக பார்த்த உருப்படிகளும் சித்தரிப்புகளும்தான். ஆனால், பிறழ்வில்லாத ஒரு புதுமையின் ரசனை ஒவ்வொன்றிலும் ஈர்ப்பானது.

பாலசரஸ்வதி காலத்திலிருந்து பார்க்கும் "பாரோ கிருஷ்ணையா..." பதம், ஆளுமைமிகும் ஒவ்வொருவரிலும் ஒவ்வொரு தடவையும் அது ஓர் அநுபவ நுகர்வாகும். அப்படி ஒரு சவால் நிறைக்கும் அந்த பதத்தையும் ஒருவர் அளித்தார்.

சிவனும் சக்தியுமாக, ஓர் ஆணும் பெண்ணும் அளித்த "சம்போ சங்கர சிவா..." ஏனைய நிகழ்வுகள், பலர் மாறி மாறி இணைந்த - துரிதமான அசைவுகளுடன், பல அழ



கான - நுணுக்கமான சித்தரிப்பாய் அமைந்த நாட்டிய நிலைகளுடன் கூடியவை. சிறுமிகளும் யுவதிகளுமாக 24 பேர் நிகழ்ச்சியில் பங்குபற்றியிருந்தனர். அலாரிப்பு, வர்ணம், தில்லானா, 'நான் இராவணன் பேசுகிறேன்' என்ற நாட்டிய நாடகம், திருஞான சம்பந்தர் கேணிக்கரையில் ஞானப்பால் உண்பதும், இலக்குவன் வரைந்த கோட்டுக்குள் இருந்த சீதையை இராவணன் கவர்ந்து, புட்பக விமானத்தில் கொண்டுசெல்வதுமான சம்பவங்கள் நாட்டிய நாடகங்களில் பொதுவாக சித்தரிக்கப்படுபவை. ஆனால், பிரியதர்சினியின் படைப்பாற்றலில் இவை விந்தை அழகுடயவை. பத்து தலைகளுடன் அந்த 'நல்லவன்' இராவணன் ஒரு கணம் விஸ்வரூபமாய்த் தோன்றி மறைந்தான்!

திட்டமான அடவுகள். நேர்த்தியான உடை, ஒப்பனை.



மண்டபத்தின் ஒளி அமைப்பு வெகு அலாதி..

முன்னதாக, பத்மநாதன் ஷியாம்கிருஷ்ணாவின் 'ராக சுதா' வயலின் இசை. தானே தன்கைபட உருவாக்கிய இரட்டை வயலினுடன் அவர் இந்த நிகழ்ச்சியை அளித்தார்.

வயலின் வாத்தியத்தில் ஒலியின் தரத்துக்காக அதன் அமைப்பில் சிறு மாற்றங்களைச் சிலர் செய்வதுண்டு. வயலின் வித்வான் எல். சுப்பிரமணியத்தின் சகோதரர் எல். சங்கர், இரட்டை வயலினை இந்த விதத்தில் அறிமுகம்செய்தார். தன்னுடைய இரட்டை வயலினுடனான முதல் கச்சேரி இதுவென்று ஷியாம்கிருஷ்ணா சொன்னார்.

பெஹாக் வர்ணத்துடன் ஆரம்பித்து, சாருகேசியில் ராகம்-தானம்-பல்லவி. நல்லூர் முருகன் பேரில் அவரே



தயாரித்திருந்தார். முன்னதாக, சாவித்திரி ராகத்தில் ஒரு கீர்த்தனை. பொதுவில் அரிதானதான இந்த ராகத்தில், எல். சங்கர் வாசித்திருந்த "ஆனந்த நடமாடும் தில்லை..." கீர்த்தனை. பின்னர், ஜனரஞ்சகமாக "சின்னஞ்சிறு கிளியே..." முத்தாய்ப்பாக, தனசிறி தில்லானா.

வாசிப்பின் சுகமும் விறுவிறுப்பும் எம். எஸ். கோபாலகிருஷ்ணன், எல். சுப்பிரமணியம் ஆகியோரை நினைவில் கொணர்ந்தன.

ஆக, லண்டன் கலா சனாவின் இந்த முதல் 'சங்கமம்' நிகழ்ச்சி, யாழ்ப்பாணத்தில் ஒரு முத்திரையைப் பதித்திருக்கிறது. யாழ் கலாசார மண்டபம் நிறைக்கும் அந்த ரம்மியத்துடன் இந் நிகழ்ச்சி அநுபவமாகவேண்டும் என்ற 'கலா ரசனா'வின் எண்ணமும் மண்டபம் நிறைந்த ரசிகர்களுடன் நிறைவாகியிருக்கிறது.

மார்கழியில் அடுத்த நிகழ்வு நடைபெறும். புலம்பெயர் நாடுகளிலுள்ள வித்துவ ஆற்றலுடனான இளம் தலைமுறையினர் கர்நாடக சங்கீதத்தில் வாய்ப்பாட்டு, வாத்திய இசையோ அல்லது பரதநாட்டியமோ தொடர்பு கொள்ளலாம்: kalarasaNalbNdbn@gmail.cbm

# சிவஞானம் சொல்ல வருவது என்ன? மாகாணசபை: தமிழ்அரசின் சமஷ்டியா?

ஐக்கிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாசவை ஆதரிக்கும் தீர்மானத்தை எடுத்த மத்திய செயல்குழு கூட்டம் கட்சி யாப்பின் பிரகாரமே கூடியது என்று இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் மூத்த துணைத் தலைவரும் வடக்கு மாகாண சபை அவைத் தலைவருமான சீ. வீ. கே. சிவஞானம் தெரிவித்துள்ளார்.

அவரே அந்தக் கூட்டத்திற்கு தலைமை தாங்கியவர் என்பதால் அதுபற்றிய விளக்கத்தைக் கொடுக்கவேண்டிய பொறுப்பு அவருக்கு இருக்கின்றது என்பதால், அவர் அதுபற்றி பேசியிருக்கிறார் என்று தெரிகின்றது.

'இலங்கை தமிழ் அரசு கட்சியின் யாப்பில் மத்திய செயல்குழு கூட்டத்துக்கு எத்தனை நாள் அறிவித்தல் வழங்கப்படுவது என்பது தொடர்பான ஏற்பாடு இல்லை. ஆகவே, எவ்வளவு நாளில் வேண்டுமென்றாலும் மத்திய செயல்குழு கூடுவதற்கு உரித்துண்டு. ஆனால், பொதுவாகவே, நான்கு நாட்களுக்கு மேற்பட்ட அறிவித்தலை வழங்கி வந்திருக்கிறோம். ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் ஏற்கனவே, நான்கு கூட்டங்களில் இந்த விடயம் தொடர்பாக பேசப்பட்டுள்ளது. ஆகவே, கடந்த முதலாம் திகதி நடைபெற்ற கூட்டம் முன்னைய நான்கு கூட்டங்களின் தொடர்ச்சியான கூட்டம். ஆகவே, இது ஒத்திவைக்கப்பட்ட கூட்டம். அதாவது, முக்கியமாக ஜனாதிபதி வேட்பாளரின் விஞ்ஞாபனங்களை பரிசீலித்து அறிவிக்கவேண்டும் என்று 18ஆம் திகதி கூடிய மத்திய செயல்குழுவில் முடிவு எடுக்கப்பட்டது. அதற்காக ஒரு குழு நியமிக்கப்பட்டது. இதில் நான், மாவை சேனாதிராசா, பொதுச்செயலாளர் சத்தியலிங்கம், சுமந்திரன், சிறீதரன் ஆகியோர் இருந்தோம். இதனை தொடர்ந்து மாவை சேனாதிராசா தாமாகவே சுமந்திரனிடம் அவ்வாறான ஓர் அறிக்கையை தயாரிக்குமாறு கேட்டிருந்தார். அந்த அறிக்கை தான் கடைசியாக நடந்த கூட்டத்தில் சுமந்திரனால் சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டது. ஆகவே, இந்தக் கூட்டங்கள் இரண்டு விடயங்கள் தொடர்பில் நடந்தன. ஒன்று பொது வேட்பாளர் மற்றது ஜனாதிபதி தேர்தல். எமது மத்திய குழுவில் 41 உறுப்பினர்கள். அதில், சம்பந்தனும் செல்வராஜாவும் காலமாகிவிட்டனர். எனவே, 39 பேரில் 26 பேர் கடந்த முதலாம் திகதி நடந்த கூட்டத்தில் பங்கேற்றார்கள். 11 பேர் இருந்தாலே கோரம். 26 பேர் உள்ளனர். இவர்களில் 18 பேர் பொது வேட்பாளரை ஆதரிக்கவில்லை என்று தெரிவித்தனர். நால்வரே பொது வேட்பாளரை ஆதரித்தனர். எனவே அவருக்கு ஆதரவு தெரிவிப்பதில்லை என்று முடிவானது."

இதுவே சிவஞானம் வெளியிட்ட அறிவிப்பின் முக்கிய விடயம். மத்திய செயற்குழுவைக் கூட்டுவதற்கு எத்தனை நாட்கள் அறிவித்தல் கொடுக்கவேண்டும் என்பது தொடர்பாக எதுவும் குறிப்பிடப்படவில்லை என்கிறார் அவர். அதுவல்ல தமிழ் மக்கள் மத்தியில் எழுகின்ற கேள்வி.

நல்லாட்சி அரசாங்க காலத்தில் ஐந்து ஆண்டுகளாக சுமந்திரனும் சம்பந்தனும் சேர்ந்து தயாரித்த புதிய அரசியலமைப்பை முழுமைப்படுத்தி அதனை நிறைவேற்றுவோம் என்று தேசிய மக்கள் சக்தி தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் தெளிவாக குறிப்பிட்டிருக்கின்றது. அதாவது சம்பந்தன், தீபாவளிக்கு வந்துவிடும், பொங்கலுக்கு வந்துவிடும் என்று தமிழ் மக்களுக்கு நம்பிக்கை ஊட்டி வந்த அந்த அரசியலமைப்பை- அதாவது பெயரில் அது எக்கராஜ்ய என்று இருந்தாலும், அது சமஷ்டி தான் என்று சுமந்திரன் வியாக்கியானம் தந்துகொண்டிருந்த அந்த தீர்வுப்பொதியை நிறைவுசெய்வதாக கூறிய தேசிய மக்கள் சக்தியை நிராகரித்தது எதற்காக என்பதற்கு அல்லவா அவர் விளக்கம் தந்திருக்கவேண்டும்.

இன்று தெற்கில் யார் அதிக வாக்குகள் எடுப்பார்கள் என்பதில் ஒரு தெளிவின்மை இருந்து கொண்டிருக்கின்றது. அனுரகுமாரவே தற்போதுவரை முன்னணியில் இருப்பதாகவே கூறப்படுகின்றது. அவ்வாறு இருக்கும் நிலையில் அவரை ஆதரித்து அவரின் வெற்றியை உறுதி செய்வதை விடுத்து, சஜித்துக்கு ஆதரவளிக்க ஏன் முடிவெடுக்கப்பட்டது என்பதையல்லவா அறிவதற்கு தமிழ் மக்கள் காத்திருக்கிறார்கள். சிவஞானம் சொல்வதுபோல, ஏற்கனவே நடந்த மத்தியகுழு கூட்டங்களின் தொடர்ச்சிதான் அந்தக் கடைசிக் கூட்டம் என்றால், இதற்கு முன்னர் நடைபெற்ற கூட்டத்தில், தேர்தல் விஞ்ஞாபனத்தில் எந்த வேட்பாளர் உள்ளக சுயநிர்ணய உரிமையுடன் கூடிய சமஷ்டியை தருவதாக உறுதியளிக்கிறாரோ அவரையே ஆதரிப்பது என்று முடிவெடுத்ததாக சொன்னது தமிழ் மக்களை ஏமாற்றியதாக ஆகாதா?

அல்லது சுமந்திரன் தயாரித்த அந்த 'எக்கராஜ்ய' புகழ் தீர்வுப்பொதி சமஷ்டியை வலியுறுத்தவில்லை. இந்தியப் பாணியிலான மாகாணசபைகள் தான் உண்மையான சமஷ்டி என்று புது வரைவிலக்கணம் ஏதாவது தயாரிக்கப்பட்டு விட்டதா?.

-அருண்மொழித்தேவன்- கனடா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ. நா. மனித உரிமைகள் பேரவை கூட்டத்தொடர், ஜனாதிபதி தேர்தல் இரண்டும் கவனத்திற்குரியவை!

ச. வி. கிருபாகரன், பிரான்ஸ்

தமிழ் நாட்டில், 1958ம் ஆண்டு வெளியான "நாடோடி மன்னன்" படத்தில் வெளியான பாட்டான 'தூங்கதே தம்பி தூங்கதே' மிகவும் அர்த்தம் உள்ள சினிமா பாடல். இப்பாட்டில், கூறப்படும் சில வரிகள், இன்று வடக்கு கிழக்கு வாழ் மக்களிற்கு மட்டு மல்ல, ஒட்டுமொத்தமாக உலக தமிழர்களிற்கு சில புத்தி மதிகள் ஆலோசனைகள் கூறுகிறது:

நீ-தாங்கிய உடையும் ஆயுதமும், பல சரித்திரக் கதை சொல்லும் சிறைக்கதவும்.... பொறுப்புள்ள மனிதரின் தூக்கத்தினால், பல பொன்னான வேலையெல்லாம் தூங் குதப்பா!

ஐ.நா.மனித உரிமை ஆணையாளரின் சிறிலங்கா பற்றிய அறிக்கை, ஆகஸட் 22ம் திகதி வெளியாகியுள்ள அறிக்கை, சிறிலங்காவை மிகவும் மோசமாக குறைகூறு கிறது. இவ் அறிக்கை பதினெழு பக்கங்களையும் ஆறு பத்து எட்டு பந்திகளையும், பல உப தலையங்களையும் உள்ளடக்கியதாக காணப்படுகிறது. இவ் அறிக்கை "ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் ஆணையாளரின் விரிவான அறிக்கை - சிறில்ங்கா மனித உரிமைகள் நிலை" யென பெயரிடப்பட்டுள்ளது.

நாளை 9ம் திகதி திங்கட்கிழமை ஐ.நா. மனித உரிமை ஆணையாளரினால் இவ் அறிக்கை ஜெனிவாவில் உள்ள மனித உரிமை சபையில் சமர்பிக்கப்படுவதை தொடர்ந்து, அங்கு நாடுகளும் அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிகளும் இவ் அறிக்கை பற்றிய தமது அபிப்பிராயங்களை எடுத்து கூறுவார்கள்.

இதேவேளை, சிறிலங்கா விடயத்தில் ஐ.நா. மனித உரிமை சபையின் இணை குழு நாடுகளான - கனடா, அமெரிக்கா, வட மசிடோனியா, பிரித்தானியா, மாலாவி, மொன்ரநீகிரோ போன்ற நாடுகளும், வேறு நாடுகளும் இணைந்து சிறிலங்கா மீது 2022ம் ஆண்டு ஒக்டோபர் மாதம், ஐ.நா.மனித உரிமை சபையினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானமான 51-1ஐ, தொடர்ந்து எப்படியாக மனித உரிமை சபையில் நகர்த்துவது பற்றி சிந்தித்து, முடிவெடுப்பார்கள். அவ் முடிவு மற்றைய மனித உரிமை சபை அங்கத்துவ நாடுகளினால் ஏற்று கொள்ளப்படுமானால், சபையில் வாக்கெடுப்பின்றி நிறைவேற்றப்படும். இல்லையேல், ஒக்டோபர் மாதம் முற்பாகுதியில், சிறிலங்கா தீர்மானம் மீதான வாக்கெடுப்பு சபையில் நடைபெறும்.

### தமிழர்களின் கடமை

வடக்கு கிழக்கு வாழ் தமிழர்களின் அரசியல் அவிலாசைகளை, நாம் கடந்த ஏழு தசாப்தங்களிற்கு மேலாக பெற்று கொள்ள முடியாமல், சிங்கள பௌத்தர்களை திட்டி தீர்க்கிறோம் என்பது மறுக்க முடியாத உண்மை. இதேவேளை நாம் யாவரும் ஈழத்தமிழர் என்ற ஒரே அடையாளத்துடன் பயணிக்காதது மாத்திரமல்லாது, எம்மிடையே பலர், அரசியல் விடயங்களில், சிங்கள பௌத்தர்கள் போல், கட்சிகள் மாதங்கள் பிரிவுகள் என்ற பேதம் பாராது, ஒன்றுபட்டு நின்று உழைக்க தவறியதன் விளைவே, எமது சுயநிர்ணயத்திற்கான ஆயுதவழி போராட்டமும் முற்று முழுதாக முடிவிற்கு கொண்டு வரப்பட்டது.


2005ம் ஆண்டு மகிந்த ராஜபக்சா ஜனதிபதியாக தேர்ந்தெடுக்கப்பட்டது முதல், சிங்கள பௌத்தர்களிடையே கட்சி, மதம், பிராந்திய பேதங்கள் மட்டுமன்றி, புலம் பெயர்ந்த பௌத்த சிங்களவர்களும் இணைந்து, தமிழர்களின் சுயநிர்ணய போராட்டத்திற்கு முடிவு கட்டினார்கள். ஆனால் எமது தமிழர்களில் பலர், பார்வையாளராகவும், கருத்துவாதிகளாகவும், விதண்டாவதிகளாகவும் நீண்ட தூக்கத்தில் இருந்தார்கள், இருகிறர்கள்.

இன்று நாம் எமது நிலம், மொழி, மதங்கள், சமூக கலை கலாச்சரங்கள், பொருளாதரம் போன்றவற்றை பறிகொடுத்த பின்னர் சர்வதேசத்தை, விசேடமாக இந்தியாவை நம்பி வாழ வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளோம். அயல் நாடான இந்தியா இல்லையேல், ஈழத்தமிழர்களின் கதை பல தசாப்தங்களுக்கு முன்னரே முடிந்திருக்கு மென்பது யாதார்த்தம்.


இன்றைய நிலையில், விசேடமாக இந்த செப்டம்பர் மாதம், ஈழத்தமிழர்களின் இருப்பிற்கு சவலாக இரு முக்கிய விடயங்கள் நடைபெறவுள்ளன. இவ்விடயங்களில் நாம் தொடர்ந்து தூங்குவோமானால், இன்னும் சில வருடங்களில் இலங்கைதீவில் ஈழத்தமிழர்களின் இருப்பு கேள்வி குறியாக்கப்படும்.

முதலாவதாக, செப்படம்பர் மாதம் 9ம் திகதி ஜெனிவாவில் ஆரம்பமாகவுள்ள ஐ.நா.மனித உரிமை சபையின் 57வது கூட்ட தொடர். நாம் இதை அலட்சியம் பண்ணுவோமானால், முள்ளிவாய்க்காலின் பின்னர் - சரியோ பிழையோ, அட்டை வேகமோ அசுர வேகமோ, ஈழத்தமிழர்களிற்கு சர்வதேச ரீதியாக ஏதோ ஒன்று நடக்கிறதானால், அது நிட்சயம் ஐ.நா. மனித உரிமை சபையிலேயே நடைபெறுகிறது. ஆகையால் இதில் ஈழத்தமிழர்கள் கண்ணும் கருத்துமாக இருக்க கடமைப்பட்டுள்ளார்கள்.

அடுத்து, களத்தில் 'தமிழ் பொது ஜனதிபதி வேட்பாளர். நாம் இதை, இலங்கைதீவில் நடைபெறும் ஜனதிபதி தேர்தல் என்று பார்ப்பதற்கு மேலாக, ஈழத்தமிழர்களின், அதாவது வடக்கு கிழக்கை தயாகமாக கொண்ட மக்களின், சமூக பொருளாதார அரசியலில், பல தசாப்தங்களாக நடைபெற்று வரும் அனர்ந்தங்களை, உலகிற்கு சர்வதேசத்திற்கு இந்தியாவிற்கு, சங்கே முளங்குவென, வடக்கு கிழக்கு வாழ் மக்களின் பெரும்பான்மை ஆதரவுடன், அறை கூவுவதற்கான தேர்தலாக, ஒவ்வொரு ஈழத்தமிழனும் மனதில் கொள்ள வேண்டும்.




> இன்றைய நிலையில், விசேடமாக இந்த செப்டம்பர் மாதம், ஈழத்தமிழர்களின் இருப்பிற்கு சவலாக இரு முக்கிய விடயங்கள் நடைபெறவுள்ளன. இவ்விடயங்களில் நாம் தொடர்ந்து தூங்குவோமானால், இன்னும் சில வருடங்களில் இலங்கைதீவில் ஈழத்தமிழர்களின் இருப்பு கேள்வி குறியாக்கப்படும்.



வடக்கு கிழக்கு வாழ் சீவில் சமூக செயற்பாட்டளர்களும், அனுபவம் வாய்ந்த அரசியல் தலைவர்களும் மாதம் வருட கணக்காக கலந்து ஆலோசித்து, ஈழத்தமிழர்களின் குறியிடாக, பா. அரியேதிரன் அவர்களை 'தமிழ் பொது ஜனதிபதி வேட்பாளராக', களமிறக்கியுள்ளார்கள். வடக்கு கிழக்கு வாழ் மக்கள் யாவரும், தமது சிந்தனைகளின், விருப்பு வேறுப்பின் குறியீடாக, திரு அரியேத்திரன் அவர்களிற்கு தமது வாக்குகளை அளித்து, அமோக வாக்குகளினால் சர்வதேசத்திற்கு காண்பிப்பது ஒவ்வொரு ஈழத்தமிழரின் கடமை.

இவ்விடயத்தில் நாம் இன்னும் தூங்குவோமனால் - சிங்கள பௌத்ததிற்கு, முதிர்ச்சியற்ற தமிழ் அரசியல் வாதிகளிற்கு, ஈழத்தமிழனை சேலாடையா பார்க்கும் யாவருக்கும், நாம் 'அவல்' போடுவதற்கு சமானாகும்.

ஆகையால் அரியேத்திரன் அவர்களிற்கு பெரும்பான்மையான வாக்களித்து - சிங்கள பௌத்ததிற்கு, முதிர்ச்சியற்ற தமிழ் அரசியல்வாதிகளிற்கு, ஈழத்தமிழனை சேலாடையா பார்க்கும் யாவருக்கும் 'வாய்கரிசி' போடுங்கள்.

### 57வது கூட்டதொடர்

ஐ.நா.மனித உரிமை விடயங்களில், கடந்த முப்பத்து நாலு வருடங்களாக, தொடர்ச்சியாக வேலை செய்து - இழிவுகள், அழுத்தங்கள், அனர்ந்தங்கள், மிரட்டல்கள், கொலை மிரட்டல்கள் போன்றவற்றுடன், மதிப்பிற்குரியவர்களின் நட்பையும் தோழமையும் பெற்று, இன்றும் களைக்கது இழைகாது தொடர்ச்சியாக எந்த எதிர்பார்ப்புமின்றி வேலை செய்வது என்பது, எமது தேசியம், எமது மக்கள், எமது எதிர்கால சந்ததியினர் நிட்சயம் தமது அரசியல் அபிலாசைகளுடன், சகல உரிகைளை பெற்று வாழ வேண்டும் என்ற ஒரு கொள்கைக்கவே.

ஆகையால் மற்றைய ஈழத்தமிழர்களும், தூக்கத்தில் காலத்தை கழியாது, பார்வையாளராக திகழது, மனித உரிமை செயற்பாடுகளில் உங்களால் முடிந்தவற்றை செய்வதற்கு முன் வரவேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐ.நா.மனித உரிமை சபையில் நான்பத்தி ஏழு நாடுகள் உறுப்பு நாடுகளாக உள்ளன. இவர்களது ஆதரவை நாம் உடனடியாக தேட வேண்டும். ஜனதிபதி தேர்தல் ஒருபுறம், மறுபுறம் 57வது கூட்ட தொடரில் ஈழத்தமிழர் கண்ணும் கருத்துமாக திகழ வேண்டும்.

உங்களால் முடிந்த வரை, உங்களிற்கு அருகமையில் உள்ள, கீழ் கொடுக்கப்பட்டுள்ள நாடுகளின் தூதுவரலாயங்களை நேரில் சந்தித்து, சிறிலங்காவிற்கு எதிராக ஐ.நா.மனித உரிமை சபையில் கொண்டுவரப்படவுள்ள தீர்மானத்திற்கு ஆதரவாக வாக்களிக்குமாறு கேட்டு கொள்ள வேண்டும்.

இதை ஜெனிவாவிலும் நிட்சயம் செய்யலாம். ஆனால் ஐ.நா.மனித உரிமை சபை ஆரம்பித்த பின்னர் செய்வது என்பது, ஓர் கண்காட்சி பிரச்சாரமே.

ஆகையால் தயவு செய்து தூங்காது தூதுவரலாயங்களை உடன் தொடர்பு கொள்ளுங்கள். மனு அனுப்புவதும், மின் அஞ்சல் அனுப்புவதும், உண்மையாக ஆதரவு தேடும் வழி அல்ல.

இந்த 2024ம் ஆண்டிற்கும், அதற்கு பின்னரான ஆண்டிற்குமான நாற்பத்தியெழு நாடுகளின் பெயர் பட்டியலை பிராந்திய ரீதியாக கீழ் கொடுக்கப்பட்டுள்து.

கிழக்கு ஐரோப்பிய நாடுகள் (6) - அல்பேனியா (2026), பல்கேரியா (2026), ஜோர்ஜியா (2025), லிதுவேனியா (2024), மண்டினீக்ரோ (2024), ருமேனியா (2025)

மேற்கு ஐரோப்பா மற்றும் பிற பிராந்தியங்கள் (7) - பெல்ஜியம் (2025), பின்லாந்து (2024), பிரான்ஸ் (2026), ஜெர்மனி (2025), லக்சம்பர்க் (2024), நெதர்லாந்து (2026), அமெரிக்கா (2024).

லத்தீன் அமெரிக்க கரீபியன் நாடுகள் (8) - அர்ஜென்டினா (2024), பிரேசில் (2026), சிலி (2025), கோஸ்டாரிகா (2025), கியூபா (2026), டொமினிகன் குடியரசு (2026), ஹோண்டுராஸ் (2024), பராகுவே (2024).

ஆப்பிரிக்க நாடுகள் (13) - அல்ஜீரியா (2025), பெனின் (2024), புருண்டி (2026), கேமரூன் (2024), கோட் டி வார் (2026), எரித்திரியா (2024), காம்பியா (2024), கானா (2026), மலாவி (2026), மொராக்கோ (2025), சோமாலியா (2024), தென்னாப்பிரிக்கா (2025), சூடான் (2025).

ஆசியா-பசிபிக் நாடுகள் (13) - பங்களாதேஷ் (2025), சீனா (2026), இந்தியா (2024), இந்தோனேசியா (2026), ஜப்பான் (2026), கஜகஸ்தான் (2024), குவைத் (2026), கிர்கிஸ்தான் (2025), மலேசியா ( 2024), மாலதீவு (2025), கத்தார் (2024), ஐக்கிய அரபு எமிரேட்ஸ் (2024), வியட்நாம் (2025).

### ஐ.நா. ஆணையாளர் அறிக்கை

இவ் அறிக்கையில் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களை பற்றி வாசித்து அதிர்ச்சி அடைந்துள்ளோம். அறிக்கையில் - நல்லிணக்கத்தை மேம்படுத்துவதற்காக ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்ட நல்லிணக்கத்திற்கான உபகுழு, தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களை, ஜனாதிபதி அடிக்கடி சந்தித்து வந்துள்ளதாக கூறபட்டுள்ளதுடன், அவ் முயற்சிகள் சரியான திசையில் செல்வதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

நல்லிணக்கம் பற்றி எந்த தமிழ் பாரளுமன்ற உறுப்பினரும், ஜனதிபதியை அடிக்கடி சந்தித்து வந்துள்ளது, ஐ.நா.மனித உரிமை ஆணையாளருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது போல், தமிழ் மக்கள் யாரும் இது பற்றி எதுவும் அறியவில்லை என்பது மனவேதனைகுரிய விடயம். இவர்கள் யார் யார் என்பதை தமிழ் மக்கள் அறிய வேண்டும்.

இவ்விடயம், இவர்களை பாரளுமன்றத்திற்கு அனுப்புவதற்கு வாக்களித்த மக்களிற்கு ஒன்றுமே தெரியாத நிலையில், நல்லிணக்கம் பற்றி தமிழ் பாரளுமன்ற உறுப்பினர்கள் அடிக்கடி சந்தித்துள்ளதும், இவை சரியான திசையில் செல்வது என்பதும், தமிழ் மக்களிற்கு வியப்பனா விடயமாகும்.

தெற்கின், சிங்கள பௌத்த பிரபல ஜனதிபதி வேட்பாளர்களின் தேர்தல் விஞ்பனங்களில், ஏழு தசாப்தங்களிற்கு உள்ளதற்கு மேலாக, இம்முறை தமிழர்களிற்கு என்னவுள்ளது என்பதை, வடக்கு கிழக்கு மக்களிற்கு, தமிழ் பொது ஜனதிபதி வேட்பாளருக்கு எதிராக விதண்டவாதம் புரியும், திரு எக்கிய ராஜ்ஜியமும், அவருடன் பயணிக்கு திரு மஞ்சல் ரை காறனும் - அரசியல் ஆ(கா)ய்வாளர்கள், அனுபவசாலிகள், சட்டம் தெரிந்தவர்கள், புலம்பெயர்ந்தேரில் புலன் பெயர்ந்தோர் கூற கடமைப்பட்டுள்ளார்கள்.

இதேவேளை, ஜனதிபதி தேர்தலை பாகிஸ்கரிக்குமாறு சுவரோட்டிகளை ஒட்டி, வெளிநாட்டிலிருந்து வரும் பணத்திற்கு கணக்கு காட்டும் பெயர்வழிகள், வடக்கு கிழக்கு வாழ் மக்களின் இன்றைய நிலைபாட்டை சர்வதேசத்திற்கு காண்பிப்பதை விரும்பாதவர்களாக காணப்படுகிறார்கள். இவர்களது நடவடிக்கை, என்னை போன்றவர்களிற்கு புதுமை அல்ல! எனெனில், இவர்கள் ஜெனிவா மனித உரிமை சபைக்கு வருகை தந்து, அங்கும் இதையே செய்பவர்கள்.

(15ஆம் பக்கம் பார்க்க)

# அதிபர் பொ. கனகசபாபதி கனடாவில் நினைவுகூரப்பட்டார்.

குரு அரவிந்தன்






மகாஜனக் கல்லூரி முன்நாள் அதிபர் அமரர் பொ. கனகசபாபதி அவர்கள் எம்மைவிட்டுப் பிரிந்த 10 வது ஆண்டு நினைவுநாள் கனடாவில் ரொறன்ரோவில் உள்ள மல்வேன் பூங்காவில் 4-9- 2024 அன்று நினைவு கூரப்பட்டது. பொதுவாக ஒருவர் மறைந்த தினம் என்றால் அது ஒரு சோகசம்பவமாக இருக்கும். அதைத் தவிர்ப்பதற்காகத்தான், அவர் புகுந்த மண்ணில் தமிழ் இனத்திற்கு ஆற்றிய சேவையைப் பாராட்டி அதிபரின் பிறந்த தினத்திலன்று ஒவ்வொரு வருடமும் இங்குள்ள நண்பர்கள், பழைய மாணவர்கள், மற்றும் குடும்பத்தினரால் நினைவு கூரப்படுகின்றது.

இங்குள்ள நண்பர்களும், பழைய மாணவர்களும் இணைந்து அவரது நினைவாக, உள்ளூராட்சி மன்றத்தின் உதவியுடன் மல்வேன் பொதுப் பூங்காவில் ஒரு மரத்தை நட்டு, அதன் கீழ் ஒரு இருக்கையையும் வைத்திருக்கிறார்கள். இருக்கையிலும், நினைவு மரத்தின் கீழும் அவரைப் பற்றிய விபரங்கள் குறிக்கப்பட்டிருக்கின்றன. பூங்காவுக்கு வரும் அத்தனை பேரும் அதை வாசித்துச் செல்லும்போது, நினைவுத்தூபி போல, தமிழர்கள் கனடாவில் வாழ்ந்த அடையாளத்தையும், அவர்கள் ஆற்றிய சேவையையும் அது காட்டி நிற்கின்றது. புலம் பெயர்ந்த தமிழர் ஒருவருக்குக் கிடைத்த பெருமையாக இது கருதப்படுகின்றது.

மகாஜனக்கல்லூரிக் கீதத்துடன் நிகழ்வு ஆரம்பமானதைத் தொடர்ந்து அகவணக்கம் இடம் பெற்றது. முதலில் பழைய மாணவர் சங்கத் தலைவர் ஆசிரியர் திரு. புவனச்சந்திரன் அவர்களின் உரை இடம் பெற்றது. அவர் தனது உரையில் பழைய மாணவர் சங்கத்தை கனடாவில் ஆரம்பித்து வைக்கக் காரணமாக இருந்த பெருமை மதிப்புக்குரிய திரு. பொ. கனகசபாபதி அவர்களையே சேரும். அவர் மகாஜனாவில் கற்பித்த காலத்தில் நானும் அங்கு ஆசிரியராக இருந்தேன். கனடாவில் 'அதிபர்' என்று அழைத்தால், தனது சிறந்த பண்புகளால் எல்லோரையும் கவர்ந்த இவரைத்தான் குறிப்பிடுவதாக எல்லோரும் புரிந்து கொள்வார்கள். இவர் புலம்பெயர்ந்த எங்களுக்கு வழிகாட்டியாக இருந்து ஆற்றிய சேவையால், தமிழ் இனம் இன்று தலைநிமிர்ந்து நிற்கின்றது' என்று தனது உரையில் குறிப்பிட்டார்.

அடுத்து முன்னாள் மகாஜனக் கல்லூரி ஆசிரியர் செ. சந்திரசேகரி, திரு. குமார் புனிதவேல், திரு. செல்வரத்தினம், திரு முருகையா, திரு முத்துலிங்கம், திரு ரவீந்திரன், குரு அரவிந்தன் ஆகியோர் நினைவுரை ஆற்றினர்.

குரு அரவிந்தன் தனது நினைவுரையில் அதிபரின் வாழ்க்கையின் முக்கிய கட்டங்களை எடுத்துரைத்தார். '1935 ஆம் ஆண்டு சண்டிலிப்பாயில் பிறந்த இவர், 1952 ஆண்டு ஸ்கந்தாவில் படித்து அதன்பின் உயர்கல்வியை திருச்சியிலும், சென்னையிலும் பெற்றார். அங்கு இவருக்குக் ஹோனேஸ் தங்கப்பதக்கம் கிடைத்தது. 1957 ஆம் ஆண்டு மகாஜனாவில் ஆசிரியராக இணைந்தார். 1970 ஏழாலை மகாவித்தியாலய அதிபராகவும், 1971 சோமஸ்கந்தா அதிபராகவும் பொறுப்பேற்றார் 1976 மகாஜனா அதிபராகப் பொறுப்பேற்றார். 1980 நைஜீரியாவுக்குப் பயணமானார். 1987 நைஜீரியாவில் இருந்து கனடா வந்தார். 1990 ஆம் ஆண்டு முதல் தமிழ் வகுப்பை நோர்த்யோக்கிலும், 1991 ஆம் ஆண்டு கிரடிட்கோஸ் வகுப்புகளையும் ஆரம்பித்து வைத்தார். 1992 ஆம் ஆண்டு நோத்யோர்க்கில் 13 தமிழ் வகுப்புகளை ஆரம்பித்தார். 1994 நோத்யோர்க் கல்விச் சபைக்கான தமிழ் பாட நூல்களைத் தயாரிக்கும் பொறுப்பை ஏற்றார். 1995 மணிவிழா கொண்டாடப்பட்டது. 1998 ரொறன்ரோ கல்விச் சபையில் தெற்காசிய பல்கலாச்சார பிரிவின் பொறுப்பை ஏற்றார். 2010 ஆம் ஆண்டு செம்மொழி மகாநாட்டில் கலந்து கொண்டு ஆய்வுக்கட்டுரையைச் சமர்ப்பித்தார். 2012 தனது ஐந்து நூல்களைச் சர்வதேச நாடுகளில் வெளியிட்டார். 2013 அதிபரைக் கௌரவிக்கும் முகமாக லான்ஸ்டவுனில் உள்ள தமிழ் கூட்டுறவு இல்லத்தினர் அங்குள்ள படிப்பகத்திற்கு அதிபரின் பெயரைச் சூட்டியிருந்தனர். 2014 ஆம் ஆண்டு டிசெம்பர் 24 ஆம் திகதி அவர் எங்களை விட்டுப் பிரிந்து விட்டார். 2015 ஆம் ஆண்டு மொன்றியல் மக்கள் நினைவஞ்சல் செலுத்திய போது மகாஜனாவின் சார்பில் இங்கிருந்து பலர் சென்று கலந்து கொண்டோம். தமிழர் தகவல் விருது பெற்ற இவருக்கு, 2015 ஆம் ஆண்டு கனடா தமிழ் எழுத்தாளர் இணையம் வாழ்நாள் சாதனையாளர் விருது கொடுத்து மதிப்பளித்திருந்தது.'

குரு அரவிந்தனின் உரையைத் தொடர்ந்து ரதி சாம்பவலிங்கத்தின் நன்றி உரையுடன் நிகழ்வு சிறப்பாக முடிவுற்றது.

---

# வியுக்தியார் பதில்கள்



உங்கள் கேள்விகளை அனுப்பவேண்டிய முகவரி

வியுக்தியார் பதில்கள்
ஈழநாடு, 707 ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
viyukthiyar@gmail.com

**இரா. இராஜேஸ்கரன்,**
**ஸ்ரேசன் வீதி, வவுனியா.**

**கேள்வி:** 'தமிழ்த் தேசிய நிலைப்பாடே எனது கொள்கை. இறுதிவரை அந்தக் கொள்கையில் பிறழ்வற்று பயணிக்கத் தலைப்பட்டுள்ளேன். இந்த அடிப்படையிலேயே, காலத்தின் தேவையுணர்ந்து தமிழ்ப் பொது வேட்பாளரை ஆதரிக்கும் நிலைப்பாட்டிலும் நான் உறுதியாக உள்ளேன் - என்று இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் சி. சிறீதரன் தெரிவித்துள்ளாரே?

**வியுக்தியார்:** அவரோட கட்சிக்குள்ள மல்லுக்கட்டுற சுமந்திரனும் தமிழ் தேசியம்தான் தன்ர கொள்கை எண்டுதானே சொல்லுறார். அதுதானே, 'எக்கராஜ்ய' எண்டது ஒற்றையாட்சி இல்லை, சமஷ்டி மாதிரி ஒற்றையாட்சி எண்டெல்லாம் விளக்கம் தந்தவர். அதுசரி, சிறிதரன் ஐயா பொதுவேட்பாளரை ஆதரிக்கிற நிலைப்பாட்டிலை இருந்தால் மாத்திரம் தமிழ் தேசியவாதி எண்டு நிரூபிக்க முடியுமா?. பொதுவேட்பாளருக்காக வேட்டியை மடிச்சுக்கட்டிக்கொண்டு றோட்டில இறங்கி அவருக்காக பிரச்சாரம் எல்லோ செய்யவேண்டும்.

**அ. சிவகணேஸ்,**
**மறவன்புலவு, சாவகச்சேரி.**

**கேள்வி:** ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் இலங்கை தமிழ் அரசுக் கட்சியினரும் இணைந்து மாகாண சபைத் தேர்தல்கள் திருத்தச் சட்டமூலத்தை விவாதத்துக்கு உட்படுத்தாது நிறைவேற்றி நாசப்படுத்தியுள்ளனர் என்று சிறீலங்கா பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் நாமல் ராஜபக்ஷ குற்றம் சுமத்தியுள்ளாரே.

**வியுக்தியார்:** அவர் சொல்வதும் நியாயமானதுதான். அவர் தான்செய்வேன் என்றால் செய்வேன் என்கிறார். தான் பொலிஸ் காணி அதிகாரத்தை வழங்கமாட்டேன் என்கிறார். ஆனால் ரணில் 'வரும் ஆனா வராது" என்ற பாணியில் சொல்லிக்கொண்டிருக்கிறார். அதுபோலவே தமிழ் அரசு காரர்களும், தத்தமது தனிப்பட்ட விருப்பு - வெறுப்புக்களுக்காகவே தமிழ் மக்களை பாவித்துக் கொண்டிருக்கிறார்கள். இந்த மாகாணசபை தேர்தல் திருத்தச் சட்டமூலத்தை எப்படி இந்த தேர்தலுக்கு பயன்படுத்தலாம் என்று ரணிலும், சுமந்திரனும் தத்தமது தேவைகளுக்கு பயன்படுத்த முனைந்ததால்தான் அது பற்றி நாமல் குற்றம் சுமத்தியிருக்கிறார்.

**செல்வா. கேசவன்**
**சங்கிலியன் வீதி, நல்லூர்.**

**கேள்வி:** "புதிய தலைமுறை நம்மைப் பார்க்கிறது. அந்த வருங்கால சந்ததிக்காக இந்த பயணத்தை மேற்கொள்கிறோம். ரணில் விக்கிரமசிங்கவின் வெற்றியிலேயே இலங்கையின் எதிர்காலம் தங்கியுள்ளது" - என்று பிரதமர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்துள்ளாரே.

**வியுக்தியார்:** ரணில் ஆட்சியில் தொடர்ந்தால் சில விடயங்களில் மாற்றங்கள் வராமல் அப்படியே தொடரும் என்பதால், அது நல்லது என்று இந்த வியுக்தியாரும் நினைப்பது உண்மைதான், ஆனால் பிரதமர் சொல்வது அதுவல்ல, இலங்கையின் எதிர்காலம் அவரது வெற்றியில் தங்கியிருக்கின்றதோ இல்லையோ, நமது பிரதமர் தினேஸ் குணவர்த்தனவின் அரசியல் எதிர்காலம் ரணிலின் வெற்றியில்தான் தங்கியிருக்கின்றது.

**எம். கௌதம்,**
**அமிர்தகழி, மட்டக்களப்பு**

**கேள்வி:** இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் மத்திய குழு உறுப்பினரும் முன்னாள் பாராளு மன்ற உறுப்பினருமான ஞா.சிறீநேசன், தமிழர் விடுதலை கூட்டணியின் தலைவர் அருண் தம்பிமுத்து ஆகியோர் தமிழ்ப் பொது வேட்பாளர் பா.அரியநேத்திரனுக்கு ஆதரவாக பிரசாரத்தில் ஈடுபட்டனராமே. இரு கட்சிகளுமே பொதுவேட்பாளரை ஆதரிக்கும் முடிவை எடுக்காதபோது இவர்கள் இவ்வாறு பிரச்சாரம் செய்வது கட்சிக்கட்டுப்பாட்டை மீறியது ஆகாதா?

**வியுக்தியார்:** தமிழ் அரசு கட்சியைப் பொறுத்தவரை, கட்சியே தனது கட்டுப்பாடுகளை இழந்து பல மாதங்கள் ஆகிவிட்டனவே. கட்சி முடிவெடுக்க முன்னரே -கட்சியின் தலைவர் பதவியை பிடிக்க முடியாத ஒருவரே, பொதுவேட்பாளரை ஆதரித்து பிரச்சாரம் செய்வேன் என்று சபதம் எடுக்க முடியும் என்றால், ஆதரவாக பிரச்சாரம் செய்வதற்கும் கட்சியின் முடிவு தேவையில்லைத் தானே என்று சிறிநேசன் நினைத்திருக்கலாம். அதுபோலத்தான், தமிழர் விடுதலைக் கூட்டணியின் ஆனந்தசங்கரி ஐயா பொதுவேட்பாளர் முடிவை எதிர்த்தாலும் கட்சியாக இன்னமும் யாரை ஆதரிக்கவேண்டும் என்று முடிவெடுக்கவில்லையே.

**ரி. ஜீவன்குமார்**
**வெள்ளவத்தை, கொழும்பு.**

**கேள்வி:** சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளால் நாட்டுக்கு பாதிப்பில்லை என தேசிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் அனுரகுமார திசாநாயக்க தெரிவித்துள்ளாரே. இதுகாலம்வரை தாங்கள் ஆட்சிக்கு வந்தால், சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளை மாற்றுவோம் என்று கூறிக்கொண்டிருந்தவர்கள் இப்போது அது பாதிப்பில்லை என்கிறார்களே எதற்காக?

**வியுக்தியார்:** அது வேறு ஒன்றும் இல்லை. இவர்கள் ஆட்சிக்கு வந்தால், சொல்வதை செய்துவிடுவார்கள் என்று மக்களும் நம்பத் தொடங்கிவிட்டது அவர்களுக்கும் தெரிந்துவிட்டதுபோலும். மக்கள் அவ்வாறு நம்புகின்றபோது செய்யாமல் விட்டாலும் கூடாது அல்லவா. அதுதான் தாங்கள் வந்தாலும் நிபந்தனைகளை ஏற்றுக்கொண்டு சிறிலங்கா ரெலிகொம், இலங்கை மின்சாரபை என்று அரச சொத்துக்களை தாங்களும் விற்பார்கள் என்று சொல்கிறார்கள் என்று நினைக்கின்றேன். அல்லது, அவர்கள் ஆட்சிக்கு வந்தால் அந்த நிபந்தனைகளை மாற்ற முயன்றால் நாடு மீண்டும் அதலபாதாளத்திற்கு வந்துவிடும் என்று மக்கள் அச்சமடைகிறார்கள் என்று நினைத்தார்களோ தெரியவில்லையே.

**க. தில்லைநாதன்,**
**மட்டுவில், சாவகச்சேரி**

**கேள்வி:** ஒற்றையாட்சியை முன்வைத்துள்ள சஜித் பிரேமதாஸவுக்கு வாக்களிக்குமாறு தமிழ் அரசுக் கட்சி கோரியுள்ளமை தனது அத்திபாரத்துக்கே வேட்டு வைக்கும் செயல் என்று தமிழ்த் தேசிய கட்சியின் தலைவர் என்.சிறீகாந்தா தெரிவித்துள்ளாரே?.

**வியுக்தியார்:** இரண்டாயிரத்து பதினைந்தாம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலில் மைத்திரிபால சிறிசேனவை தமிழ் தேசியக் கூட்டமைப்பு ஆதரிக்க முடிவெடுத்தபோது, சிறிகாந்தாவும் அந்தக் கட்சியில் ஒரு பங்காளியாக இருந்தாரே. அப்போது மைத்திரி ஒற்றையாட்சிக்கு வெளியே தீர்வு தருவதாக அவருக்கு உறுதியளித்திருந்தாரோ தெரியவில்லையே. அப்படி மைத்திரியை நம்பிக்கொண்டுதான் அவர் அந்த முடிவை எடுத்திருந்தால், இப்போது தமிழரசு கட்சியை விமர்சிப்பதை ஏற்றுக்கொண்டுதான் ஆகவேண்டும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பிரான்ஸ் தேர்தலில் நான்காம் இடம் பிடித்த கூட்டணியை சேர்ந்தவர் பிரதமராக தேர்வு!



பிரான்ஸ் நாடாளுமன்ற தேர்தலில் எந்த கட்சிக்கும் பெரும்பான்மை கிடைக்காத நிலையில், தேர்தல் முடிந்து இரண்டு மாதங்களுக்கு பிறகு மிஷேல் பார்னியே பிரதமராக பொறுப்பேற்றுள்ளார்.

'அனைத்து அரசியல் சக்திகளும் மதிக்கப்பட வேண்டும். அவர்களின் கருத்துகள் கேட்கப்பட வேண்டும்,' என்று கூறிய அவர் பிரான்ஸ் ஒரு மிக முக்கியமான தருணத்தை அடைந்துவிட்டது என்றும் அதனை பணிவுடன் எதிர்கொள்வேன் என்றும் தெரிவித்தார்.

தேர்தலுக்கு பிறகு இரண்டு மாதங்களாக அரசியல் கட்சிகள் மற்றும் சாத்தியமான வேட்பாளர்களுடன், பல கட்டமாக பேச்சுவார்த்தைகளை நடத்திய பிரான்ஸ் அதிபர் இமானுவேல் மக்ரோன், ஐரோப்பிய ஒன்றியத்தின் முன்னாள் தலைமை பிரெக்ஸிட் மத்தியஸ்தரான மிஷேல் பார்னியே பெயரை பரிந்துரை செய்தார்.

73 வயதான பார்னியே, வியாழன் மாலை பாரிஸில் உள்ள பிரதமர் இல்லத்திற்கு வந்தடைந்தார். கடந்த எட்டு மாதங்களாக பிரதமராக பதவி வகித்து வந்த பிரான்ஸின் இளைய பிரதமரான கேப்ரியல் அட்டலிடம் இருந்து பொறுப்பை ஏற்றுக்கொண்டார்.

சமீபத்தில் நடந்த நாடாளுமன்ற தேர்தலில் எந்த கட்சிக்கும் பெரும்பான்மை கிடைக்காததால் நிலையில், மூன்று பெரும் கட்சிகளாக பிரிந்துள்ள நாடாளுமன்றத் தில் தாக்குபிடிக்கக்கூடிய ஒரு அரசை அமைப்பதுதான் அவருக்கான முதல் பணியாக இருக்கும்.

ஆனால் அடுத்து என்ன நடக்கும் என்பதை ஆராய்ந்து செயல்படுவதற்காக பார்னியே தன்னுடைய அனைத்து அரசியல் திறன்களையும் பயன்படுத்த வேண்டும். ஏற்க னவே மைய-இடது சோசலிஸ்டுகள் அவரின் நியமனத் திற்கு எதிராக நம்பிக்கை இல்லா தீர்மானத்தை நிறைவேற்ற திட்டமிட்டுள்ளனர்.

சவால்கள், கோபம், கைவிடப்பட்ட உணர்வு, நகரங் கள் கிராமப்புறங்களில் நடக்கும் அநீதி என அனைத்துக் கும் வரும் நாட்களில் பதிலளிப்பேன் என்று அவர் கூறினார்.

நாடு எதிர்கொள்ளும் நிதி மற்றும் சுற்றுச்சூழல் சவால்கள் குறித்து பிரெஞ்சு மக்களுக்கு உண்மையைச் சொல்ல இருப்பதாகவும், நல்ல நம்பிக்கை உள்ள அனைவருடனும் மிகுந்த மரியாதை மற்றும் ஒற்றுமையுடன் பணியாற்ற இருப்பதாகவும் அவர் உறுதியளித்தார்.

பாரிஸ் ஒலிம்பிக்கின் போது, 'அரசியல் நிறுத்தம்' என்று கூறி பிரதமரை தேர்வு செய்ய மக்ரோன் 60 நாட் கள் எடுத்துக் கொண்டார்.

பிரதமர் இல்லத்தின் முன்பு தன்னுடைய பிரியா விடை உரையை நிகழ்த்திய அட்டல், 'பிரெஞ்சு அரசியல் நோய்வாய்ப்பட்டிருக்கிறது, ஆனால் நாம் அனைவ ரும் தீவிர மத உணர்வில் இருந்து விலகிச் செல்ல ஒப்புக்கொண்டால் குணப்படுத்த முடியும்' என்று கூறினார்.

2016 மற்றும் 2019 க்கு இடையில் ஐரோப்பிய ஒன்றியத்தில் இருந்து பிரிட்டன் வெளியேறுவது குறித்த தொடர் பேச்சுக்களை நடத்திய பார்னியே, அரசியல் முட்டுக்கட்டை பற்றிய கணிசமான அனுபவத்தைக் கொண்டுள்ளார்.

பிரான்ஸிலும், ஐரோப்பிய ஒன்றியத்திலும் நீண்ட அரசியல் வாழ்க்கையை கொண்டிருக்கும் அவர், வலதுசாரி குடியரசுக் கட்சியில் முக்கிய அங்கம் வகிக்கிறார்.

பிரான்ஸில் 'திரு பிரிக்ஸெட்' என்று அழைக்கப்படும் அவர், 1958-ஆம் ஆண்டில் ஐந்தாவது குடியரசு உருவானதில் இருந்து பிரான்ஸில் பிரதமராக பதவி வகிக்கும் நபர்களில் மிகவும் வயதானவர்.

மூன்று ஆண்டுகளுக்கு முன்பு பிரான்ஸ் அதிபர் தேர்தலில் போட்டியிடும் முனைப்பில் ஈடுபட்ட அவர், அவருடைய கட்சியின் வேட்பாளராக தேர்வாகும் முயற்சியில் தோல்வி அடைந்தார். குடியேற்றத்தை குறைக்கவும், அதனை கட்டுப்படுத்தவும் விரும்புவதாக அவர் தெரிவித்தார்.

### சவால்கள் என்ன?

மக்ரோனின் அதிபர் பதவி காலம் 2027-ஆம் ஆண்டு வரை நீடிக்கிறது. அதிபர் தேர்தலும், நாடாளுமன்ற தேர்தலும் சில வார இடைவெளியில் நடத்தப்படுவதால் பொதுவாக அதிபரின் கட்சியில் இருந்துதான் ஆட்சி அமைக்கப்படும்.

ஆனால், தன்னை 'காலத்தின் மாஸ்டர்' என்று என அழைத்துக்கொள்ளும் மக்ரோன் கடந்த ஜூன் மாதம் திடீரென தேர்தல்களை அறிவித்தார்.

தேர்தல் முடிவுகளில் இடதுசாரியான புதிய பாப்புலர் ஃப்ரண்டிற்கு அடுத்தபடியாக அவரது மையவாத கட்சி இரண்டாம் இடத்தை பிடித்தது.

அதிபர் மக்ரோன் பிரதமர் பதவிக்காக பல சாத்தியமான வேட்பாளர்களை நேர்காணல் செய்தார். ஆனால், தேர்தேடுக்கும் நபர் நாடாளுமன்றத்தில் முதல் முறையாக தோன்றும்போது, நம்பிக்கை இல்லா தீர்மானத்தை எதிர்கொண்டு வெற்றி பெறவேண்டும். இதன் காரணமாக மக்ரோனின் தேர்வு பணி சவால் மிகுந்ததாக இருந்தது.

பார்னியேயை நியமித்ததன் மூலம் பிரதமரும், வருங்கால அரசாங்கமும் ஸ்திரத்தன்மையையும், ஒற்றுமையையும் வழங்குவதை மக்ரோன் உறுதி செய்துள்ளதாக எலிசீ அரண்மனை (அதிபரின் அதிகாரப்பூர்வ இல்லம்) தெரிவித்துள்ளது.

நாட்டிற்கும் பிரெஞ்சு மக்களுக்கும் சேவை செய்யும் ஒரு ஒருங்கிணைந்த அரசாங்கத்தை உருவாக்கும் பணி பார்னியேக்கு வழங்கப்பட்டுள்ளது என்று எலிசீ அரண்





மனை தெரிவித்துள்ளது.


பிரதமராக பொறுப்பேற்றிருக்கும் பார்னியே முன் இருக்கும் சவால்களில் மிக முக்கியமான ஒன்று 2025-ஆம் ஆண்டுக்கான பட்ஜெட் தாக்கல் செய்வது. மேலும் நாடாளுமன்றத்தில் அக்டோபர் ஒன்றாம் தேதி அன்று அதற்கான வரைவு திட்டத்தை சமர்ப்பிப்பது ஆகும்.

இந்த கோடை காலத்தில் ஏற்கனவே பட்ஜெட் தொடர்பான பணிகளை பிரதமராக இருந்த அட்டல் மேற்கொண்டு வந்தார். ஆனால் அந்த பட்ஜெட் ஒப்புதல் பெறுவதற்கு தற்போது பார்னியேயின் அரசியல் திறன்கள் தேவைப்படுகின்றன.

பிரதமராக இவரை தேர்வு செய்திருப்பது புதிய பாப்புலர் ஃப்ரண்ட் கூட்டணி மத்தியில் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது. அக்கூட்டணி சார்பில் முன்னிறுத்தப்பட்ட பிரதமர் வேட்பாளரை மக்ரோன் நிராகரித்ததே இதற்கு காரணம் என்று கூறப்படுகிறது.

நான்கு கட்சிகளை உள்ளடக்கிய புதிய பாப்புலர் ஃப்ரண்ட் கூட்டணியில் இடம் பெற்றுள்ள பெரிய கட்சியான பிரான்ஸ் அன்பவுடின் தலைவர் ஜாங் லுக் மெலாங்ஷாங், பிரெஞ்ச் மக்களிடம் இருந்து தேர்தல் உரிமை திருடப்பட்டுவிட்டது என்று கூறினார்.

ஜூலை 7-ஆம் தேதி வெளியான முடிவுகளில் அதிக இடங்களை பெற்ற கூட்டணியில் இருந்து பிரதமரை தேர்ந்தேடுக்காமல், கடைசி இடத்தை பெற்ற குடியரசு கட்சியின் உறுப்பினர் ஒருவர் பிரதமராக தேர்ந்தேடுக்கப்பட்டுள்ளார் என அவர் குற்றஞ்சாட்டினார்.



தீவிர வலதுசாரி கட்சியான தேசிய பேரணிக் கட்சியின் தலைவரை குறிப்பிட்டு 'இது ஒரு மக்ரோங் - லூ பென் அரசாகதான் இருக்கிறது" என்று மெலாங்ஷாங் கூறினார்.

மக்ரோன்ற்கு எதிரான இடதுசாரி போராட்டங்களில் மக்களை பங்கேற்க அவர் அழைத்தார். இந்த போராட்டம் சனிக்கிழமை நடத்த திட்டமிடப்பட்டிருந்தது.

577 உறுப்பினர்களைக் கொண்டுள்ள பிரான்ஸின் நாடாளுமன்றத்தில் வாக்கெடுப்பில் வெற்றி பெற 289 நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவு புதிய பிரதமர் பார்னியேக்கு தேவை.

பார்னியேயின் அரசில் தனது தேசிய பேரணிக் கட்சி இடம்பெறாது என மரைன் லூா பென் தெளிவாக கூறி யுள்ளார். ஆனால், பரந்த கொள்கைகளை கொண்ட அர சியல் கட்சிகளை மதிக்கும் ஒருவர் பிரதமராக வேண்டும் என்ற தங்களது தேசிய பேரணிக் கட்சியின் முதல் தேவையை பூர்த்தி செய்யும் நபராக அவர் உள்ளார் என லூா பென் கூறியுள்ளார்.

அக்டோபர் 1-ஆம் தேதிக்கு முன் நாடாளுமன்றத் தில் முன் வைக்கப்படும் பிரான்ஸின் பட்ஜெட் வாயிலாக, பார்னியேயின் பேச்சு, செயல் மற்றும் முடிவுகள் என அனைத்தும் உற்று கவனிக்கப்படும் என்று தேசிய பேரணிக் கட்சியின் தலைவர் ஜோர்டர் பர்தெல்லா கூறினார்.

இங்கு விலைவாசி உயர்வு, பாதுகாப்பு, குடியேற்றம் போன்றவை பிரெஞ்ச் மக்கள் அதிகமாக எதிர்கொள் ளும் சவாலாக உள்ளது. வரவிருக்கும் வாரங்களில் இது முறையாக விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்படவில்லை என்றால், அதற்கு எதிரான அனைத்து அரசியல் நடவடிக்கைகளையும் நாங்கள் திட்டமிட்டுள்ளோம் என்றும் அவர் கூறினார்.

பார்னியே, மக்ரோனின் மையவாத கூட்டணியின் ஆதரவை பெறுவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. புதன்கிழமை மாலைக்கு பிறகே பார்னியே வேட்பாள ராக அறிவிக்கப்பட்டார்.

அதற்கு முன்பு வரை, இரண்டு அனுபவம் மிக்க அர சியல்வாதிகளில் யாரோ ஒருவர் தான் வேட்பாளர்களாக அறிவிக்கப்படுவார்கள் என்று எதிர்பார்க்கப்பட்டது.

ஒருவர் முன்னாள் சோசலிஸ்ட் பிரதமர் பெர்னார்ட் காசெனியூவ். மற்றொருவர் குடியரசுக் கட்சி யின் பிராந் தியத் தலைவர் சேவியர் பெர்ட்ராண்ட். ஆனால், நம்பிக்கை வாக்கெடுப்பில் இருவருமே வெற்றி பெறுவதற்கான வாய்ப்புகள் குறைவுதான் என்று பிறகு தெரிய வந்தது.

இடதுசாரி வேட்பாளராக களம் இறங்கிய பாரிஸின் மூத்த அரசு ஊழியரான லூசி காஸ்டெட்ஸை நிராகரித்ததற்கு விளக்கம் அளித்த மக்ரோன், அவர் முதல் தடையை கூட கடந்திருக்கமாட்டார் என கூறினார்.

பிரான்சில் அரசியல் நெருக்கடியை தூண்டியதாக அதிபர் மீது பரவலாக விமர்சனம் முன்வைக்கப்பட்டது.

சமீபத்திய கருத்துக் கணிப்பில் 51வீத பிரெஞ்சு வாக்காளர்கள் அதிபர் பதவி விலக வேண்டும் என்று கருதினர். அதற்கான வாய்ப்புகள் குறைவு.

ஆனால் 2017ல் மக்ரோனால் முதல் முறையாக பிரதமர் பதவிக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட எட்வார்ட் பிலிப், அடுத்த அதிபர் தேர்தலுக்கு இன்னும் மூன்று ஆண்டுகள் இருக்கின்ற சூழலில் தேர்தலில் போட்டியிட இப்போதே விருப்பம் தெரிவித்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஐந்தாண்டுத் திட்டம்

# இயலும் ஸ்ரீ லங்கா

ரநிலக்கி ரநாலய

கொள்கை வெளியீடு

THE MANIFESTO

## எனது பிரதான திட்டங்கள்

1. வாழ்க்கைச் செலவைக் குறைத்தல்
2. உயர் சம்பளங்களைக் கொண்ட அதிக தொழில்வாய்ப்புகளை உருவாக்குதல்
3. வரிச் சுமையைக் குறைத்தல்
4. பொருளாதார மறுசீரமைப்பைத் தொடர்ந்தும் பேணுதல்
5. உறுமய, அஸ்வெசும திட்டங்களை விரிவாக நடைமுறைப்படுத்தல்

முழுமையான கொள்கை வெளியீட்டைப் பெற

நான்
இந்த ஜனாதிபதித் தேர்தலில்
உங்கள் எதிர்காலத்திற்காகவே
போட்டியிடுகின்றேன்...
எமது இலங்கைக்காக...
ஆம்... உங்களுக்காக,
தேசத்துக்காக...
எதிர்வரும் ஐந்து ஆண்டுகளில்
நான் எனது பொறுப்புகளை
நிறைவேற்றுவேன்.
உங்களுடைய பிள்ளைகளுக்காக
நான் இந்த நாட்டை
சீரமைப்பேன்.

### திடமான பொருளாதாரம் பற்றாக்குறைகள் இல்லாத சந்ததி. வாழ்க்கைச் சுமைக்கு ஆறுதல். வரிச் சுமைக்கு நிவாரணம்.

கடந்த ஈராண்டுகளில் நடைமுறைப்படுத்தப்பட்ட, பொருளாதார மறுசீரமைப்பு வேலைத் திட்டத்தை முன்னோக்கிக் கொண்டு சென்று, நாட்டை ஸ்திரப்படுத்தி, மக்களைப் பற்றாக் குறைகளிலிருந்து மீட்கும் செயற்பாட்டுத் திட்டத்தைப் படிப்படியாக நடைமுறைப்படுத்தி வாழ்க்கைச் செலவைக் குறைத்தல்.

### தேரவாத வர்த்தகப் பொருளாதாரம்

- வறுமைக்குத் தீர்வு வழங்குவதில் முன்னுரிமை.
- பொருளாதார நெருக்கடியால் பாதிக்கப்பட்ட சமூகத்தின் வறிய குடும்பங்களுக்கு, அதிகபட்ச மாதாந்தக் கொடுப்பனவாக தொடர்ந்தும் ரூபா 15,000/-
- 24 இலட்சம் குடும்பங்களுக்கு அஸ்வெசும சமுர்தி நிகழ்ச்சித்திட்டத்துடன் அஸ்வெசும நிகழ்ச்சித்திட்டம் ஒன்றிணைக்கப்பட்டு வழங்கப்படும்.
- 20 இலட்சம் குடும்பங்களுக்கு உறுமய காணி உரித்து.
- ஒவ்வொரு பிரஜையும் ஒரு காணியை அல்லது வீட்டைப் பெற்றுக் கொள்வதற்கான சந்தர்ப்பம்.
- பொருளாதாரம் இப்போது ஓரளவுக்கு ஸ்திர நிலைக்கு வந்துள்ளதால் இப்போது நடைமுறையிலுள்ள வரிக் கட்டமைப்புகளை வலுப்படுத்தி, வரிச் சதவிகிதங்களில் திருத்தம்.
- தொழில்வல்லுனர்களுக்கு, வரிவிலக்கு, சேவை ஊக்குவிப்புக் கொடுப்பனவு.
- இடைக்கால வரிகளை இரத்துச் செய்து, வரி செலுத்தும் மக்களுக்கு நிவாரணம்.
- தொழில்முயற்சியாளர்கள் மீதான வரியைத் தளர்த்துதல்

### எல்லைகளுக்கு அப்பால் உலகை நோக்கி

- பொருளாதாரத்தை அடுத்த கட்டத்திற்கு நகர்த்துவதற்கு சர்வதேச சந்தையில் போட்டியிடக் கூடிய ஏற்றுமதி உற்பத்திப் பொருளாதாரம்.
- பிங்கிரிய முதலீட்டு மேம்பாட்டு வலயத்தை விரிவாக்குதல். 2025ல் காங்கேசன்துறை, பரந்தன், மாங்குளம் ஆகிய பிரதேசங்களில் 1000 ஏக்கர்களைக் கொண்ட புதிய பொருளாதார வலயங்கள். 2026ல் முதலாவது கட்டத்திற்காக அம்பாந்தோட்டையில் 4000 ஏக்கர். கண்டியில் 100 ஏக்கர்களைக் கொண்ட தொழில்நுட்ப வலயமொன்று. 2027ம் ஆண்டளவில் தொம்பேயில் 120 ஏக்கர்களில் புதிய முதலீட்டு வலயம்.

### கைக்கெட்டும் தூரத்தில் உலகம்

- பலாலி சர்வதேச விமான நிலையம் மேலும் அபிவிருத்தி செய்யப்படும்.
- ஹிங்குராக்கொடையில் சர்வதேச விமான நிலையமொன்று.
- கொழும்பு துறைமுகம் மேலும் விரிவாக்கப்பட்டு சர்வதேச துறைமுகத்துடன் போட்டியிடக் கூடிய மட்டத்திற்கு விருத்தி செய்யப்படல்.
- திருகோணமலைத் துறைமுகம் முழுமையாக அபிவிருத்தி செய்யப்படும்.
- 2025ல் கண்டி அதிவேக வீதியின் நிர்மாணப் பணிகள்.

### 2025ல் ஒரு இலட்சம் புதிய தொழில் வாய்ப்புகள்...

- வெளிநாட்டு அரசுகளால் நிதி வழங்கப்பட்ட கருத்திட்டங்கள் மீண்டும் ஆரம்பிக்கப்படுவதால் பல புதிய தொழில் வாய்ப்புகள்.
- சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்வாண்மையாளர்களின் வர்த்தக நடவடிக்கைகளை விரிவாக்குவதற்கு அரச உதவி. வர்த்தகங்கள் விரிவடையும் போது புதிய தொழில் வாய்ப்புகள்.
- விவசாய நவீனமயமாக்கல் நிகழ்ச்சித் திட்டங்கள் காரணமாக 2025ம் ஆண்டு, விவசாயக் கைத்தொழிலுடன் தொடர்புடைய ஆயிரக்கணக்கான தொழில் வாய்ப்புகள்.
- அரச ஊழியர்கள் ஓய்வு பெறுவதால், ஏற்படும் வெற்றிடங்களை நிரப்பி மேலும் பலருக்கு தொழில் வாய்ப்புகள்.
- தனியார் நிறுவனங்கள் வாயிலாக பயிற்சிகளை வழங்கி அந்த நிறுவனத்திலேயே தொழில் வாய்ப்பளித்தல். பயிற்சிக் காலத்தின் போது, அரசிடமிருந்து மாதாந்தம் ரூபா 35,000.
- சாதாரண தர மற்றும் உயர் தரப் பரீட்சைகள் நிறைவடைந்த பின்னர், அதற்கு அப்பால் உயர்கல்வியை எதிர்பார்க்காத 50,000 இளைஞர் யுவதிகளுக்கு சுற்றுலா, உற்பத்திக் கைத்தொழிற் துறையில் தொழிற் பயிற்சிப் பாடநெறியொன்றைப் பயில்வதற்கு அரசு மூலம் நிதி.

### நவீன விவசாயக் கலாசாரமும் மீன்பிடி வர்த்தகமும்

- போட்டித் தன்மையான ஏற்றுமதியை இலக்கு வைத்து, உயர் வருவாய் ஈட்டும் நவீன விவசாயக் கலாசாரம்.
- பயன்படுத்தப்படாத அரச காணிகளில் ஏற்றுமதியை இலக்காகக் கொண்ட வர்த்தகப் பயிர்களைப் பயிரிடுவதற்காக 300,000 ஏக்கர் காணி
- நெல் பயிரிடும் விவசாயிகளுக்கு 25,000 ரூபாவிற்கான நேரடி நிவாரணம்
- மீன்பிடியாளர்களுக்கு தொடர்ந்தும் அங்கீகரிக்கப்பட்டு நடை முறையிலுள்ள எரிபொருள் நிவாரணம்
- சிறிய மீன்பிடிப் படகுகளிலிருந்து, பலநாள் மீன்பிடிப் படகுகள் வரை கொள்வனவு செய்வதற்கான சலுகை வழங்கும் முறை.
- மீன்பிடித் துறைமுகங்களைச் சுற்றி வீடுகளையும் ஏனைய சமூக வசதிகளையும் கொண்ட மீன்பிடி நகரங்கள்.
- 2035ம் ஆண்டளவில் பால் உற்பத்தியை 380 மில்லியன் லீற்றர்களிலிருந்து 820 மில்லியன் லீற்றர்கள் வரை அதிகரித்து, உள்நாட்டு பாற் பண்ணையாளர்களின் ஒட்டுமொத்த வருமானத்தை 40 பில்லியன் வரை அதிகரித்தல்.

### அரச சேவைக்குப் புதியதோர் எதிர்பார்ப்பு

- 2025ம் ஆண்டை அடிப்படை ஆண்டாகக் கருதி, அனைத்து அரச ஊழியர்களுக்கும் (ஒவ்வொரு மூன்று வருடங்களுக்கும் ஒருமுறை திருத்தங்களுக்கு அமைவாக) வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவாக மாதாந்தம் ரூ.25,000.
- அரச சேவையின் குறைந்தபட்ச ஆரம்பச் சம்பளத்தை, 24% ஆல் அதிகரித்து, வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவுடன் மொத்த சம்பளத்தை ரூ.55,000 ஆகக் கருதி ஏனைய அனைத்துப் பதவிகளுக்குமான அடிப்படைச் சம்பளம் அதற்கேற்ப உயரும்.
- 40 வயதுக்குக் குறைந்த அரச ஊழியர்களுக்கு உயர்கல்விக்காக ஒரு வருட சம்பளத்துடன் கூடிய விடுமுறை.

### லயத்துக்குப் பதிலாக கிராமம்

- லயத்து அறைகளில் வாழும் மக்களுக்கு உயர் வசதிகளுடன் கூடிய புதிய கிராமங்கள்.
- தோட்டப் புறங்களின் ஆசிரியர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதற்கான நடவடிக்கை

### சுற்றுலா ஈர்ப்பு

- சுற்றுலாப் பயணிகளுக்குத் தேவையான வசதிகளை மேம்படுத்தி, சுமார் 2.5 மில்லியனாகவுள்ள சுற்றுலாப் பயணிகளின் வருகையை, அடுத்து வரும் ஐந்தாண்டுகளில் 5 மில்லியன் வரை அதிகரித்தல்.
- 35 நாடுகளுக்கு அக்டோபர் 1ம் திகதியிலிருந்து இலவச வீசா
- கொழும்பு, காலி, கண்டி, திருகோணமலை ஆகிய நாடுகளைப் பிரதான சுற்றுலா மத்திய நிலையங்களாக விருத்தி செய்தல்.
- அனுராதபுரம் கலாசார ரீதியான மரபுரிமை நகரமாகும்.
- தெற்கு, கிழக்குக் கரையோரங்களை உயர் மட்டத்திலான பயண முடிவிடங்களாக்குதல்.
- புதிய கலாசார வலயங்களாக இரணவில, பெந்தோட்டை, அப்புத்தளை வெலிமடை ஆகிய பிரதேசங்கள்.
- சுற்றுலாக் கைத்தொழில்களுக்குத் தேவையான நவீன பயிற்சி.

### நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்

- மருத்துவர்களுக்கு மென்மேலும் வெளி நாட்டுப் பட்டப் பின்படிப்பு வாய்ப்புகள்.
- சனத்தொகை விகிதாசாரங்களுக்கு ஏற்ற வகையில் சமவிகிதத்தில் புதிய மருத்துவமனைகள்
- சுகாதாரத் துறைப் பணிக்குழுவினருக்கு உள்நாட்டு வெளிநாட்டுப் பயிற்சிக்கான சந்தர்ப்பங்கள்.
- ஔடதங்களின் தரங்களை சான்றுப்படுத்துவதற்கான சர்வதேச மட்டத்திலான நிறுவனம்.
- நாடு முழுவதும் சிரேஸ்ட பிரசைகளுக்கான பராமரிப்பு மத்தியநிலையங்கள் .
- மாற்றுத் திறனாளிகளுக்கெனத் தனியான தொழில் ஒதுக்கீடு வழங்கப்படும்.

### அறிவு நிறைந்த சமூகம்

- தேசிய பயிலுனர் மற்றும் தொழில்நுட்பப் பயிற்சிகள் அதிகாரசபை மற்றும் இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபை என்பவற்றை இணைத்து. வொக்கேஷனல் ஸ்கில்ஸ் லங்கா (VSSL) நிறுவனத்தை அமைத்தல்.
- 2026 முடிவடைவதற்குள், 09 மாகாண தொழிற்சபைகளைத் தாபிப்பதுடன், மாகாண தொழிற்கல்விச் சபையின் கீழ் அனைத்துத் தொழிற்பயிற்சி நிலையங்களையும் தொழில்சார் கல்வியகங்களாக உயர்த்துதல்.
- புதிய கல்வி மறுசீரமைப்புடன் தொழில்நுட்ப யுகத்திற்குப் பொருத்தமான பாடசாலை வசதிகளை நவீனமயமாக்கல்.
- ஆசிரியர்களுக்குப் புத்தறிவையும் பயிற்சியையும் அளிக்கும் நிகழ்ச்சித் திட்டம் 2025ம் ஆண்டு ஆரம்பம்
- முன்பள்ளி ஆசிரியர்களுக்கு அங்கீகரிக்கப்பட்ட பயிற்சியுடன் முன்பள்ளிக் கல்வியின் மேம்பாட்டை ஒழுங்குபடுத்தல்.
- அனைவருக்கும் ஆங்கிலம் (English for All) நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் நாட்டின் அனைத்துப் பாடசாலைகளின் பிள்ளைகளும் ஆங்கில மொழி அறிவைப் பெறுவதற்கான நடவடிக்கை.
- ஆங்கில மொழிமூல ஆசிரியர்களின் பற்றாக்குறைக்கு தீர்வாகப் புதிதாக 2,500 ஆசிரியர்களை உடனடியாகச் சேர்த்தல்.

### யாழ்ப்பாணத்திற்கு ஓர் கங்கை

- வட பிராந்தியத்தில் குடிநீர் மற்றும் விவசாயத் தேவைகளுக்கான நீர்ப் பிரச்சனையைத் தீர்ப்பதற்காக வடக்கு மாகாணத்திற்கு ஓர் ஆறு. அதனோடு இணைந்ததாக பாலி ஆறு உள்ளிட்ட மேலும் பல கருத்திட்டங்கள்.
- யாழ்ப்பாணம் தொழில்நுட்பக் கல்வியின் மத்திய நிலையமாக
- திருகோணமலை பொருளாதாரத்தின் மத்தியநிலையமாக.

### மகளிருக்கு கௌரவம்

- பெண்களை வலுப்படுத்தும் புதிய சட்டம் நிறைவேற்றம்.
- பெண் தலைமைத்துவக் குடும்பங்களுக்கு 1,000,000 ரூபாவிற்கு அதிகபட்சம் 3% வட்டிவீதத்தில் நிவாரணக் கடன். சுயதொழில்களுக்கான வாய்ப்பு.
- பெண்ணுரிமைகளுக்கான ஆணைக்குழு
- வீட்டில், வீதிகளில், பணியிடத்தில், என பெண்கள் முகங்கொடுக்கும் வன்முறையைத் தடுப்பதற்கான நடவடிக்கைகள்.
- ஒவ்வொரு பொலிஸ் நிலையத்திலும் முறையானதும் முழுமையானதுமான மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் பிரிவொன்று பேணிச் செல்லப்படுவதை உறுதிப்படுத்தி மகளிர் பொலிஸ் உத்தியோகத்தர்களின் எண்ணிக்கையை அதிகரித்தல்.
- நுண் நிதிக் கடன் சுமையால் வாடும் பெண்களுக்கு நிவாரணம்

### இளமை வசந்தம்

- வீட்டிலிருந்தே வருமானமீட்டக் கூடிய Digital Marketing Freelancing மற்றும் இலத்திரனியல் வர்த்தகம் (E Commerce) போன்ற பாடங்கள் பற்றிய பயிற்சிகள்.
- புதிய சந்ததியினரின் கலந்துரையாடல்கள் (Gen Z Diologue) வாயிலாக இளைஞர்களின் கருத்துகள் அரசாட்சியில்.
- மாகாண இளைஞர் மத்திய நிலையங்களை மீண்டும் வலுப்படுத்தி, அனைத்து வசதிகளையும் வழங்க நடவடிக்கை.

### டிஜிட்டல் ஸ்ரீ லங்கா

- பொருளாதாரத்தில் டிஜிட்டல் பங்கை 300% ஆல் அதிகரித்து, அனைவருக்கும் பயனளிக்கும் சூழலொன்று.
- டிஜிட்டல் துறையில் முதலீட்டு வாய்ப்புகளை அதிகரித்து புதிய தொழில் வாய்புகளை உருவாக்கல்.
- இலங்கையை ஒரு உலகளாவிய டிஜிட்டல் சக்தி நிலையமாக்குதல்,

### இராணுவ வீரர்களிடையே ஓரே பதவி ஓரே ஓய்வூதியம்

- இராணுவ வீரர்களிடையே ஒரே பதவிக்கு ஒரே ஓய்வூதியம்
- சர்வதேச சமாதான செயற்பாடுகளில் இராணுவ உறுப்பினர்களுக்கு அதிக சந்தர்ப்பம்.

### முறைசாரா தொழில்களுக்கு ஓய்வூதியம்

- முன்பள்ளி ஆசிரியர்கள், முச்சக்கரவண்டி சாரதிகள், தனியார் பஸ் வண்டி ஊழியர்கள், மூட்டை தூக்குபவர்கள், மேசன்மார், துப்புரவுத் தொழிலாளர்கள், போன்ற முறைசாரா தொழில்களில் ஈடுபட்டுள்ள ஊழியர்களுக்கு பங்களிப்பு ஓய்வூதியம் 2025லிருந்து.
- தொழில் ரீதியான கௌரவம் உரித்தாகும் வகையில் NVQ சான்றிதழ்

### கலைகளை மிளிரச் செய்தல்

- எமது கலாசார அடையாளங்களைப் பாதுகாக்கும் கலைஞர்களை சர்வதேசம் வரை கொண்டு செல்வதற்கான வேலைத்திட்டம்.
- கொழும்பு 07 ஆனந்த குமாரசுவாமி மாவத்தைக்கு அண்மையில் ஆனந்த குமாரசுவாமி சர்வதேச கலை மற்றும் கலாசார கேந்திரம்.
- அக் கேந்திர நிலையத்தின் கீழ் தெற்காசிய கலாசார கேந்திரங்களை உருவாக்குதல்.
- இளம் சந்ததியினருக்காக பொப் இசை மற்றும் நடனக் கலை நிலையம்.
- தணிக்கைச் சபையை இரத்துச் செய்து பொதுவான கலை வகைப்படுத்தல் சபையொன்று.

රනිල් වික්‍රමසිංහ
ரணில் விக்ரமசிங்ஹ
**Ranil Wickremesinghe**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழ் சிவில்...

போராடி வருகின்ற தமிழ்த் தேசம் தனது உயிரினும் மேலாகக் கருதி வரும் தேசிய அபிலாசைகளை வெளிப்படுத்துவதற்கான ஒருவாய்ப்பாக வரவிருக்கின்ற தேர்தலைப் பயன்படுத்துவதற்காக தேர்தலில் எம்மால் முன்மொழியப்பட்டுள்ள பா. அரியநேத்திரனுக்கு எமது வாக்குகளை வழங்க வேண்டும் .

1982 முதல் இன்றுவரை இலங்கையில் நடைபெற்ற சனாதிபதித் தேர்தல்கள் எல்லாம் சிங்கள-பௌத்த பேரினவாதத் தலைவரைத் தேரந்தெடுப்பதாகவே அமைந்தன. இத் தேர்தல்களில் தமிழ் மக்கள் ஆதரவளித்த, தென்னிலங்கையின் பிரதான அரசியற் கட்சிகளைச் சேர்ந்த சிங்கள வேட்பாளர்கள் கூட தமிழ் மக்களின் அபிலாசைகளை ஏற்றுக் கொண்டதுமில்லை, தமிழ் மக்களின் வாக்குகளைப் பெற்று வெற்றிபெற்ற சனாதிபதிகளும் தமிழ் மக்களுக்கு எதிரான இனவழிப்பு நடவடிக்கைகளைக் கைவிட்டதுமில்லை. அதனால் இனிவரும் சனாதிபதித் தேர்தல்களிலும் வழமை போல் தென்னிலங்கையின் பிரதான அரசியற் கட்சிகளைச் சேர்ந்த சிங்கள வேட்பாளர் ஒருவருக்கு வாக்களிப்பதில் எமக்கு எந்த ஒரு மாற்றமும் ஏற்படப் போவதில்லை என்பதே வரலாறு எமக்குத் தரும் வழிகாட்டலாகும்.

எனவேதான் இம்முறை நடைபெறவுள்ள சனாதிபதித் தேர்தலைத் தமிழ் தேசத்தின் அரசியல் நிலைப்பாடு தொடர்பான தமிழ் மக்களின் தெளிவான ஆணை ஒன்றைச் சர்வதேசத்திற்கும் சிங்கள மக்களுக்கும் வெளிப்படுத்தும் வகையிலான தேர்தலாக மாற்றிப் பயன்படுத்தும் நோக்கில் ஒரு தமிழ்ப் பொது வேட்பாளரை நிறுத்தும் கூட்டு முயற்சியில் தமிழ் சிவில் சமூக அமையமும் இணைந்து கொண்டது.

சங்குச் சின்னத்தில் போட்டியிடும் தமிழ்ப்பொது வேட்பாளரான அரியநேத்திரனுக்கு அளிக்கப்படும் வாக்குகள் ஒரு தனி நபருக்கான வாக்குகள் எனக் கருதாமல், அவ்வாக்குகள் தமிழர்களின் அரசியல் நிலைப்பாட்டை வெளிப்படுத்துவதற்கான வாக்குகளே என்ற புரிதலின் அடிப்படையிலேயே பொது வேட்பாளர் எனும் இச்செயற்திட்டத்தில் நாம் இணைந்து கொண்டோம்.

எமது பொது வேட்பாளரின் தேர்தல் விஞ்ஞாபனம் தயாரிக்கப்படும் வேளையில், ஒற்றையாட்சியைத் தமிழ் மக்களால் தீர்வாக ஆராயவும் முடியாது எனக்கூறியது போல, 13ஆம் திருத்தத்தையும் தீர்வொன்றின் அடிப்படையாகக்கூட ஏற்க முடியாது என வெளிப்படையாக நிராகரிக்க வேண்டும் என தமிழ் சிவில் சமூக அமையத்தினராகிய நாம் எப்போதும் போல உறுதியாகக் கோரியிருந்தோம்.

இத்தகைய பின்னணியில், தேர்தல் விஞ்ஞாபனம் தொடர்பான எமது விரிவான வாசிப்பையும் நிலைப்பாட்டையும், பின்வரும் விடயங்கள் தொடர்பில் பகிர்ந்துகொள்ள விரும்புகிறோம்.

1. அரசியல் தீர்வின் பகுதியாக உருவாக்கப்படும் புதிய அரசியலமைப்பானது ஒரு புதிய கூட்டு அரசை இத்தீவில் உருவாக்குவதாக அமைய வேண்டும். தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமை, இறைமை ஆகியவற்றினை ஏற்றுக் கொண்டதன் அடிப்படையில் தேசங்களின் ஒன்றிணைவாக அமையும் அரசாக அது அமைய வேண்டும். அதாவது புதிய அரசானது ஒரு பன்மைத் தேசிய அரசு என்ற அடிப்படையில் கட்டமைக்கப்பட வேண்டும்.

2. ஒற்றையாட்சி அரசு முறைமையையும் அதனது ஒரு அங்கமான 13ஆம் திருத்தத்தையும் தமிழ் மக்கள் முற்றாக நிராகரிப்பதோடு, இவை அரசியற் தீர்வுப் பேச்சுவார்த்தைக்கான ஆரம்பப் புள்ளியாகக் கூட அமைய மாட்டாது என்பதே தமிழர்களின் நிலைப்பாடாகும். ஒற்றையாட்சி அரசுக்குட்பட்ட எந்தவொரு பேச்சுவார்த்தையிலும் தமிழர் தரப்புப் பங்குபற்றக் கூடாது.

3. தமிழர்களின் சுயநிர்ணய அலகானது, அவர்களின் தாயகமானது, ஒன்றிணைந்த (தற்போதைய) வடக்கு கிழக்கு மாகாணங்களை கொண்டதாக அமைய வேண்டும். குறித்த சுயநிர்ணய அலகிற்குள் முஸ்லீம் மக்களின் நியாயமான அரசியல் உரிமைகள் தொடர்பில் திறந்த மனதோடு தமிழ்த் தரப்பு பேச்சு நடத்தத் தயாராக இருக்க வேண்டும். .

4. பாதுகாப்பு, நாணயக் கொள்கை உட்பட ஒரு சில விடயங்கள் மாத்திரமே மத்திய அரசின் அதிகார எல்லைக்குள் இருப்பதோடு எஞ்சிய அதிகாரங்கள் மாநிலங்களிற்கு உரியவையாக அமைய வேண்டும். குறிப்பாக கல்வி, அரச காணி, சுகாதாரம், சட்டம் ஒழுங்கு, வரி இறுக்கும் அதிகாரம் ஆகியன நிச்சயமாக மாநிலங்களுக்கு உரிய அதிகாரங்களாக இருக்க வேண்டும் என்பது உள்ளிட்ட அடிப்படை விடயங்களை உள்ளடக்கி தமிழ் மக்கள் பேரவையால் தமிழ் மக்களின் கருத்துகளை உள்வாங்கி உருவாக்கப்பட்ட அரசியலமைப்பு முன்மொழிவைத் தமிழ் மக்கள் தமது அரசியல் நிலைப்பாடாக முன்வைக்க வேண்டும்.

5. தொடரும் இனவழிப்பின் ஒரு பகுதியாக போரின் போது தமிழ் மக்களுக்கு எதிராக இழைக்கப்பட்ட இனப்படுகொலைக்கு பன்னாட்டு குற்றவியல் விசாரணையை தமிழ் மக்கள் வேண்டுவதோடு, உண்மையைக் கண்டறிதல் உள்ளிட்ட உள்ளக செயன்முறைகள் மூலமாக பொறுப்புக்கூறலுக்கான முயற்சிகள் சாத்தியமற்றவை எனத் தமிழ் மக்கள் கருதுகின்றனர்.

6. 2009இல் ஆயுதப்போர் முடிவடைந்த பின்பும் வழமைபோன்றும், பல்வேறு புதிய வழிகளிலும் முன்னரிலும் விட மூர்க்கமாகவும் வேகமாகவும் தமிழ் மக்களின் மேலாகக் கட்டமைக்கப்பட்ட இனவழிப்பைச் சிறீ லங்கா அரசுகள் தொடர்வதைத் தடுத்து நிறுத்த சர்வதேச தலையீடும், சர்வதேச அனுசரணையுடன் கூடிய பொறிமுறையும் கட்டாயமானதும் அவசரமானதுமான தேவைகளாகும்.

7. தமிழ் தேசம் தமக்குரித்தான சுயநிர்ணய உரிமையின்பாற்பட்டு சர்வதேச அளவில் ஏற்றுக் கொள்ளப்பட்ட வழிமுறையான பொது வாக்கெடுப்பு (ஒப்பங் கோடல்) ஒன்றின் மூலம் தமது அரசியல் தெரிவை மேற்கொள்ளும் வகையில் ஐ.நா.வினால் மேற்பார்வை செய்யப்படும் ஒரு பொது வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும் எனக் கோருகின்றனர்.

ஆனால், 13ஆம் திருத்தத்தை நிராகரித்து தேர்தல் விஞ்ஞாபனமானது தெளிவாக நிலைப்பாடு எடுக்கவில்லை என நாம் கருதுகிறோம். ஆயுத மோதல்களுக்குப் பின்னர் இனப்பிரச்னைக்கான தீர்வைப் 13ஆம் திருத்தத்திற்குள் முடக்குவதை நோக்கமாகக் கொண்டு உரையாடல்கள் திட்டமிட்டுக் கட்டமைக்கப்பட்டு வருகின்றன. ஆனால் அனுபவ ரீதியாக மாகாண சபை முறையானது எவ்விதத்திலும் எமது நாளாந்த பிரச்னைகளைக்கூடக் கையாள்வதற்குப் போதுமானதன்று என்பது எமது பட்டறிவு.

தமிழர்களைப் பிரதிநிதித்துவப் படுத்தும் கட்சிகளிற் பெரும்பாலானவை ஒற்றையாட்சியை மறுப்பதாகத் தமிழ் மக்களுக்குச் சொன்னாலும், பிராந்திய மற்றும் பூகோள அரசியற் சக்திகளின் அழுத்தத்தின் காரணமாக நடைமுறையில் "13 அல்லது 13 பிளஸ்" என்ற வரையறைக்குள்ளேயே, அதாவது ஒற்றையாட்சி முறைமைக்கு உட்பட்டே, தமது நடைமுறை அரசியலைச் செய்து வருகின்றனர். இது தவறானது எனத் தமிழ் சிவில் சமூக அமையம் கடந்த 15 வருடங்களில் பல முறை சுட்டிக் காட்டியுள்ளது.

எனவே, தமிழ் சிவில் சமூக அமையம் இந்நிலை தொடர்பில் ஆழ்ந்த கவலையும் கரிசனையும் கொள்கின்ற அதே வேளை தமிழ்ப் பொதுக் கட்டமைப்பு என்ற தமிழ்த் தேசிய அரசியல் முயற்சி வெற்றி பெற வேண்டும் என நாம் வலுவாக நம்புகின்றோம், விரும்புகின்றோம். இந்தப் புரிதலின் அடிப்படையிலேயே நாம் தமிழ்ப் பொது வேட்பாளருக்கு வாக்களிக்கக் கோருகின்றோம். என்றுள்ளது. (அ)

## வடக்கு மக்களை...

வாழ்க்கைச் செலவு அதிகரித்த மட்டத்திலேயே உள்ளது. ஆகவே ரூபாயை வலுவடைய செய்து நிவாரணத்தை வழங்க நடவடிக்கை எடுத்து வருகின்றோம். 2025 ஆம் ஆண்டில் அதனை முழுமை
யாக வழங்க முடியும். பெண்கள் மற்றும் சிறுவர்களுக்கு எதிரான வன்முறைகளுக்கு எதிராக சட்டங்கள் உருவாக்கப்படும். பெண்கள் பாதுகாக்கப்படவேண்டும். மாகாண சபைகளுக்கு அரசாங்கத்துடன், பணிபுரிவதற்காக அதிகாரம் வழங்கப்படும். அதன் ஊடாக மாகாண சபைகளை வலுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.

அத்துடன், அநுரகுமார திஸநாயக்கவும் யாழ் மக்களின் வாக்குகளை கோரினார். நாம் நிச்சயம் வெற்றி பெறுவோம். தென்னிலங்கை மக்களின் ஆதரவு தமக்கு உள்ளது. ஆகவே நீங்களும் பங்குதாரர்களாகவேண்டும் என்றால் வாக்களியுங்கள் என அச்சுறுத்தும் பாங்கில் யாழ். மக்களுக்கு தெரிவித்தார். அநுரகுமாரவின் மக்கள் விடுதலை முன்னணி பாங்கு இதன் ஊடாக வெளிப்பட்டுள்ளது. அதற்காக அநுரகுமார திஸநாயக்க நிச்சயம் வெற்றி கொள்ள மாட்டார். அதனை உறுதிபட தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

அதேபோன்று தென் பகுதி சிங்கள மக்களின் பெயரை தவறாக பயன்படுத்திமையக்காக அவர்களிடமும் அவர் மன்னிப்பு கேட்க வேண்டும்.

சஜித் எதிர்க்கட்சி தலைவராக சிறந்த முறையில் செயல்பட்டிருந்தால் அநுர இவ்வாறு செயல்பட மாட்டார் அல்லவா. நாட்டை கட்டியெழுப்ப வேண்டும் அதனை ஊடாக முன்னோக்கி பயணிப்பதே எம்முடைய எதிர்பார்ப்பாகும். ஆகவே, செப்ரெம்பர் 21ஆம் திகதி காஸ் சிலிண்டருக்கு வாக்களித்து என்னை வெற்றியடைய செய்ய வேண்டும் என கேட்டுக்கொள்கின்றேன். அவ்வாறு வாக்களிக்களிக்கவில்லையாயின் எரிவாயுவும் இல்லை நாட்டின் அபிவிருத்தியும் இல்லை என்றே கூற முடியும்-என்றார்.

இந்த கூட்டத்தில் கல்வி அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த, துறைமுகங்கள், கப்பல் மற்றும் விமானப் போக்குவரத்துத்துறை அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா, கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான், முன்னாள் கல்வி இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன் கட்சியின் ஆதரவாளர்கள் என பலர் கலந்து கொண்டனர். (அ)

## வாக்குச்சீட்டு...

செய்ய எதிர்பார்த்துள்ளதாக அரச அச்சகம் குறிப்பிட்டுள்ளது. இம்முறை ஜனாதிபதித் தேர்தலில் ஒரு கோடியே 71 இலட்சத்து 40 ஆயிரத்து 354 பேர் வாக்களிக்க தகுதி பெற்றுள்ளனர். (அ)

## அரியநேத்திரனு...

ஆணைக்குழு என்பவற்றின் கவனத்துக்குக் கொண்டு செல்லப்பட்டது. தேர்தல்கள் செயலகம், முல்லைத்தீவு பொலிஸார் ஆகி யோர் இணைந்து நேற்று மேற்கொண்ட விசாரணையில் மேற்படி ஆசிரியர் சங்குச் சின்னத்துக்கு வாக்களித்த வாக்குச்சீட்டைப் படம் எடுத்தமை கண்டுகொள்ளப்பட்டது. இதையடுத்து அந்த ஆசிரியர் கைது செய்யப்பட்டார். அவரை நீதிமன்றத்தில் முற்படுத்தப் பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (அ)

## சஜித்துக்கு...

நடைபெற்றிருந்தது.

இதன்போது, தமிழ் அரசு கட்சியின் மத்திய குழுவின் முடிவு தொடர்பில் மக்கள் கேள்வி எழுப்பியிருந்தனர். இதன்போதே அரியநேத்திரன் சஜித் பிரேமதாஸவின் கடந்த கால நடவடிக்கைகளை சுட்டிக்காட்யிருந்தார். தீவிர பௌத்தவாதியான பிரேமதாஸ வடக்கு - கிழக்கில் ஆயிரத்து நூறு விகாரைகளை கட்டும் திட்டத்தை கொண்டு வந்த ஒருவர். அந்தத் திட்டத்தின் அடிப்படையில்தான் திருகோணமலையின் பல பகுதிகளில் விகாரைகள் நிர்மாணிக்கப்பட்டன என்பதை நீங்கள் மறந்து விடக் கூடாது - என்றும் அரியநேத்திரன் குறிப்பிட்டார். (ஐ)

## 14 இந்திய...

பயணித்த 3 படகுகளும் கையகப்படுத்தப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

கைது செய்யப்பட்ட மீனவர்களை யாழ்ப்பாணம் கடற்றொழில் திணைக்களத்திற்கு அழைத்து சென்ற இலங்கை கடற்படையினர், அவர்களிடம் விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் கடற்படை பேச்சாளர் தெரிவித்தார். (அ)

## ரணிலின்...

உறுப்பினர்கள் ஜனாதிபதிக்கு எதிரான சதியில் ஈடுபட்டுள்ளதாக சந்தேகம் எழுந்துள்ளது.

பொதுஜன பெரமுனவில் இருந்து இணைந்துள்ள குழுவினால் மாத்திரம் ஜனாதிபதித் தேர்தலை நிர்வகிக்க முடியாது. அதற்குத் தேவையான ஆதரவை ஐக்கிய தேசியக் கட்சியும் பெற்றுக் கொடுக்க வேண்டும்."என்றும் அவர் கூறியுள்ளார். (அ)

## ஐ. நா. மனித உரிமைகள்... (11ம் பக்கத் தொடர்ச்சி)

தமது கட்சிக்கு கிடைத்த தேசிய பட்டியலிலான பாராளுமன்ற உறுப்பினர் பதவியை, கிழக்கில் உள்ளவர்களிற்கு கொடுக்காது, தமது இளைப்பாறும் சம்பளத்தை அதிகரிப்பதற்காக, தேசிய பட்டியலிலான பதவியை, கிழக்கு வாழ் மக்களை அவமதித்து பறித்தவர்கள் இவர்கள். இவர்களிற்கு பதவி மோகமில்லாவிடில், இன்றும் ராஜிநாமா செய்து அப்பதவியை கிழக்கில் உள்ள ஒருவருக்கு கொடுப்பதற்கு முன்வர வேண்டும்.

தெற்கின் பல அரசியல் தலைவர்களுக்காக வக்கா லத்து வாங்கிய முஸ்லிம் தலைவர் ஹாக்கீம், தற்பொழுது சஜித் பிரமதாசவின் பிரசார வேலைகளில் ஈடுபடுவதை பார்க்கும் பொழுது, இவர் மிக திறமை வாய்ந்த நகைசுவை நடிகராக காணப்படுகிறார். அரசியல் பேசும் முன், ஹக்கீம், இலங்கைதீவின் சரித்திரத்தை ஒழுங்காக கற்கவேண்டும். தெரியாத விடயங்களில் அலட்டுவது இவருக்கு நல்லதல்ல.

ஹக்கீமிற்கும், ஜீ. எல். பீரிஸிற்கும் இடையில் பாரிய ஒற்றுமை காணப்படுகிறது. தெற்கில் ஜே.வி.பி. தவிர்ந்த மற்றைய பிரபலமான கட்சிகளிற்குள், இவர்கள் இருவரும் பங்களித்துள்ளார்கள். அடுத்து இவர்கள் இருவரும், இணையகூடிய கட்சியாக ஜே.வி.பி. மட்டுமே உள்ளது. எதிர்வரும் காலங்களில் அங்கும் இருவரும் இணைவார்கள் என்பது எனது ஆரூடம்.

இன அழிப்பை மேற்கொண்ட மகிந்த ராஜபக்ஷவின் கட்சியில், தேர்தலில் படுதோல்வி அடைந்த, திரு மஞ்சள் ரைகாரனும், 2009ஆம் ஆண்டிற்கு பின்னர் 'நெய்குடம் உடைந்தது நாய்க்கு வேட்டை'யென தமிழ் அரசியலிற்கு புகுந்த, திரு எக்கிய ராஜ்ஜியமும் முன்பு சிங்கள தேசியத்திற்காக உழைத்தவர்கள். இருவருக்கும், தமிழ் பொது ஜனதிபதி வேட்பாளரின் அருமை எப்படி விளங்கும்?

2022முதல் பொருளாதார நெருக்கடிக்குள் சிக்கியுள்ள சிங்கள - பௌத்த, அரசுகளை மீட்பது மட்டுமே இவர்களது சிந்தனையாக காணப்படுகிறது. இப்படியான பெயர்வழிகள், வடக்கு - கிழக்கு வாழ் மக்களின் வாக்குகளினால் பாரளுமன்ற தேர்தலில் வெற்றி பெறுவதற்கு எந்த அருகதையும் அற்றவர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# வேட்பாளர்களின் நேரடி விவாதம் ஒருவர் மட்டுமே நேற்று பங்கேற்பு

## முக்கிய வேட்பாளர்கள் பங்கேற்கவில்லை

கொழும்பு, செப். 08

**21ஆம் திகதி நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் ஜனாதிபதி வேட்பாளர்கள் பங்குபற்கும் நேரடி விவாதம் நேற்று நடைபெற்றிருந்தது. இருப்பினும், விவாதத்தில் ஒரு வேட்பாளர் மட்டுமே கலந்து கொண்டார்.**

மார்ச் 12 இயக்கத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த விவாதம் கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நேற்று நடைபெற்றது.

ஜனாதிபதி வேட்பாளர்களான சஜித் பிரேமதாஸ, திலித் ஜயவீர, மற்றும் நாமல் ராஜபக்ஷ, பா.அரியநேத்திரன் உள்ளிட்டவர்கள் பங்கேற்பார்கள் என அறிவிக்கப்பட்டிருந்தபோதும் திலித் ஜயவீர மாத்திரமே நேற்றைய விவாதத்தில் கலந்து கொண்டார்.

மார்ச் 12 இயக்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட நேரடி விவாதத்தில் ஜனாதிபதி வேட்பாளர்களான ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் தேசிய மக்கள் சக்தியின் அநுரகுமார திஸநாயக்க பங்கேற்கமாட்டார்கள் என அறிவிக்கப்பட்டிருந்தது.

2024ஆம் ஆண்டிற்கான ஜனாதிபதி தேர்தலில் 38 வேட்பாளர்கள் போட்டியிடுகின்ற நிலையில் நேற்றைய விவாதத்தில் 16 வேட்பாளர்கள் மாத்திரமே பங்கேற்பதாக உறுதியளித்திருந்தபோதும் நேற்று ஒருவர் மட்டுமே கலந்து கொண்டதுடன் இன்றும் நிகழ்வு இடம்பெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# தமிழ் பொது வேட்பாளர் வவுனியாவில் பிரசாரம்



யாழ்ப்பாணம், செப். 08

ஜனாதிபதி தேர்தலிலே போட்டியிடும் தமிழ் பொது வேட்பாளர் பா.அரியநேந்திரன் தலைமையில் வவுனியாவில் தேர்தல் பிரசார நடவடிக்கை நேற்று முன்னெடுக்கப்பட்டது.

குறித்த தேர்தல் பிரசாரம் நமக்காக நாம் என்ற தொனிப்பொருளை முன்னிறுத்தி பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரை முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. (அ)

# ஜனவரி மாதம் முதல் இதுவரை 37233 டெங்கு நோயாளர் பதிவு

கொழும்பு, செப். 08

இந்த வருடத்தின் இதுவரையான காலப்பகுதி வரை 37 ஆயிரத்து 233 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர் என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இதனால், டெங்கு நுளம்பு பெருகுவதைத் தடுக்கும் வகையில் மக்கள் சுற்றுச் சூழலை சுத்தமாக வைத்திருக்க வேண்டும் என வலியுறுத்தப்பட்டுள்ளது.

மேல் மாகாணத்திலேயே, அதிகளவான டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர்.

15 ஆயிரத்து 490 நோயாளர்கள் பதிவாகியுள்ளனர்.

இந்த வருடத்தின் இதுவரையான காலப்பகுதி வரை, 17 டெங்கு மரணங்கள் பதிவாகியுள்ளன என சுகாதார அமைச்சு குறிப்பிட்டுள்ளது. (அ)

# போதிய நெல் கிடைக்கவில்லை!

கொழும்பு, செப். 08

விவசாயிகள் நெல் அறுவடைகளை போதியளவு தமது சபைக்கு விற்பனை செய்வதில்லை என நெல் சந்தைப்படுத்தல் சபை தெரிவித்துள்ளது.

இந்த வருடத்திற்கான நெல் கொள்வனவுக்காக 600 மில்லியன் ரூபாவை வழங்க அமைச்சர்கள் சபை தீர்மானித்ததுடன், அதில் 500 மில்லியன் ரூபாய் நெல் சந்தைப்படுத்தல் சபைக்கு வழங்கப்பட்டுள்ளது.

நெல் சந்தைப்படுத்தல் சபைக்கு சொந்தமான 36 நெல் களஞ்சியசாலைகளுக்கு நெல் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக நெல் சந்தைப்படுத்தல் சபை தெரிவித்துள்ளது. (அ)

# செல்வேரி குடிதண்ணீர் திட்டம் நேற்று மக்களின் பாவனைக்கு

மன்னார், செப். 08


மன்னார் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட செல்வேரி குடிதண்ணீர் திட்டம் நேற்று வைபவ ரீதியாக ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

மன்னார்- தலைமன்னார் பிரதான வீதி, செல்வேரி கிராமத்தில் உள்ள மக்களின் குடிதண்ணீர் தேவையை பூர்த்தி செய்யும் வகையில் அமைக்கப்பட்ட செல்வேரி சுத்திகரிக்கப்பட்ட குடிதண்ணீர் திறந்து வைக்கப்பட்டது.

நீண்ட காலமாக குடிதண்ணீர் பெறுவதில், மக்கள் பல்வேறு சவால்களை எதிர்கொண்டு வந்த நிலையில், மக்களின் கோரிக்கைக்கு அமைவாக இராணுவத்தின் 54 ஆவது காலாட் படையின் ஒழுங்கமைப்பில் குடிதண்ணீர் திட்டம் அமைக்கப்பட்டு திறந்து வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில், மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் க.கனகேஸ்வரன், இராணுவத்தின் வன்னி பிராந்திய கட்டளையிடும் தளபதி மேஜர் ஜெனரல் பீரிஸ் மற்றும் 54 காலாட் படை பிரிவு பொறுப்பதிகாரி மேஜர் ஜெனரல் ராஜபக்ஷ உள்ளிட்ட பலர் பங்கேற்றனர். (அ)

# பேசாலை கடற்பகுதியில் 188 கிலோ கஞ்சா மீட்பு!



மன்னார், செப். 08

மன்னார் பேசாலைக்கு அப்பால் கடற்படையினர் மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கையில் 188 கிலோ கேரள கஞ்சா நேற்றுமுன்தினம் கைப்பற்றப்பட்டது.

கைப்பற்றப்பட்ட கேரள கஞ்சாவின் மொத்தத் தொகை 75 மில்லியன் ரூபாய் என்பதுடன், சட்ட நடவடிக்கைகளுக்காக பேசாலை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டது. 2024ஆம் ஆண்டின் இதுவரையான காலப்பகுதியில், கடற்படை மற்றும் கடலோர காவல்படையினர் மொத்தம் சுமார் 1242 கிலோகிராம் கஞ்சாவை கைப்பற்றியுள்ளதுடன், அவை அனைத்தும் அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# தபால் மூல வாக்களிப்பு 80 சதவீதம் நிறைவடைவு

கொழும்பு, செப். 08

ஜனாதிபதித் தேர்தலுக்கான தபால் மூல வாக்களிப்பு, 80 சதவீதம் நிறைவடைந்துள்ளதாகவும் உத்தியோக பூர்வமாக வாக்காளர் அட்டைகளை விநியோகிக்கும் பணி 30 சதவீதம் நிறைவடைந்துள்ளதாகவும் பிரதி தபால் மாஅதிபர் ராஜித கே.ரணசிங்க தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி தேர்தலுக்கான தபால் மூல வாக்களிப்பு, கடந்த 4 ஆம் திகதி முதல் நேற்று முன் தினம் வரை இடம்பெற்றிருந்தது.

குறித்த தினங்களில் தபால் மூல வாக்குகளை செலுத்தத் தவறியவர்களுக்கு எதிர்வரும் 11ஆம் மற்றும் 12ஆம் திகதிகள் மேலதிக தினங்களாக ஒதுக்கப்பட்டுள்ளன. 11ஆம் மற்றும் 12ஆம் திகதிகளில் வாக்களிப்பவர்கள் தாங்கள் கடமையாற்றும் மாவட்டங்களின் மாவட்ட செயலகங்களில் அமைக்கப்பட்டுள்ள விசேட வாக்களிப்பு நிலையங்களில் வாக்களிக்க வேண்டும் என தேர்தல்கள் ஆணைக்குழு அறிவுறுத்தியுள்ளது.

இதேவேளை, ஜனாதிபதித் தேர்தலில் தபால் மூல வாக்குகள் இடம்பெற்ற தினங்களில் பாரதூரமான சம்பவங்கள் எதுவும் பதிவாகவில்லை என தேர்தல் கண்காணிப்பு அமைப்புக்கள் தெரிவித்துள்ளன. (அ)

# 65 இலட்சம் வீடுகளுக்கு இன்று வாக்காளர் அட்டை விநியோகம்

கொழும்பு, செப். 08

நேற்று முன் தினம் வரை 35 இலட்சம் தேர்தல் வாக்காளர் அட்டைகள் விநியோகிக்கப்பட்டுள்ளதாக பிரதி அஞ்சல் மா அதிபர் ராஜித ரணசிங்க தெரிவித்துள்ளார்.

மேலும் 65 இலட்சம் வீடுகளுக்கு இன்று வாக்காளர் அட்டைகள் விநியோகிக்கப்படும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

இன்று ஞாயிற்றுக்கிழமை வாக்காளர் அட்டைகளை விநியோகிப்பதற்கான விசேட தினமாக அறிவிக்கப்பட்டிருந்ததுடன் எதிர்வரும் 14ஆம் திகதி வரை வீடுகளுக்கு வாக்காளர் அட்டைகள் விநியோகிக்கப்படும் என அஞ்சல் திணைக்களம் தெரிவித்துள்ளது. (அ)

# 1707 முறைப்பாடுகளுக்கு தீர்வு வழங்குவதற்கு நடவடிக்கை!

கொழும்பு, செப். 08

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பாக கிடைத்துள்ள 1707 முறைபாடுகளுக்கு தீர்வு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இவற்றில் 753 முறைபாடுகள் குறித்து நடவடிக்கை எடுத்துவருவதாக ஆணைக்குழு கூறியுள்ளது.

2024 ஜனாதிபதித் தேர்தலுடன் தொடர்புடைய 2460 முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக தேர்தல் ஆணைக்குழு குறிப்பிடுகின்றது.

இவற்றில் தேர்தல் சட்டமீறல்கள் தொடர்பில் 2387 முறைப்பாடுகள் பதிவாகியுள்ளன. (அ)

# வாக்குச் சாவடிகளில் கலவரம் செய்வோர் மீது துப்பாக்கிச்சூடு நடத்த பொலிஸாருக்கு அனுமதி

கொழும்பு, செப். 08

எதிர்வரும் 21ஆம் திகதி நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலின்போது வாக்குச்சாவடிகளில் இடையூறு விளைவிப்பவர்கள் மற்றும் கலவரங்களில் ஈடுபடுபவர்கள் மீது துப்பாக்கிச் சூடு நடத்த பொலிஸாருக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

மேலும், வாக்குச்சாவடிகளில் இடையூறு விளைவிப்பவர்கள் மற்றும் கலவரங்களில் ஈடுபடுபவர்களை உடனடியாக கைது செய்யுமாறு தேர்தல் ஆணைக்குழு பொலிஸாருக்கு அறிவுறுத்தியுள்ளது.

ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் நாடளாவிய ரீதியில் விசேட சுற்றிவளைப்புகளை மேற்கொண்டு சட்டவிரோத துப்பாக்கிகளை வைத்திருப்பவர்கள் மற்றும் பாதாள உலகக் கூட்டத்தினரை கைது செய்ய நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

இதற்காக விசேட குழுக்களும் நியமிக்கப்படவுள்ளதாக பாதுகாப்பு அமைச்சின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதித் தேர்தலில் வாக்களிப்பதற்கு தகுதிபெற்ற வாக்காளர்களின் மொத்த எண்ணிக்கை ஒரு கோடியே 70 இலட்சம் எனவும் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் வாக்களிப்பதற்கு சுமார் 10 இலட்சம் புதிய வாக்காளர்கள் இணைந்துள்ளனர் எனவும் தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 08.09.2023 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.